# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs – June 2021(Tamil)

© **Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்


வரலாறு 01

24 அரசியல் அறிவியல்

புவியியல் 27




28 பொருளாதாரம்

அறிவியல் 35




தினசரி
தேசிய நிகழ்வு 41



59 சர்வதேச நிகழ்வு




தமிழ்நாடு 66

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மே 31 | உலக புகையிலை ஒழிப்பு தினம் | ▪ 2021ன் மையக்கருத்து – "Commit to quit." |
| ஜுன் 1 | உலக பால் தினம் | ▪ 2021ன் மையக்கருத்து – 'Sustainability in the Dairy Sector'. |
| ஜுன் 1 | உலக பெற்றோர் தினம் | ▪ 2021ன் மையக்கருத்து – 'Appreciate all parents throughout the world'. |
| | தெலுங்கானா மாநில தினம் | ▪ 2014ம் ஆண்டு ஆந்திர பிரதேச மாநில மறுசீரமைப்பு சட்டத்தின் மூலம் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டது.<br>▪ இந்தியாவின் 29வது மாநிலமாக தெலுங்கானா உருவாக்கப்பட்டது. |
| ஜுன் 3 | உலக மிதிவண்டி தினம் | ▪ உலக மிதிவண்டி தினம் ஆண்டுதோறும் ஜுன் 3–ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.<br>▪ இதையொட்டி, மிதிவண்டியை பயன்படுத்துவதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், புதுச்சேரி–தமிழக ஆழ்கடல் நீச்சல் வீரரான அரவிந்த், புதுச்சேரி கிழக்கு கடற்கரை பகுதியில் கடலுக்கு அடியில் மிதிவண்டி ஓட்டினார். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜுன் 6 | **உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம்** | ▪ உலக சுகாதார அமைப்பின் சுகாதார அசம்பிளி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 30ம் நாளை உலக புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள் தினமாக அறிவித்துள்ளது.<br>▪ 74வது கூட்டத்தில் உலக நாடுகளால் இது ஒப்புக்கொள்ளப்பட்டது.<br>▪ ஐக்கிய அரபு அமீரகத்தால் இந்த யோசனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |
| ஜுன் 6 | **உலக சுற்றுச்சூழல் தினம்** | ▪ உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, சென்னை ரயில்வே கோட்டத்தின் முக்கிய ரயில்நிலையங்களின் வளாகங்கள் உள்பட பல்வேறு இடங்களில் 2,500–க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. |
| ஜுன் 6 | **BIMSTEC தினம்** | ▪ Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation Day.<br>▪ வங்காள விரிகுடாவை சுற்றியுள்ள வங்கதேசம், இந்தியா, இலங்கை, தாய்லாந்து பொன்ற நாடுகளின் பொருளாதார தொழில்நுட்ப கூட்டணியை உருவாக்கும் நோக்கில் பிம்ஸ்டெக் அமைப்பு 1997ல் ஜுன் 6ல் தோற்றுவிக்கப்பட்டது.<br>▪ பின்னர் இந்த அமைப்பில் 1997 இறுதியில் பூடானும், 2004ல் நேபாளமும், பூடானும் இணைந்தது. |
| ஜுன் 7 | **உலக உணவு பாதுகாப்பு தினம்** | ▪ மையக்கருத்து – "Safe Food today for a healthy tomorrow". |
| ஜுன் 8 | **உலக பெருங்கடல் தினம்** | ▪ 2021–ம் ஆண்டின் மையக்கருத்து The Ocean: Life and Livelihoods. |
| ஜுன் 12 | **உலக குழந்தைத் தொழிலாளர் தினம்** | ▪ மையக்கருத்து – Act now: End child labour! |
| ஜுன் 14 | **உலக இரத்ததான தினம்** | ▪ உலக சுகாதார அமைப்பால் சர்வதேச ரெட்கிராஸ் அமைப்புடன் இணைந்து இந்த நாள் உலகம் முழுதும் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ ஸ்லோகன் – Give blood and keep the world beating.<br>▪ இத்தாலி (ரோம்) இந்த ஆண்டு 2021 தலைமையேற்று நடத்துகிறது. |
| ஜுன் 15 | **ஆசியான் டெங்கு தினம் 2021** | ▪ மையக்கருத்து – "ASEAN Unite Against Dengue Amidst COVID–19 Pandemic". |
| ஜுன் 18 | **நீடித்த சமையல்கலை தினம்** | ▪ 2019 டிசம்பர் 21 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் இந்த தினம் துவங்கப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூன் 19** | **தேசிய படிப்பதற்கான தினம்** | ▪ கேரளாவில் நூலக இயக்கங்களை முன்னெடுத்த P.N.பனிக்கரின் நினைவாக ஜூன்–19ல் தேசிய படிப்பதற்கான தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 2020ம் ஆண்டிற்கான தேசிய படிப்பதற்கான மாதம் பிரதமரால் துவங்கி வைக்கப்பட்டது. |
| **ஜூன் 20** | **உலக அகதிகள் தினம்** | ▪ 2021 மையக்கருத்து – Together we heal, learn and shine. |
| **ஜூன் 21** | **சர்வதேச யோகா தினம்** | ▪ மையக்கருத்து – 'Yoga for well–being'. |
| **ஜூன் 21** | **உலக இசை தினம்** | |
| **ஜூன் 23** | **சர்வதேச ஒலிம்பிக் தினம்** | ▪ 2021 ஒலிம்பிக் தினத்தின் மையக்கருத்து – "Stay healthy, stay strong, stay active with the #OlympicDay workout on 23 June." |
| **ஜூன் 27** | **சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் தினம்** | ▪ 2021 ஆண்டின் மையக்கருத்து – "MSME 2021: key to an inclusive and sustainable recovery." |
| **ஜூன் 29** | **தேசிய புள்ளியியல் தினம்** | ▪ தேசிய புள்ளியியலின் தந்தை Dr.P.C.மகளநோபிஸ் அவர்களின் பிறந்த தினம் தேசிய புள்ளியியல் தினமாக ஜூன் 29ல் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ நீடித்த வளர்ச்சி இலக்குகளில் 2வது இலக்கை அடைவதை நோக்கமாக கொண்டு மையக்கருத்து உருவாக்கப்பட்டுள்ளது.<br>▪ End Hunger, Achieve Food Security and Improved Nutrition and Promote Sustainable Agriculture. |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## ரூ.43,000 கோடியில் 6 நீர்மூழ்கிக் கப்பல்கள்

- இந்திய கடற்படைக்காக 6 நீர்மூழ்கிக் கப்பல்களை ரூ.43,000 கோடியில் உள்நாட்டிலேயே கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தென்சீனக் கடல் உள்ளிட்ட பகுதிகளில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், இந்திய கடற்படையை வலுப்படுத்தும் நோக்கில் இந்த ஒப்புதலை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் கவுன்சில் கூட்டம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இந்திய கடற்படையின் வலிமையை மேம்படுத்தும் நோக்கில் "பி–75 இந்தியா" என்ற திட்டத்தில் கீழ் 6 நீர்மூழ்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சுமார் ரூ.43,000 கோடி செலவிடப்படும்.
- நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டும் பணிகளில் உள்நாட்டு நிறுவனங்கள் பெரும் பங்களிப்பை வழங்க உள்ளன.
- வெளிநாடுகளைச் சேர்ந்த பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிப்பு நிறுவனங்களின் உதவியும் பெறப்படவுள்ளது. "இந்தியாவில் தாயரிப்போம்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள மிகப்பெரிய திட்டமாக இது இருக்கும்.
- உள்நாட்டுத் தொழில்நுட்பங்களைத் திறம்படப் பயன்படுத்தவும், நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுமானத்தில் இந்தியாவை முன்னிற்கச் செய்யவும் இத்திட்டம் பெரிதும் உதவும்.
- தற்சார்பு வலுப்படும்: வரலாற்றுக் சிறப்புமிக்க இத்திட்டமானது தற்போதைய இறக்குமதிகளைப் பெருமளவில் குறைப்பதோடு, வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் சூழலையும் குறைக்கும். உள்நாட்டு தளவாடங்களைப் பயன்படுத்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படவுள்ளதால், தற்சார்புத் தன்மை மேலும் வலுப்படும்.
- நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பு, கட்டுமானத்தில் தன்னிறைவு காண வேண்டும் என்று 30 ஆண்டுகளுக்கு முன்பே இந்திய அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது. அந்தக் கனவு நனவாவதற்கான சூழல் தற்போது உருவாகியுள்ளது.
- ரூ.6,800 கோடி மதிப்பிலான பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்யவும் கூட்டத்தின் போது ஒப்புதல் அளிக்கப்பட்டது. பாதுகாப்புத் தளவாடங்களை அவசரகால அடிப்படையில் கொள்முதல் செய்வதற்காக ஆயுதப் படைகளுக்கு அளிக்கப்பட்டிருந்த கால அவகாசம் வரும் ஆகஸ்ட் 31–ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சதாயக் கப்பற்படை கப்பல்

- நீர் பகுதிகளை அளவிடும் இந்திய கப்பற்படையின் கப்பல் 40 ஆண்டுகள் பன்பாட்டிற்கு பிறகு விலக்கிக் கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தன்னுடைய பனிக்காலத்தில் 200க்கும் மேற்பட்ட நீர்பரப்பு கணக்கீடுகளை வெற்றிகரமாக இந்த கப்பல் முடித்துள்ளது.

## இந்தியா–தாய்லாந்து கடற்படைகள் கூட்டு ரோந்து

- அந்தமான் கடல் பகுதியில் இந்தியா–தாய்லாந்து கடற்படைகளின் மூன்று நாள் கூட்டு ரோந்து நடவடிக்கை தொடங்கியது.
- இந்திய கடல் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், பிராந்திய கடல் பகுதி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து க்வாட் கூட்டமைப்பை உருவாக்கி, இந்தியப் பெருங்கடல் பகுதியில் கூட்டு போர் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

## இந்திய கடலோரக் காவல் படையில் எம்கே–3 அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர்கள் சேர்ப்பு

- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர் எம்.கே–3 இந்திய கடலோரக் காவல் படையில் சேர்க்கப்பட்டது.
- பிரதமர் நரேந்திர மோடியின் தற்சார்பு இந்தியா எனும் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ்

உருவாக்கப்பட்டவை இந்த ஹெலிகாப்டர்கள். இந்த நவீன ஹெலிகாப்டர்களை பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுனம் உருவாக்கியுள்ளது.

- பாதுகாப்புத் துறைச் செயலர் அஜய்குமார், இந்த ஹெலிகாப்டர்களை கடலோரக் காவல் படையில் சேர்த்தார். கரோனா நெறி முறைகளைப் பின்பற்றி காணொலி முறையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அதில், அஜய்குமார் பேசியதாவது:
- நமது பிரதமரின் தொலைநோக்குப் பார்வையான இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஹெலிகாப்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சோதனையான தருணத்தில் இந்த ஹெலிகாப்டர்களை பணியில் ஈடுபடுத்தும் இந்திய கடலோரக் காவல்படை, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் விடாமுயற்சியைப் பராட்டுகிறேன்.
- இந்த உயர்தர இலகுரக ஹெலிகாப்டர்கள், இந்திய கடலோரக் காவல்படையின் அனைத்து விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளன என்றார் அவர்.

## இந்தியா–சீன எல்லையில் 12 சாலைகள் அமைப்பு

- இந்திய–சீன எல்லையில் 12 முக்கிய சாலைகளை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்திய, சீன எல்லைப் பகுதியில் சாலைகள் அமைப்பு உருவாக்கியுள்ளது. அவற்றில், அருணாசல பிரதேசத்தில் 10 சாலைகளும், லடாக், ஜம்மு–காஷ்மீரில் தலா ஒரு சாலையும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலைகளை பாதுகாப்புத் தறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- பிரதமர் மோடியின் கிழக்கு நோக்கிய செயல்பாடு என்றதொலைநோக்குபார்வையின்ஒருபகுதியாக, இந்தச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லைச் சாலைகள் அமைப்புக்கு கடந்த 2013–க்குப் பிறகு பலமடங்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்த அமைப்புக்கு தற்போது ரூ.11,000 கோடி ஒதுக்கப்பட்டள்ளது. கடந்த 2014–ஆம் ஆண்டுக்கப் பிறகு எல்லைப் பகுதியில் 4,800 கி.மீ. தொலைவுக்கு இந்த அமைப்பு சாலைகளை உருவாக்கியுள்ளது.

## இந்தியா–ஐரோப்பிய யூனியன் கடற்படை கூட்டுப் பயிற்சி

- கடற்கொள்ளை தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள இந்தியப் போர்க் கப்பல் ஐஎன்எஸ் த்ரிகண்ட், ஐரோப்பிய யூனியன் நாடுகளான ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் ஆகியவற்றின் கடற்படையுடன் இணைந்து போர்ப் பயிற்சியை தொடங்கியது. இந்த பயிற்சி ஏடன் வளைகுடா பகுதியில் இருநாள்கள் நடக்கிறது. இதில் 4 நாடுகளைச் சேர்ந்த 5 போர்க்கப்பல்கள் பங்கேற்றுள்ளன.
- இத்தாலி கடற்படை கப்பல் ஐடிஎஸ் கராபினெரி, ஸ்பெயின் கடற்படை கப்பல் இஎஸ்பிஎஸ் நவாரா, பிரான்ஸ் கடற்படையின் 2 போர்க் கப்பல்கள், எப்எஸ்டானெரி மற்றும் எப்எஸ்சர்கஃப் ஆகியவை இந்த பயிற்சியில் ஈடுபட்டு உள்ளன.

## 36 ரஃபேல் போர் விமானங்களும் 2022–க்குள் படையில் இணைக்கப்படும் விமானப் படை தலைமை தளபதி தகவல்

- இந்திய விமானப்படையில் 36 ரஃபேல் போர் விமானங்களும் அடுத்த ஆண்டுக்குள் இணைக்கப்படும் என்று விமானப் படையின் தலைமை தளபதி ஆர்.கே.எஸ்.பதௌரியா தெரிவித்துள்ளார்.
- 36 ரஃபேல் போர் விமானங்களை ரூ.59,000 கோடியில் வாங்குவதற்கு பிரான்ஸ் அரசுடன் கடந்த 2016–ஆம் ஆண்டில் மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதுவரை 21 போர் விமானங்கள் இந்தியாவுக்கு வந்தடைந்துள்ளன.

## INS ஷயாத்ரி

- பிலீட் விருதுகள் 2021ல் INS ஷயாத்ரி சிறந்த போர்க்கப்பல் என்ற விருதை பெற்றுள்ளது.
- INS கமார்தா சிறந்த ஊக்குமுடைய கப்பலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடல் பகுதியை மாசிலிருந்து காக்க இரு கப்பல்கள்: பாதுகாப்புத் துறை ஒப்பந்தம்

- மாசிலிருந்து இந்திய கடல் பகுதிகளைப் பாதுகாக்க ரூ.583 கோடியில் இரு கப்பல்களை வாங்க பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- கோவா ஷிப்யார்டு நிறுவனம் மூலம் வாங்கப்படும் இந்தக் கப்பல்கள் கடலோரக் காவல்படையிடம்

ஒப்படைக்கப்படும். 2024 நவம்பர் மற்றும் 2025 மே மாதங்களில் இந்தக் கப்பல்கள் கிடைக்கும். பெரிய கப்பல்களில் எடுத்துச் செல்லப்படும் எண்ணெய் உள்ளிட்ட பொருள்கள் எதிர்பாராதவிதமாக கடலில் சிந்துவதால், கடல் பகுதியில் பெரிய அளவில் மாசு ஏற்படுகிறது. அது போன்ற நேரங்களில் இந்தக் கப்பல்கள் மூலம் கடலில் கொட்டும் எண்ணெய் உள்ளிட்டவற்றை விரைவில் அகற்றிவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்த இரு கப்பல்களும் முழுவதும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுகின்றன. ஏற்கெனவே இந்திய கடற்படையிடம் இதுபோன்று 3 கப்பல்கள் உள்ளன.

## இந்தியா–அமெரிக்கா கூட்டு போர்ப் பயிற்சி

- இந்தியாவும், அமெரிக்காவும் இந்திய பெருங்கடல் பகுதியில் மிகப் பெரிய அளவிலான 2 நாள் கூட்டு போர்ப் பயிற்சி தொடங்கின.
- தென் சீன கடல் பகுதி மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளில் சீனா ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், அதன் மூலம் எழும் எந்தவிதமான சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் இந்த கடல் பிராந்திய பகுதிகளில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகள் கூட்டு போர்ப் பயிற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.
- அந்த வகையில், கேரள மாநிலம் திருவனந்தபுரத்துக்கு தெற்கே, இந்திய பெருங்கடலின் மேற்கு கடல் பகுதியில் இந்தியா–அமெரிக்கா நாடுகளிடையேயான இரண்டு நாள் போர்ப் பயிற்சி தொடங்கியது.
- அமெரிக்கா சார்பில் அணுசக்தியில் இயங்கக்கூடிய யுஎஸ்எஸ் 'ரொனால்ட்ரீகன்" விமானம் தாங்கி போர்க் கப்பல், எஃப்–18 ரக போர் விமானங்கள், தட்பவெப்பநிலைகளிலும் ஆபத்து குறித்து துல்லியமாக முன்னெச்சரிக்கை செய்யும் இ–2சி விமானம் ஆகியவை இந்த போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## பினாகா ராக்கெட் சோதனை வெற்றிகரம்: டிஆர்டிஓ

- இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட நீண்ட தூரம் சென்று தாக்கும் பினாகா ராக்கெட் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) வெற்றிகரமாக நடத்தியது.
- ஒடிஸா மாநிலம், பாலேசுவரம் மாவட்டத்தில் உள்ள சண்டீபூரில் வியாழன், வெள்ளிகிழமைகளில் மொத்தம் 25 பினாகா ராக்கெட்டுகளை ராக்கெட் ஏவுதள வாகனத்தில் இருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாக சோதனை நடத்தப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். நீட்டிக்கப்பட்ட தூரமான 45 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை துல்லியமாக இந்த ராக்கெட்டுகளை தாக்கின என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உள்நாட்டில் கட்டப்படும் முதல் விமானம் தாங்கிக் கப்பல் 2022–இல் படையில் சேர்க்கப்படும்

- உள்நாட்டிலேயே கட்டப்படும் முதலாவது விமானம் தாங்கிக் கப்பல் அடுத்த ஆண்டு கடற்படையில் இணைக்கப்படவுள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- விமானம் தாங்கி போர்க் கப்பல் கேரளத்தின் எர்ணாகுளத்தில் உள்ள கப்பல்கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வருகிறது. அக்கப்பலின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேரில் ஆய்வு செய்தார். அதையடுத்து, அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- நாட்டின் பெருமையைப் பறைசாற்றும் நோக்கிலும் தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் நோக்கிலும் விமானம் தாங்கி போர்க்கப்பல் உள்நாட்டிலேயே கட்டப்பட்டு வருகிறது. அக்கப்பலைக் கட்டுவதற்கான அனுமதி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசால் வழங்கப்பட்டது.
- கரோனா தொற்று பரவல் காலத்திலும் கப்பலைக் கட்டுவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.
- நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆனதற்கான கொண்டாட்டமானது அடுத்த ஆண்டில் நடைபெறும்போது, விமானம் தாங்கிக் கப்பல் படையில் சேர்க்கப்படும். அக்கப்பல் நாட்டின் பாதுகாப்பு வலிமையை மேலும் அதிகரிக்கும். கடற்சார் பாதுகாப்பு மேலும் வலுவடையும்.

# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

## ஐ.நா.சமூக–பொருளாதார கவுன்சில் உறுப்பினராக இந்தியா தேர்வு

- ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராக 3 ஆண்டுகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஐ.நா.வின் 6 முக்கிய அமைப்புகளில் சமூக–பொருளாதார கவுன்சிலும் ஒன்றாக உள்ளது. சமூகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய விவகாரங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அந்த கவுன்சில் மேற்கொண்டு வருகிறது.
- சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளையும் கவுன்சில் மேற்கொண்டு வருகிறது. ஐ.நா. சார்பில் நடைபெறும் மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும் கவுன்சில் கண்காணிக்கும். ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சிலில் 54 நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெற முடியும். பிராந்திய ரீதியாக நாடுகள் 3 ஆண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும்.
- ஆசிய கண்டத்தில் இருந்து 11 நாடுகளும், ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து 14 நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் இருந்து 6 நாடுகளும், தென் அமெரிக்க கண்டத்திலிருந்து 10 நாடுகளும், மற்ற பகுதிகளில் இருந்து 13 நாடுகளும் கவுன்சிலின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும்.
- ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சிலுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில், ஆசிய கண்டத்தில் இருந்து இந்தியா, ஆப்கானிஸ்தான், ஓமன், கஜகஸ்தான்ஆகியநாடுகள்தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்நாடுகள் 2022–ஆம் ஆண்டு முதல் 2024–ஆம் ஆண்டு வரை கவுன்சிலின் உறுப்பினர்களாகச் செயல்படவுள்ளன.
- ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து துனிசியா, மோரீஷஸ், எஸ்வதினி, தான்சானியா உள்ளிட்ட நாடுகளும், கிழக்க ஐரோப்பிய பகுதியில் இருந்து குரோஷியா, செக் குடியரசு ஆகிய நாடுகளும் தென் அமெரிக்க கண்டத்தில் இருந்து சிலி, பெரு உள்ளிட்ட நாடுகளும் ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

## ஐக்கிய நாடுகள் உயிர் கோள அமைப்பின் மறு உருவாக்கம் 2021–2031

- உலக சுற்றுச்சூழல் தினம் ஜுன் 5, 2021–ல் ஐக்கிய நாடுகள் சபை 10 ஆண்டுகளில் உயிர் கோள அமைப்பின் உருவாக்கம் என்ற திட்டத்தை துவங்கியுள்ளது. இந்த திட்டத்தை ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் உணவு வேளாண்மை அமைப்பு (FAO) முன்னெடுக்கின்றது.
- 2019 ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் உலகின் சுற்றுச் சூழலை நீடித்த நிலையான அளவில் கொண்டு செல்வதற்காக இந்த திட்டம் 2019–ல் முன்மொழியப்பட்டது.

## ஜி7 உச்சி மாநாடு: பிரதமர் பங்கேற்பு

- பிரதமர் நரேந்திர மோடி காணொலி முறையில் பங்கேற்கிறார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனின் அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் மோடி கலந்து கொண்டார்.
- ஜி7 நாடுகள் அமைப்புக்கு தற்பொது பிரிட்டன் தலைமையேற்றுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை விருந்தினர்களாக ஜி7 உச்சி மாநாட்டுக்கு பிரிட்டன் பிரதமர் அழைத்துள்ளார்.
- "சிறப்பான முறையில் மீண்டும் கட்டமைப்போம்" என்பது இந்த உச்சி மாநாட்டின் மையப் பொருளாகும். கரோனாவில் இருந்து சர்வதேச அளவில் மீண்டு வருங்காலத்தில் பெருந்தொற்றுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்; சுதந்திரமான மற்றும் நியாயமான சர்வதேச வர்த்தகத்துக்கு ஆதரவளித்து எதிர்கால வளத்தை ஊக்குப்படுத்துதல்; பருவ நிலை மாற்றத்தை திறம்பட எதிர்கொண்டு பூமியின் பல்லுயிர்ப் பெருக்கத்தை காத்தல்; மற்றும் சர்வதேச அளவில் பகிர்ந்து கொள்ளும் மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படையான சமூகங்களை ஊக்குவித்தல் ஆகிய நான்கு கருத்துகளை முன்னிலைப்படுத்தி உச்சி மாநாட்டு ஆலோசனைகளை பிரிட்டன் வகுத்துள்ளது.

## ஜி7 உச்சி மாநாடு தொடக்கம்

- ஜி7 நாடுகளின் உச்சி மாநாட்டை பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தொடக்கி வைத்தார்.
- அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் இடம்பெற்றுள்ள ஜி7 நாடுகளின் உச்சி மாநாடு பிரிட்டனில் உள்ள கார்ன்வால் நகரில் ஜூன் 11 முதல் 13–ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த மாநாட்டை பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தொடக்கி வைத்தார்.

## ஏழை நாடுகளுக்கு 100 கோடி கரோனா தடுப்பூசிகள்

- ஏழை நாடுகளுக்கு 2022–ஆம் ஆண்டுக்குள் 100 கோடி கரோனா தடுப்பூசிகளை வழங்கி உதவ உலகின் மிகப் பெரிய பணக்கார நாடுகளின் கூட்டமைப்பான ஜி–7 மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து பிரிட்டனில் அந்த மாநாட்டை நடத்திய அந்த நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜான்ஸன் கூறியதாவது: பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு 100 கோடி கரோனா தடுப்பூசிகளை வழங்கி உதவுவதாக ஜி–7 மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உறுதிமொழி அளித்துள்ளார்கள். ஏழை நாடுகளுக்கு நேரடியாக தடுப்பூசிகளை வழங்குவதன் மூலமோ, எல்லா தரப்பினருக்கும் பாரபட்சமின்றி கரோனா தடுப்பூசிகள் சென்று சேர்வதற்காக ஐ.நா. செயல்படுத்தி வரும் கோவாக்ஸ் திட்டத்தின் மூலமாகவோ இந்த உதவியை ஜி–7 உறுப்பு நாடுகள் செய்யவுள்ளன. இந்த முடிவின் ஒரு பகுதியாக, பிரிட்டனும் 10 கோடி கரோனா தடுப்பூசிகளை உலகின் மிக ஏழ்மையான நாடுகளுக்கு வழங்கி உதவும். ஜி7 மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன இந்த முடிவு, கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உலகம் முழுவதும் வசிக்கும் மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான நோக்கத்தை அடைவதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாகும்.
- இதில் பிரிட்டனில் உருவாக்கப்பட்ட ஆக்ஸ்ஃபோர்டு–அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. (இந்தியாவில் இந்தத் தடுப்பசியை "கோவேக்ஸின்" என்ற பெயரில் சீரம் நிறுவனம் தயாரித்து வருகிறது). அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு தான், தற்போது உலகில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கரோனா அபாயத்திலிருந்து பாதுகாப்பு பெற்றுள்ளனர்.

## கோவேக்ஸ் திட்டம் இந்திய அரசுடன் இணைந்து மீண்டும் தொடங்க நடவடிக்கை: உலக சுகாதார அமைப்பு

- இந்திய அரசு, அஸ்ட்ராஸெனகா மற்றும் சீரம் இந்தியா மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் இணைந்து பிற நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகளை அனுப்பி வைக்கும் பணிகளை மீண்டும் தொடங்குவதற்கு விரைந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் "கோவேக்ஸ்" திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் கொண்ட நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்துக்கு அஸ்ட்ராஸெனகா நிறுவனத்தின் கோவிஷீல்ட் தடுப்பூசிகளை உற்பத்தி செய்து வழங்குவதில் சீரம் நிறுவனம் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இந்தியாவில் கரோனா தொற்றின் இரண்டாம் அலை உருவானதைத் தொடர்ந்து அந்தப் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## பசுமை ஹைட்ரஜன் பிரிக்ஸ் நாடுகள் உச்சிமாநாடு

- பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் குறித்து 2 நாள்கள் நடைபெறும் உச்சிமாநாட்டை பிரிக்ஸ் நாடுகளுடன் இணைந்து இந்தியா நடத்தவுள்ளது.
- மின்பகுப்பு முறையில் (எலெக்ட்ரோசிஸ்) காற்று அல்லது சூரிய மின்சக்தி மூலம் தண்ணீரில் உள்ள ஆக்சிஜன் மற்றும் ஹைட்ரஜனை பிரித்து உற்பத்தி செய்யப்படுவதுதான் பசுமை ஹைட்ரஜன்.
- அதனை தங்கள் வளம் மற்றும் பலம் அடிப்படையில் பயன்படுத்துவது குறித்து பல நாடுகள் உத்திகளையும் திட்டங்களையும் வகுத்துள்ளன.
- இந்நிலையில் பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் குறித்து நடைபெறும் உச்சிமாநாட்டை பிரிக்ஸ் நாடுகள் சார்பாக இந்தியா நடத்தவுள்ளது.
- ஜூன் 22–ஆம் தேதி முதல் 2 நாள்கள் காணொலி வழியாக நடைபெறும் இந்த மாநாட்டில் பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.
- இந்த மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் நிபுணர்கள் கலந்து கொண்டு எதிர்காலத்தில் எரிசக்தியில் ஹைட்ரஸனை கலப்பது குறித்தும் விரிவாக ஆலோசிக்கவுள்ளனர்.

# 1.4 சிறந்த நபர்கள்

## எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்த சீனாவை சேர்ந்த பார்வையற்ற வீரர்

- எவரெஸ்ட் மலையின் மீது ஏறி சாதனை படைத்துள்ளார் சீனாவை சேர்ந்த பார்வையற்ற மலையேற்ற வீரர். எவரெஸ்டில் ஏறிய ஆசியாவை சேர்ந்த முதல் பார்வையற்றவர், உலகின் மூன்றாவது பார்வையற்றவர் என்கிற சாதனையையும் அவர் சொந்தமாக்கியுள்ளார்.
- ஏழு கண்டங்களிலும் உள்ள உயரமான மலைச்சிகரங்களில் ஏறவும், பின்னர், வட, தென் துருவங்களுக்குப் பயணம் செல்லவும் விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.
- சீனாவை சேர்ந்தவர் ஷாங் காங், பார்வையற்றவரான இவர், மலையேறும் வழிகாட்டிகளுடன் எவரெஸ்ட் மலை மீது ஏறத் தொடங்கி, கடந்த மே 24–ஆம் தேதி உச்சியை அடைந்தார். பின்னர் பாதுகாப்பாக காத்மாண்டு திரும்பினார்.

## டெல்டா வகை கரோனா பாதிப்பு

- தில்லியில் தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு பாதிப்புக்குள்ளான நோயாளிகள் டெல்டா வகை கரோனாவால் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட மக்களுள் 8% கப்பாவிலும் 76% டெல்டா வகை பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகழ்பெற்ற குத்துச்சண்டை நடசத்திரம்: திங்கோ

- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்த ஆசிய கோப்பையில் தங்கப்பதக்கம் பெற்ற குத்துச் சண்டை வீரர் திங்கோ காலமானார்.

## கன்னட இலக்கியவாதி சித்தலிங்கையா காலாமானார்

- கன்னட இலக்கியவாதி சித்தலிங்கையா கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.
- கன்னட இலக்கிய உலகில் புகழ்பெற்ற விளங்கிய சித்தலிங்கையா கரோனாவால் பாதிக்கப்பட்டு, பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த ஒருமாத காலமாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் அவர் உயரிழந்தார்.
- கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், தாழ்த்தப்பட்டோர் செயற்பாட்டாளர் என்ற பன்முகம் கொண்ட இலக்கியவாதியான சித்தலிங்கையா, "தாழ்த்தப்பட்டோரின் முழக்கம்" என்று அழைக்கப்பட்டார். தலித் சங்கர்ஷ சமிதி (தாழ்த்தப்பட்டோர் போராட்ட அமைப்பு) என்ற அமைப்பை நிறுவியவர்களில் சித்தலிங்கையாவும் ஒருவர்.
- "ஹொளேமதிகர ஹாடு", "சாவிராரு நதிகளு", "கப்பு காதின ஹாடு", "மெரவனிகே" உள்ளிட்ட புகழ்பெற்ற கன்னட இலக்கியங்களைப் படைத்தவர். "பஞ்சமா", "ஏகலைவா" உள்ளிட்ட நாடகங்களையம் எழுதியவர்.
- இவர் எழுதிய "கிராம தேவதேகளு" என்ற கட்டுரைத் தொகுப்பு மிகவும் பிரபலமடைந்தது. இவர் எழுதிய பெரும்பாலான இலக்கியங்கள் ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. சொந்த வாழ்க்கை வரலாறான "ஊரு கேரி' என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

## ராமகிருஷ்ண மடம் துணைத் தலைவர் சுவாமி சிவமயானந்தா காலமானார்

- ராமகிருஷ்ணா மிஷன் அமைப்பின் துணைத் தலைவர் சுவாமி மிஷன் அமைப்பின் துணைத் தலைவர் சுவாமி சிவமயானந்தா காலமானார்.
- ராமகிருஷ்ண மடத்தின் அறங்காவலர், ராமகிருஷ்ணா மிஷன் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர், சாரதா பீடத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை அவர் வகித்து வந்தார். பிகாரைப் பூர்விகமாகக் கொண்ட அவர் தனது 25–ஆம் வயதில் பேலூர் மடத்துக்கு வந்தார். 1969–இல் சந்நியாச தீட்சை பெற்று துறவறம் மேற்கொண்டார்.
- பேலூர் மடம், சர்கச்சி, கத்திஹார் மையங்களிலும் அவர் சேவையாற்றியுள்ளார். ராமகிருஷ்ணா மிஷன் சர்கச்சியில் நடத்தி வந்த பள்ளியின் தலைமை ஆசிரியர், விவேகானந்தா நூற்றாண்டு நினைவுக் கல்லூரி, சாரதா பீடத்தின் வித்யாமந்திரா கல்லூரி ஆகியவற்றின் முதல்வராக இருந்துள்ளார்.

## சுற்றுசூழலியலாளர் ராதா மோகன்

- பத்ம ஸ்ரீ விருது பெற்ற பொருளாதார மற்றும் சுற்றுச்சூழலியல் பேராசிரியர் ராதா மோகன் காலமானார்.

- ஒடிசா மாநில தகவல் ஆணையராக பணிபுரிந்தவர்.
- விவசாய துறையில் செய்த சாதனைகளுக்காக இவருக்கு இவரது மகளுக்கும் 2020ல் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

## தடகள ஜாம்பாவான் மில்கா சிங் மறைவு

- கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்திய தடகள ஜாம்பாவான் மில்கா சிங் உயிரிழந்தார்.
- மில்கா சிங்குக்கு கடந்த மாதம் கரோனா தொற்று ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, பஞ்சாப் மாநிலம், மொஹாலியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர், சண்டீகரில் உள்ள முதுநிலை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலைய மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் கடந்த ஜுன் 3–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சையை தொடர்ந்து அவருக்கு கரோனா தொற்று இல்லை என கடந்த பரிசோதனையில் தெரிய வந்தது. இதையடுத்து, அதே மருத்துவமனையில் பொது சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். பின்னர் அவரது உடல்நிலை மோசமடைந்து, உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். மில்கா சிங்கின் 85 வயது மனைவியும் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

## மாவ்யா சூடான் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திலிருந்து முதல் பெண் விமானப்படை விமானி

- ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் ரஜவுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாயா சூடான் விமானப்படையில் ஜம்மு–காஷ்மீரிலிருந்து இணைந்த முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- விமானப்படையில் இணைந்துள்ள 12வது பெண் இவராவார்.

## ஷெலி –ஆன் பிரேசர் உலகின் இரண்டாவது வேகமான பெண்

- ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த ஷெலி–ஆண் பிரேசர் டிரிசி ஒலிம்பிக் தகுதி 1000 மீட்டர் ஓட்டத்தை 10.63 வினாடிகளில் கடந்து உலகின் இரண்டாவது வேகமான பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.
- கிரிபித் ஜோனர் (10.62) என்ற சாதனையை 1988ல் ஏற்படுத்தினார்.

## 'ஆன்டிவைரஸ்"களின் முன்னோடி மெக்க.ஃபீ சிறையில் தற்கொலை

- கணினி நச்சுநிரல்களை (கம்யூட்டர் வைரஸ்) தடுத்து நிறுவத்துவதற்கான பாதுகாப்பு மென்பொருள்களின் முன்னோடி எனக் கூறப்படும் ஜான் மெக்க.ஃபீ, ஸ்பெயின் சிறையில் தற்கொலை செய்துகொண்டார்.
- பிரிட்டனில் பிறந்த அமெரிக்கரான ஜான் மெக்க.ஃபீ வர்த்தக ரீதியிலான நச்சுநிரல் பாதுகாப்பு மென்பொருளை முதல்முறையாக கடந்த 1987–ஆம் ஆண்டில் உருவாக்கியவர். புகழ்பெற்ற மெக்க.ஃபீ மென்பொருள் நிறுவனத்தை உருவாக்கிய அவர், 1994–ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்திலிருந்து விலகினார்.

## "வி.பி.சிங் பிறந்த நாள்: புதுவெளிச்சம் பாய்ச்சுவோம்"

- இந்திய சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்டோர் அந்த வரலாற்று வேதனையில் இருந்து ஆறுதல் பெற மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி இடஒதுக்கீட்டை உயர்த்திப் பிடித்தவர், சமூகநீதி காவலர் வி.பி.சிங். அவரது பிறந்த தினம் ஜுன் 25.

## முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணன் ஆதாரமின்றி கைது செய்யப்பட்டார்

- முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணன் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் ஆதாரமின்றி அவர் கைது செய்யப்பட்டதாக நீதிபதி டி.கே.ஜெயின் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.
- கடந்த 1994–ஆம் ஆண்டு இந்திய விண்வெளி திட்டம் தொடர்பான ரகசிய ஆவணங்களை வெளிநாடுகளுக்கு வழங்கியதாக முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணன் உள்பட 6 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கு கடந்த 1996–ஆம் ஆண்டு கேரள காவல் துறையிடம் இருதுந்து சிபிஐக்கு மாற்றப்பட்டது. அதனை விசாரித்த சிபிஐ அந்த வழக்கு புணையப்பட்டது எனவும் நம்பி நாராயணன் உள்ளிட்டோர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும் உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது.

# 1.5 முக்கிய இடங்கள் பற்றிய செய்திகள்

### எல்லைச் சாலைகள் அமைப்பின் 2 மையங்கள்

- தில்லியின் எல்லைச் சாலைகள் அமைப்புக்கு (பி.ஆர்.ஓ) 2 மையங்களை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் காணொலி வழியாகத் திறந்து வைத்தார்.
- இந்த இரு மையங்களும் எல்லைப் பகுதியில் சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகள், விமானப் படைத் தளங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துவதுடன் சாலை பாதுகாப்பையும் உறுதி செய்யும்.
- தில்லியில் உள்ள பிஆர்ஓ தலைமையகத்தில் இரு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களை ராஜ்நாத் சிங் திறந்து வைத்துப் பேசினார்.
- தொலைதூரப் பகுதிகளில் சாலைகள், சுரங்கங்கள் அமைப்பு போன்ற பணிகள் மூலமாக நாட்டின் முன்னேற்றத்தில் பிஆர்ஓ முக்கிய பங்காற்றுகிறது. கரோனா பெருந்தொற்று காலத்திலும் எல்லைப் பகுதிகளில் சாலைகள் அமைக்க மோசமான வானிலையிலும் அயராமல் பணியாற்றிய பி.ஆர்.ஓ. அமைப்புக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ரோட்டங்கில் இருந்து ஜோஜிலா கணவாய் வரை அடல் சுரங்கப் பாதை அமைத்ததும் பாராட்டுக்குரிய சாதனை.

# 1.6 விளையாட்டு

### உலகக் கோப்பை செஸ் போட்டி: கிராணட் மாஸ்டர் இனியன் தேர்வு

- ரஷியாவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை செஸ் போட்டியில், ஈரோடு வீரர் கிராண்ட் மாஸ்டர் இனியன் பங்கேற்கிறார். இந்தியாவில் இருந்து இந்தப் போட்டியில் பங்கேற்கும் ஒரே போட்டியாளர் இவர்.
- உலக் கோப்பை செஸ் போட்டி ரஷியாவில் ஜுலை 10 முதல் ஆகஸ்ட் 3–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் பங்கேற்பதற்கான தகுதி, தேர்வுப் போட்டியை அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பு நடத்தியது. மே 26 முதல் 30–ஆம் தேதி வரை இணையவழியில் போட்டி நடத்தப்பட்டது.

### ஆசிய குத்துச்சண்டை போட்டி

- ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற ரஞ்சித் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- ஆண்கள் பிரிவில் இந்தியா சார்பில் தங்கம் வென்றவர் ஒருவரே ஆவார்.

### ஹாக்கி5s உலக கோப்பை

- சர்வதேச ஹாக்கி பெடரேஷன் 2024ம் ஆண்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உலககோப்பை ஹாக்கி போட்டியை ஓமன் நகரின் மஸ்கட்டில் நடத்த விருப்பதாக அறிவித்துள்ளது. 16 அணிகள் இதில் பங்குபெறும்.

### 2032 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த உள்ள பிரிஸ் பேன்

- சர்வதேச ஒலிம்பிக் குழு 2032ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை பிரிஸ்பேனில் நடத்த தீர்மானித்து அறிவிப்பு செய்துள்ளது.

### கிரிஜிஸி கோவா கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றார்

- பிரான்சில் தன்னுடைய முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியிலேயே பட்டம் சென்று குடியரசைச் சேர்ந்த கிரிஜிஸி கோவா சாதனை புரிந்துள்ளார்.

### ஜோகோவிச் பிரெஞ்சு ஓபன் சாம்பியன்

- பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று கோப்பையை வென்ற செர்பியாவின் நோவாக் ஜோகோவிச். பாரீஸில் 4 மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற ஆட்டத்தில் கிரீஸின் ஸ்டெ∴பானோஸ் சிட்சிபாஸை 6–7, 2–6, 6–3, 6–2, 6–4 என்ற கணக்கில் வீழ்த்தினார் ஜோகோவிச். இது அவரது 19–ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

## மாளவிகா வெற்றி

- PSL லித்தியம் சர்வதேச பேட்மிண்டன் தொடரில் அயர்லாந்தின் ரேசல் தாராக் ஐ வீழ்த்தி இந்தியாவைச் சேர்ந்த மாளவிகா வெற்றி பெற்றுள்ளார்.

## ஜெல்பந்த் சேலஞ் செஸ் பட்டம்

- மெல்ட் வாட்டல் சாம்பியன் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் D.குகேஷ் 15000 டாலர் மதிப்பிலான ஜெல்பந்த் சேலஞ்ச் சுற்றில் வெற்றி பெற்றுள்ளார். ப்ரக்யாநந்தா எதிரான அனைத்து சுற்றுகளிலும் வெற்றி பெற்றுள்ளார்.

## குயின்ஸ் கிளப் டென்னிஸ் பெரெட்டினி சாம்பியன்

- குயின்ஸ் கிளப் டென்னிஸ் போட்டியில் இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினி சாம்பியன் ஆனார்.
- இறுதிசுற்றில் அவர் இங்கிலாந்தின் கேமரூன் நோரியை 6–4, 6–7 (5/7), 6–3 என்ற செட்களில் வென்றார். இதன் மூலம் கடந்த 1985–க்குப் பிறகு குயின்ஸ் கிளப் போட்டியில் முதல் முறையாக பங்கேற்ற சீசனிலேயே சாம்பியன் ஆன முதல் வீரர் என்ற பெருமையை பெரெட்டினி பெற்றுள்ளார்.

## பயிற்சியாளர்குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள DR.தடாங்மினு

- சர்வதேச குத்துச்சண்டை பயிற்சியாளர்கள் குழுவின் உறுப்பினராக இந்தியாவைச் சேர்ந்த முதல் பெண் DR.தடாங் மினு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மினு தற்போது பெண்கள் குத்துச்சண்டை ஆணையத்தின் தலைவராக பணிபுரிகின்றார். அருணாச்சல பிரதேசத்தின் குத்துச்சண்டை கூட்டமைவில் தலைவராக நியமனம் செய்யப்பட்டவர்.

## உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல்: இந்தியாவுக்கு வெண்கலம்

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீ. ஏர்பிஸ்டல் பிரிவில் இந்திய மகளிர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.
- குரோஷியாவின் ஒசிஜெக் நகரில் ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை போட்டி நடைபெற்று வருகிறது. நடைபெற்ற மகளிர் 10 மீ. ஏர்பிஸ்டல் பிரிவு போட்டியில் இந்தியாவின் மானுபாக்கல், யஷஸ்வினி, ராஹி சர்னோபத் ஆகியோர் 16–12 என்ற புள்ளிக் கணக்கில் ஹங்கேரியின் வெரோனிகா, ஜாகோ, சாரா ரபேலை வீழ்த்தி வெண்கலம் வென்றனர்.

## ஒலிம்பிக் பாடல் வெளியீடு

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக இ'ந்தியா அணிக்கான "தீம்" பாடல் அறிமுகம் செய்யப்பட்டது. "லக்ஷிய தேரா சாம்னே ஹே" என்ற அந்தப் பாடலை மோஹித் சௌஹான் இசையமைத்துப் பாடியுள்ளார்.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: மானு–சௌரவ் ஜோடிக்கு வெள்ளி

- குரோஷியாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் மானு பாக்கர், சௌரவ் சௌதரி இணை வெள்ளிப் பதக்கம் வென்றது. இத்துடன், இந்தப் போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 3 ஆகியுள்ளது. அதில் வெண்கலம் அடங்கும்.

## ஒலிம்பிக்கில் தங்கம் வென்றால் ரூ.3 கோடி

- அனைத்து விளையாட்டுகளிலும் சாதிக்கக் கூடிய வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி, ஊக்கத்தொகை போட்டிகளுக்குச் சென்று வர பயணச் செலவு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும். ஒலிம்பிக் போட்டியில் தமிழகத்தின் சார்பில் ஏழு வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். அந்தப் போட்டியில் தங்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.3 கோடியும், வெள்ளி வெல்வோருக்கு ரூ.2 கோடியும், வெண்கலப் பதக்கம் வெல்லக் கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடியும் தமிழன அரசு சார்பில் வழங்கப்படும்.

## தேசிய தடகள சாம்பியன்ஷிப்: கம்பு ஊன்றித் தாண்டுதலில் தமிழகத்துக்கு தங்கம்

- தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான கம்பு ஊன்றித் தாண்டுதலில் தமிழகத்தின் பரணிகா இளங்கோவன் முதலிடம் பிடித்தார்.
- அவர் 3.90 மீட்ட தாண்டி தங்கம் வெல்ல, மத்திய பிரதேசத்தின் பபிதா படேல் (3.40 மீ), தமிழகத்தின் ரோஸி மீனா பால்ராஜ் (3.30 மீ) ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர்.

- மகளிருக்கான உயரம் தாண்டுதலில், கேரளத்தின் ஏஞ்செல் பி.தேவசியா (1.65 மீ) முதலிடமும், தமிழக வீராங்கனை ஜிஜி ஜார்ஜ் ஸ்டீபன் (1.60 மீ) 2-ஆம் இடம் பிடித்தனர்.

## உலகக் கோப்பை வில்வித்தை: இந்தியாவுக்கு "ஹாட்ரிக்" தங்கம்

- பிரான்ஸில் நடைபெறும் உலகக் கோப்பை வில்வித்தையின் 3-ஆம் கட்ட போட்டியில் இந்தியாவுக்கு 3 தங்கப் பதக்கங்கள் கிடைத்தன. தனி நபர் பிரிவில் தீபிகா குமாரி தங்கம் வெல்ல, அவர் இடம்பெற்ற மகளிர் அணியும், கலப்பு அணியும் அந்தந்தப் பிரிவுகளில் தங்கம் வென்றது.
- இதில் மகளிருக்கான ரிசர்வ் பிரிவு இறுதிச்சுற்றில் தீபிகா குமாரி 6-0 என்ற செட் கணக்கில் ரஷியாவின் எலனா ஆசிபோவாவை வீழ்த்தி தங்கத்தை தனதாக்கினார்.
- முன்னதாக, தீபிகா குமாரி, அங்கிதா பகத் கோமனிகா பாரி ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் ரீகர்வ் அணி இறுதிச்சுற்றில் 5-1 என்ற செட் கணக்கில் மெக்ஸிகோவின் அப்டா ரோமான், அலெக்ஸாண்டரா வாலென்சியா, அனா வாஸ்கெஸ் ஆகியோர் கூட்டணியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.
- தம்பதியாக தங்கம்: கலப்பு அணிகள் பிரிவில் தீபிகா குமாரி தனது கணவரும் சக வீரருமான அதானு தாஸுடன் களம் கண்டார்.
- இந்த ஜோடி இறுதிச் சுற்றில் நெதர்லாந்தின் ஜெஃப்வான் டென் பெர்க், கேப்ரியேலா ஷ்லோயெசர் இணையை 5-3 என்ற செட் கணக்கில் விழ்த்தி சாம்பியன் ஆனது.

## டி20 உலகக் கோப்பை போட்டி இந்தியாவிலிருந்து யுஏஇ-க்கு மாற்றம் உறுதி செய்தது பிசிசிஐ

- இந்தியாவில் வரும் அக்டோபர்-நவம்பர் கால கட்டத்தில் நடத்தப்படவிருந்த டி20 உலகக் கோப்பை போட்டி, கரோனா சூழல் காரணமாக ஐக்கிய அரபு அமீரகத்துக்கு (யுஏஇ) மாற்றப்படுவதாக பிசிசிஐ தலைவர் செளரவ் கங்குலி தெரிவித்தார்.
- முன்னதாக, போட்டியை நடத்துவது தொடர்பாக பிசிசிஐக்கு ஐசிசி 4 வார அவகாசம் வழங்கியதை அடுத்து இந்த முடிவே பரவலாக ஊகிக்கப்பட்ட நிலையில், தற்போது பிசிசிஐ அதை உறுதி செய்துள்ளது. அக்டோபரில் இந்தியாவில் கரோனா-3-ஆம் அலை ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் நீச்சலுக்கு தகுதி: வரலாறு படைத்தார் சஜன் பிரகாஷ்

- இந்திய நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ் ஆடவருக்கான 200 மீட்டர் பட்டர்ஃப்ளை பிரிவில் டோக்கியோ ஒலிம்பிக்கிற்காக "ஏ" போட்டிக்கு தகுதிபெற்று புதிய சாதனை படைத்தார்.
- இத்தாலியில் நடைபெறும் நீச்சர் போட்டியில் பங்கேற்றுள்ள இந்திய வீரர் சஜன் பிரகாஷ், 200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் 1 நிமிடம் 49.73 விநாடிகளில் இலக்கை எட்டி புதிய தேசிய சாதனை படைத்தார்.

## விம்பிள்டன் டென்னிஸ்: ஜோகோவிச் வெற்றி

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.
- நடப்புச் சாம்பியனான ஜோகோவிச் அதில் பிரிட்டன் தகுதிச் சுற்று வீரரான ஜேக் டிராப்பரை எதிர்கொண்டார். அவரிடம் முதல் செட்டை இழந்த ஜோகோவிச் 4-6, 6-1, 6-2, 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்றார்.

## தேசிய தடகளம்: 400 மீ ஓட்டத்தில் தமிழகத்துக்கு வெண்கலம்

- தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் தமிழகத்தின் வீரமணி ரேவதி 53.71 விநாடிகளில் இலக்கை எட்டி 3-ஆம் இடம் பிடித்தார்.

## உலகக் கோப்பை

- 400 மீட்டர் தடை தாண்டு ஓட்டம் டிரையல்ஸில் அமெரிக்க வீராங்கனை சிட்னி மெக்லாஃப்லின் (51.90 விநாடிகள்) புதிய உலக சாதனை படைத்தார்.
- இந்திய வில்வித்தை வீராங்கனை தீபிகா குமாரி, உலகத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தார்.
- கரோனா சூழல் காரணமாக இந்தியா ஓபன், ஹைதராபாத் ஓபன் போட்டிகள் ரத்தாகின.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: தங்கம் வென்றார் ராஹி சர்னோபத்

- குரோஷியாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ராஹி சர்னோபத் தங்கப் பதக்கம் வென்றார்.

- டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க இருக்கும் நிலையில் ராஹி சர்னோபத் வென்றுள்ள இந்தத் தங்கம் அவருக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும். இந்த உலகக் கோப்பை போட்டியில் இந்தியாவுக்கு இது முதல் தங்கமாகும். முன்னதாக ஒரு வெள்ளி, இரு வெண்கலப் பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

### ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றார் சீமா புனியா

- இந்திய வட்டு எறிதல் வீராங்கனை சீமா புனியா, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதிபெற்றார்

## 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### 'Savarkar: A contested Legacy (1924–1966)' : விக்ரம் சம்பத்

- வரலாற்று ஆசிரியர் விக்ரம் சம்பத் V.D.சவார்கர் குறித்த 'Savarkar: A contested Legacy (1924–1966)' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- பெங்குயின் பதிப்பகம் இந்த புத்தகத்தை வெளியிட்டுள்ளது.
- சவார்கரின் 1833–முதல் 1923 வரையிலான காலகட்டத்தை முதல் பதிப்பிலும், 1924 முதல் 1966 வரையிலான காலகட்டத்தை இரண்டாவது பதிவிலும் தெளிவுற விளக்கியுள்ளார்.

### 'Home in the World' Book: by Amartya Sen's

- நோபல் பரிசு பெற்ற அமர்தியா சென் அவர்களின் நினைவுகள் 'Home in the World' Book: by Amartya Sen's என்ற புத்தகமாக பதிவு செய்துள்ளார்.
- பென்குயின் ரேண்டம் ஹோம் இந்த புத்தகத்தை வெளியிட்டுள்ளது. இந்த புத்தகத்தில் ரவீந்திரநாத் தாகூர் அவருக்கு பெயரிட்ட கதைகள் விவரிக்கப்பட்டுள்ளது.

### டிரம்ப் ஆட்சி காலம் புது புத்தகம் வெளியீடு

- அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் ஆட்சி காலத்தின் இறுதி நாட்களை விவரிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள, "லேண்ட்ஸ்லைட்" என்ற புத்தகம், அடுத்த மாதம் வெளியிபடப்பட உள்ளது.

### "My Joys and Sorrows – as a mother of a Special Child"

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சர் ஹர்ஷவர்தன் "My Joys and Sorrows – as a mother of a Special Child" என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்த புத்தகம் Dr.கிருஷ்ணா சக்சேனாவால் எழுதப்பட்டது.

### "Policymaker's Journal: From New Delhi to Washington, DC" கௌசிக் பாசு

- இந்தியாவின் முதல் பொருளாதார ஆலோசகர் மற்றும் உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணராக பணியாற்றிய கௌசிக் பாசு "Policymaker's Journal: From New Delhi to Washington, DC" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

### "Kashmiri Century: Portrait of a Society in Flux"

- கீம்லதா வக்லு எழுதியுள்ள "Kashmiri Century: Portrait of a Society in Flux" என்ற புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- காஷ்மீர் பள்ளத்தாக்கு அப்பகுதி மக்கள், செயற்பாட்டாளர்கள் குறித்த தரவுகளை உள்ளடக்கியுள்ளது.

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

## ஐக்கிய அரபு அமீரகத்தின் தங்க கடவுசீட்டு

- பாலிவுட் நடிசர் சஞ்சய் தத்-திற்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் தங்க கடவு சீட்டு அளிக்கப்பட உள்ளது.
- 2019 முதல் தொழில்புரிவோர் படிப்பவர்கள் போன்ற வெளிநாட்டினருக்கு சிறப்பு சலுகைக்காக இந்த திட்டத்தை ஐக்கிய அரபு அமீரகம் செய்து வருகிறது.

## Dr.ஹர்ஷ்வர்தனுக்கு உலக சுகாதார அமைப்பின் விருது

- புகையிலைபயன்பாட்டைகட்டுப்படுத்தியமைக்காக உலக புகையிலை ஒழிப்பு தினத்தில் இந்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ்வர்தன் அவர்களுக்கு உலக சுகாதார அமைப்பு விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- இந்தியாவில் இ-சிகரெட்டுகளை தடை செய்தல் மற்றும் புகையிலை பொருட்களை ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## TTL விருது – 2021

- இந்திய வம்சாவளியை சேர்ந்த தாமஸ் விஜயன் இயற்கை TTL விருது – 2021ஐ பெற்றுள்ளார்.
- கேரளாவைப் பூர்விகமாக கொண்டு கனடாவில் வசித்து வரும் தாமஸ் விஜயன் 2021 இயற்கை TTL புகைப்படவியலாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது.
- 'The World is Going Upside Down' என்ற தலைப்பின் கீழ் ஓரங்குட்டான் மரத்தில் உறங்குவது போன்ற புகைப்படத்திற்கு இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

## டைம் 50 சிறந்த எதிர்பார்ப்புள்ள பெண்கள்

- டைம் இதழ் வெளியிட்டுள்ள உலகளவில் எதிர்பார்ப்புகள் உள்ள சிறந்த 50 பெண்கள் பட்டியலில் இந்தியவாவை சேர்ந்த ரியா சக்ரவர்த்தி முதல் இடம் பெற்றுள்ளார்.
- இரண்டாமிடத்தில் அடிலினே காஸ்டிலினோ இடம் பெற்றுள்ளார் மற்றும் திஷாபடானி, கீரா அதிவானி, தீபிகாபடுகோன் போன்றோர் இடம் பெற்றுள்ளனர்.

## இங்கிலாந்து ஆசியா திரைப்பட திருவிழா

- இந்திய திரைப்பட நடிகை திலோத்தமா ஹோம் 2021 இங்கிலாந்து ஆசியா திரைப்பட திருவிழாவில் சிறந்த நடிகை விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ராஹ்கிர்: தி வேபேரர் என்ற திரைப்படத்திற்காக இந்த விருதை பெற்றுள்ளார்.
- கவுதம் கோஸ் அவர்களால் இந்த திரைப்படம் இயக்கப்பட்டது.

## இந்திய வம்சாவளி செய்தியாளர்களுக்கு புலிட்ஸர் பரிசு

- இந்த ஆண்டுக்கான அமெரிக்காவின் புலிட்ஸர் பரிசுக்கு, இந்தியா வம்சாவளியைச் சேர்ந்த இரு செய்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இது குறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- ஊடகத் துறைக்கான அமெரிக்காவில் மிக உயரிய விருதான புலிட்ஸர் விருதை, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இருவர் இந்த ஆண்டு வென்றுள்ளனர்.
- சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தடுப்பு முகாம் குறித்து புதுமையான முறையில் செய்திகள் சேகரித்து வெளிப்படுத்திய இந்திய வம்சாவளி செய்தியாளர் மேகா ராஜகோபாலன் இந்தப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்காவின் "புஸ்ஃபீட் நியூஸ்" இணையதள செய்தி ஊடகத்தில் அவர் பணியாற்றி வருகிறார்.
- இதுதவிர, "டம்பா பே டைம்ஸ்" இதழில் பணியாற்றி வரும் நீல் பேடியும் இந்த ஆண்டுக்கான புலிட்ஸர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவர், சக செய்தியாளரான கேதலீன் மெக்கிரோரியுடன் சேர்ந்து இந்தப் பரிசை வென்றுள்ளார்.
- எதிர்காலத்தில் குற்றவாளிகளாகக் கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்படுவர்கள் குறித்து கணினி முறையில் கண்டறியும் உள்ளூர் காவல் அலுவலகத்தின் சர்ச்சைக்குரிய முயற்சிகள் குறித்து செய்திகள் வெளியிட்டமைக்காக அவர்களுக்கு புலிட்ஸர் விருத வழங்கப்படுகிறது என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

- இது தவிர, அமெரிக்காவில் கருப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ்ஃபிளாய்டை போலீஸார் கடந்த ஆண்ட கைது செய்தபோது அவர் உயிரிழந்த சம்பவத்தை வீடியோ எடுத்த இளம்பெண் டார்னெல்லா ஃபிரேஸியர் உள்ளிட்ட பலர் இந்த ஆண்டின் புலிட்ஸர் பரிசை வென்றுள்ளனர்.

## சமூக செயல்பாட்டுக்காக டிஎன்பிஎல் ஆலைக்கு தங்கமயில் விருது

- கரூர் மாவட்டம் புகழூர் டிஎன்பிஎல் ஆலைக்கு தங்க மயில் விருது கிடைத்துள்ளது.
- இன்ஸ்டிட்யூட் ஆஃப் டைரக்டர்ஸ் நியூ தில்லி என்ற அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை, எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வு செய்த தங்கமயில் விருதை வழங்கி வருகிறது.

## 213 பிஎஸ்எஃப் வீரர்களுக்கு "உள்நாட்டுப் பாதுகாப்பு காவல் சேவை" பதக்கம்

- எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) வீரர்கள் 213 பேருக்கு "உள்நாட்டுப் பாதுகாப்பு காவல் சேவை பதக்கம்" வழங்கப்பட்டது.
- இது தொடர்பாக பிஎஸ்எஃப் செய்தித்தொடர்பாளர் கூறியதாவது:
- ஜம்மு–காஷ்மீர், வடகிழக்கு எல்லைகள் மற்றும் இடதுசாரி தீவிரவாதத்துக்கு எதிராக பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் பிஎஸ்எஃப் வீரர்களின் சேவையைப் பாராட்டும் விதமாக கடந்த 2018–ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகம் உள்நாட்டுப் பாதுகாப்பு காவல் சேவை பதக்கத்தை அறிமுகப்படுத்தியது. இந்தப் பதக்கம் ஆண்டுதோறும் இருமுறை வழங்கப்படுகிறது.
- இந்நிலையில் ஜம்மு எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் பிஎஸ்எஃப் படையைச் சேர்ந்த 27 அதிகாரிகள், 59 சார்நிலை அதிகாரிகள், இதர நிலைகளில் உள்ள 127 வீரர்கள் உள்பட 213 பேருக்கு உள்நாட்டுப் பாதுகாப்பு காவல் சேவை பதக்கம் வழங்கப்பட்டது.

## மாதவிடாய் வறுமை ஒழிப்பிற்கு விருது

- கல்வியில் சிறப்பாக சேவையாற்றியமைக்காக அமிகா ஜார்ஜ் பிரிட்டிஷ் எம்பயர் உறுப்பினர் விருது அளித்து கௌரவிக்கப்பட்டார்.
- மாதவிடாய் காலத்தில் சுகாதாரமாக வாழ்வதற்கான பொருட்களை வழங்குதல் போன்ற சேவைகளுக்காக இந்த விருது அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## ராஜஸ்தானின் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஐ.நா. விருது

- 2021ம் ஆண்டிற்கான Land for Life Award ராஜஸ்தானின் பேமிலியல் பாரஸ்ட்ரி ஆப் ராஜஸ்தான் என்ற அமைப்பின் குடும்பத்துடன் கூடிய வனம் என்ற செயல்திட்டத்திற்கு விருது அளித்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதலைத் தடுத்தல் மாநாட்டினெ ஒரு பகுதியாக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு 2021ற்கான மையக்கருத்து – "Healthy Land, Healthy Lives".

## மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழக விருது

- முன்னாள் கேரள சுகாதாரத்துறை அமைச்சர் ஷைலஜாவிற்கு மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டிற்கான சமூக பொதுவெளி விருது வழங்கப்பட்டுள்ளது.
- கோவிட்–19 காலத்தில் அவரது சிறப்பான செயல்பாடுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது

## கொச்சின் சர்வதேச விமான நிலையத்திற்கு விருது

- விமான நிலைய சேவைகளில் சிறந்து விளங்குகின்ற காரணத்திற்காக கொச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு சர்வதேச விமான நிலைய குழுவின் எக்ஸலன்ஸ் விருது அளிக்கப்பட்டுள்ளது.
- பயணிகளின் சேவை மற்றும் வசதிகள் கருத்துகளின் அடிப்படையில் இந்த பரிசு சிறந்த சேவைக்காக வழங்கப்பட்டுள்ளது.

### 'பொலிவுறு நகரம்" திருப்பதிக்கு 5 விருதுகள்

- மத்திய அரசு வெளியிட்டுள்ள ஸ்மார்ட் நகரங்களின் தரவரிசைப் பட்டியலில் திருப்பதி மாநகருக்கு 5 விருதுகள் கிடைத்துள்ளன.
- நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்மார்ட் சிட்டிகளில் (பொலிவுறு நகர்) திருப்பதியும் ஒன்று. அதனால் திருப்பதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இங்கு சுத்தம் சுகாதாரமும் நன்றாகப் பேணப்பட்டு வருகிறது.
- இதற்காக ஒவ்வொலு ஆண்டும் திருப்பதி மாநகரம் மத்திய அரசிடமிருந்து ஒரு விருதை பெற்று வந்த நிலையில் இந்த ஆண்டு ஒட்டுமொத்தமாக 5 விருதுகளை பெற்றுள்ளது.

### இந்திய ஆயுர்வேத மருத்துவர்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் கோல்டன் விசா

- இந்தியாவைச் சேர்ந்த இரு ஆயுர்வேத மருத்துவர்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம், கோல்டன் விசா (நுழைவு இசைவு) வழங்கியுள்ளது.
- அதன்படி, அந்நாட்டில் அவர்கள் நீண்ட காலம் தடையின்றி வசிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.
- "கலீஜ் டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்ட செய்தியில், கேரளத்தைச் சேர்ந்த டாக்டர் ஷியாம் விஸ்வநாதன் பிள்ளை, டாக்டர் ஜஸ்னா ஜமால் ஆகிய இருவருக்கும் ஐக்கிய அரபு அமீரகத்தின் குயுரிமை ஆணையம் கோல்டன் விசா வழங்கி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2021 புகுகா கிராண்ட் பரிசு

- பத்திரிகையாளர் P.சாய்நாத் 2021ம் ஆண்டிற்கான புகுகா கிராண்ட் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவருடன் ஜப்பானின் கிஷி மோட்டோ மற்றும் தாய்லாந்தின் பிராப்தா ஆகியோர் விருதை பெற உள்ளனர்.
- ஊரக பகுதிகளில் உள்ளவர்களுக்கான புதிய எழுத்துகளுக்காக இவருக்கு இந்த விருது அளிக்கப்பட உள்ளது.
- புகுகா கிராண்ட் பரிசு ஆசியாவில் சிறப்பான சேவை புரிபவர்களுக்காக 1990ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

## 1.9 நியமனங்கள்

### மாநிலத் தேர்தல் ஆணையராக பதவியேற்றார் வெ.பழனிக்குமார்

- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி வெ.பழனிக்குமார் பதவியேற்றார்.
- சென்னை கோயம்பேட்டில் உள்ள மாநிலத் தேர்தல் ஆணையரின் அலுவலகத்தில் அவர் தனது பணிகளைத் தொடக்கினார்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பணியிடம் கடந்த சில மாதங்களாக காலியாக இருந்தது. இதையடுத்து இந்தப் பொறுப்புக்கு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வெ.பழனிக்குமார் நியமிக்கப்பட்டார். இதற்கான உத்தரவை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பிறப்பித்தார்.

### தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நியமனம்

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி அருண் குமார் மிஸ்ரா தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமனம் செய்ய பரிந்துரைக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பிரதமர், உள்துறை அமைச்சர், ராஜ்ஜிய சபா துணைத்தலைவர் ஹரிவன்ஸ், லோக்சபா சபாநாயகர் ஓம்பிர்லா ராஜ்ய சபை எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே கொண்ட உயர்நிலைக் குழு இந்த பரிந்துரையை அளித்துள்ளது.

#### தேசிய மனித உரிமைகள் ஆணையம்

- தேசிய மனித உரிமைகள் ஆணைய சட்டம் 1993ன் கீழ் உருவாக்கப்பட்டது.
- தலைமையிடம் – தில்லி
- டிசம்பர் 10ல் மனித உரிமைகள் தினம்

### சிஐஐ கூட்டமைப்பின் புதிய தலைவராக நரேந்திரன் தேர்வு

- இந்திய தொழிலக கூட்டமைப்பின் (சிஐஐ) புதிய தலைவராக டி.வி.நரேந்திரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- இது குறித்து சிஐஐ வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: டாடா ஸ்டீல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும், நிர்வாக இயக்குநருமான டி.வி.நரேந்திரன் சிஐஐ கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிஐஐ (CII – Confederation of Indian Industry)

- துவக்கம் – 1895
- கடைசி தலைவர் – உதய் கோட்டக்
- தலைமை அலுவலகம் – புதுதில்லி

## மேற்கு வங்க முதல்வரின் தலைமை ஆலோசகரானார் தலைமைச் செயலர்

- மேற்கு வங்க தலைமைச் செயலர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அலபன் பந்தோபாத்பாய, மாநில முதல்வர் மம்தா பானர்ஜியின் தலைமை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அலபன் பந்தோபாத்யாயவை மத்திய பணிக்கு விடுவிக்குமாறு மத்திய அரசு உத்தரவிட்டிருந்த சூழலில் முதல்வர் மம்தா இந்த முடிவை மேற்கொண்டுள்ளார்.

## அந்தமான் நிக்கோபரின் தலைமை கமாண்டர் நியமனம்

- லெப்டினைட் ஜெனரல் அஜய் சிங் அந்தமான் நிகோபரின் போர்ட் பிளேரை தலைமையிடமாக கொண்ட இராணுவ தளத்தின் தலைமை கமாண்டராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைவர் நியமனம்

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி A.K.மிஸ்ரா தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## உலக சுகாதார அமைப்பின் செயல் வாரியக்குழுவின் தலைவராக Dr.பேட்ரிக் அமாத் நியமனம்

- உலக சுகாதார அமைப்பின் செயல்வாரிய குழுவின் 149வது கூட்டத்திற்கு கென்யாவைச் சேர்ந்த Dr.பேட்ரிக் அமாத் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்த குழுவின் 148வது கூட்டத்திற்கு இந்தியாவின் சுகாதார அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தலைமை தாங்கினார்.
- Dr.ஹர்ஷ்வர்தன் இந்த அமைப்பின் உறுப்பினராக 2023 வரை பதவி வகிப்பார்.

## தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் நியமனம்

- தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞராக அசன் முகமது ஜின்னாவை நியமித்து, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## உலக வங்கியின் ஆலோசகராக ரஞ்சித் சிங் திஸாலே நியமனம்

- உலக ஆசிரியர் விருது பெற்ற முதல் இந்திய ஆசிரியர் ரஞ்சித் சிங் திஸாலே உலக வங்கியின் ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- உலக வங்கி சமீபத்தில் உலக பயிற்றுநர்கள் திட்டத்தை துவங்கியுள்ளது.
- 2024வரை உலக வங்கியின் ஆலோசனைக் குழுவில் அவர் பணியாற்றுவார்.

## மாநில வளர்ச்சிக் கொள்கை குழு துணைத் தலைவராக ஜெ.ஜெயரஞ்சன் நியமனம்

- மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்களையும், துணைத் தலைவரையும் தமிழக அரசு நியமித்துள்ளது. அதன்படி, முதல்வர் தலைமையில் செயல்படும் அக்குழுவுக்கு பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பொருளாதார அளவியல் துறை பேராசிரியர் ராம சீனுவாசன், மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜா உள்பட 9 பேர் அக்குழுவில் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.
- முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில், மாநில திட்டக் குழுவானது முன்னாள் முதல்வர் கருணாநிதியால் 1971–ஆம் ஆண்டு மே 25–ஆம் தேதி அமைக்கப்பட்டது. முதல்வரின் தலைமையின் கீழ் செயல்படும் அக்குழுவானது ஓர் ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு, மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது. மாநில திட்டக் குழுவானது அதன் துணைத் தலைவரின் கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

- மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவாக மறுசீரமைப்பு செய்யப்பட்டது. அதன்படி, வளர்ச்சி சார்ந்த இலக்குகளை நிர்ணயிப்பது, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கொள்கைக்கான ஆலோசனை வழங்குதல், கொள்கை ஒத்திசைவு உருவாக்குதல், சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் என பல்வேறு இன்றியமையாப் பணிகளை அக்குழு மேற்கொண்டு வருகிறது.

## தேர்தல் ஆணையராக அனூப் சந்திர பாண்டே நியமனம்

- முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அனூப் சந்திர பாண்டே தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.
- 1984-ஆம் ஆண்டு உத்தரபிரதேச பிரிவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியான அனூப் சந்திர பாண்டேயை தேர்தல் ஆணையராக குடியரசுத் தலைவர் நியமித்ததாக மத்திய சட்ட அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவரது இந்த நியமனம் உடனடியாக அமலுக்கு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக, தேர்தல் ஆணையராக இருந்த சுனில் அரோரா கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி ஓய்வு பெற்றதையடுத்து, சுஷீல் சந்திரா தலைமைத் தேர்தல் ஆணையராகப் பதவி உயர்வு பெற்றார். இதனால் ஒரு தேர்தல் ஆணையர் பதவி காலியானது. அந்த இடத்துக்கு தற்போது அனூப் சந்திர பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்.
- வரும் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அவர் தேர்தல் ஆணையராக அப்பதவி வகிப்பார். உத்தர பிரதேச தலைமைச் செயலர் உள்ளிட்ட பல முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

## 76வது ஐக்கிய பொதுச்சபை தலைவராக அப்துல்லா சாஹித் தேர்வு

- மாலத்தீவு அமைச்சர் அப்துல்லா சாஹித் 76வது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் சார்பாக இந்த பொறுப்பை அவர் வகிக்க உள்ளார்.

## எல்ஐசி தலைவரின் பதவிக் காலம் 9 மாதங்களுக்கு நீட்டிப்பு

- எல்ஐசி நிறுவனத்தின் தலைவராக உள்ள எம். ஆர்.குமாரின் பதவிக்காலத்தை 9 மாதங்களுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.
- இது குறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது:
- நடப்பு நிதியாண்டில் பங்கு விலக்கல் மூலம் ரூ.1.75 லட்சம் கோடியை திரட்ட மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 2021-22 நிதியாண்டில் எல்ஐசி நிறுவனத்தின் புதிய பங்கு வெளியீட்டை (ஐபிஓ) மேற்கொள்ளவுள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த பட்ஜெட்டில் அறிவித்திருந்தார்.

## பருவகால மாற்ற செயற்குழுவிற்கு: சுனிதா நரைன் நியமனம்

- சர்வதேச மேம்பாட்டு பருவகால மாற்ற செயற்குழுவிற்கு புகழ்பெற்ற சுற்றுச்சூழலியளாளர் சுனிதா நரைன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ரிசர்வ் வங்கி துணை ஆளுநர்

- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் மகேஷ் குமார் ஜெயினின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுவதாக அமைச்சரவை குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- மற்ற 3 துணை ஆளுநர்கள் மைக்கேல் பத்ரா, M.ராஜேஸ்வர் ராவ் மற்றும் ரபி சங்கர்.

## உலக சுகாதார அமைப்பின் ஆலோசனைக் குழுவில் இந்திய பேராசிரியர்

- உலக சுகாதார அமைப்பின் கீழ் செயல்படும் உலகளாவிய காற்று மாசு மற்றும் ஆரோக்கியத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் கௌரவ உறுப்பினராக இந்தியாவின் கான்பூர், ஐஐடியில் பணிபுரியும் பேராசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**இதுகுறித்து ஐஐடி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:**

- கான்பூர் ஐஐடி சிவில் என்ஜினீயரிங் துறையில் பேராசிரியராகப் பணிபுரிபவரும், காற்றின் தரத்தைக் கண்டறிவதில் நிபுணருமான முகேஷ் சர்மா, உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கிறார். உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநரால் இந்தக் குழவின் உறுப்பினர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இக்குழுவானது உலக சுகாதார அமைப்புக்கு ஆலோசனை வழங்கும் குழுவாகும்.
- வறுமை ஒழிப்பு, பூமியைப் பாதுகாத்தல் மற்றும் 2030-க்குள் அனைத்து மக்களும் அமைதி, வளத்தை அனுபவிப்பதை உறுதி செய்வதென

உலக நாடுகளுக்கு அழைப்பு விடுக்கும் வகையில், ஐ.நா.வில் இந்தக் குழு கடந்த 2015–இல் உருவாக்கப்பட்டது.

## ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் தலைவராக K.நாகராஜ் நாயுடு நியமனம்

- ஐக்கிய நாடுகள் அதிகாரிகளின் தலைவராக ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர துணை பிரதிநிதி K.நாகராஜ் நாயுடு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- ஓராண்டு காலத்திற்கு அந்த பதவிக்கு ஐ.நா. பொதுச்சபையின் தலைவராக வரவுள்ள அப்துல்லா சாஹித் அவர்கள் குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ஐக்கிய நாடுகள் வர்த்தக மேம்பாட்டு மாநாட்டின் (UNCTAD) முதல் பெண் செயலாளர்

- கோஸ்டா ரிகாவைச் சேர்ந்த ரெபிகா கிரினிஸ்பான் ஐக்கிய நாடுகள் வர்த்தக மேம்பாட்டு மாநாட்டின் முதல் பெண் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- UNDPயின் பிராந்திய இயக்குநராக பணியாற்றியவர்.

UNCTAD

- தலைமையிடம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- பொது செயலாளர் – ரெபிகா, கிரினிஸ்பான்
- துவக்கம் – 1964

## தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரநிதியாக ஏ.கே.எஸ்.விஜயன் பொறுப்பேற்பு

- தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ்.விஜயன் தில்லியில் தனது அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் அமெரிக்க நீதிபதியாக நியமனம்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான சரளா வித்யா நாகலா அமெரிக்க நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்தியா–அமெரிக்க சிவில் உரிமைகள் பிரிவு வழக்குரைஞராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சரளா வித்யா நாகலா பணியாற்றி வந்தார். இவரை, கனெக்டிகட் மாகாண மாவட்ட நீதிபதியாக அமெரிக்க அதிபர் பைடன் நியமனம் செய்துள்ளார்.

## சிறுபான்மையின நலத்துறைச் செயலராக ரேணுகா குமார் நியமனம்

- மத்திய அரசின் சிறுபான்மையினர் விவகாரங்கள் துறையின் செயலராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி ரேணுகா குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மைக்ரோசாஃப்ட் தலைவராக சத்யா நாதெள்ளா நியமனம்

- உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசாஃப்டின் தலைமை செயலதிகாரி சத்யா நாதெள்ளா, அந்த நிறுவனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- மைக்ரொசாஃப்ட் நிறுவனத் தலைவராக சத்யா நாதெள்ளாவை நிறுவனத்தின் இயக்குநர் குழு ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது. மேலும், தலைமை இயக்குநராக ஜான் டபிள்யூ தாம்ஸனை இயக்குநர் குழு நியமித்துள்ளது.
- புதிய பொறுப்பை ஏற்கும் சத்யா நாதெள்ளா, இயக்குநர் குழுவின் இலக்குகளை நிர்ணயிக்கும் பணிக்கு தலைமை வகிப்பார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை நிறவனத்தின் தலைவராக இருந்த ஜான் டபிள்யூ தாம்ஸனுக்கு பதிலாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சத்யா நாதெள்ளா அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## உலக வர்த்தக அமைப்பின் இந்திய நிரந்தர திட்டத்தின் கவுன்சிலர் நியமனம்

- உலக வர்த்தக அமைப்பின் இந்திய நிரந்தர திட்டத்தின் கவுன்சிலராக ஆஷிஷ் சந்தோர்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- முதல் முறையாக ஒரு தனியார் நிறுவன ஊழியர் பெங்களூரின் ஸ்மாவரி நிறுவன இயக்குநர் சந்தோர்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

WTO உலக வர்த்தக மையம்

- துவக்கம் – 1995
- உறுப்பு நாடுகள் – 164

## உலக வங்கி–IMFன் உயர்மட்ட ஆலோசனைக் குழுவிற்கு மான்டெக் அலுவலியா நியமனம்

- உலக வங்கி மற்றும்–IMF ன் உயர்மட்ட ஆலோசனைக் குழுவிற்கு மான்டெக் சிங் அலுவலியா ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்தியாவில் திட்டக் குழுவில் துணைத் தலைவராக பணிபுரிந்தவர்.

## கனடா உச்சநீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் நியமனம்

- கனடா உச்சநீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மஹ்மூத்ஜமால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் அந்நாட்டு உச்சநீதிமன்றத்துக்கு நியமிக்கப்படும் முதல் கருப்பினத்தைச் சேர்ந்த நீதிபதி என்கிற பெருமையையும் அவர் பெறுகிறார்.
- இது தொடர்பாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட அறிவிப்பல், "கனடா உச்சநீதிமன்ற நீதிபதியாக மஹ்மூத் ஜமாலை நியமிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சிறந்த சட்ட மற்றும் கல்வி அனுபவம் கொண்ட ஜமால், பிறருக்கு சேவை செய்வதில் அர்ப்பணிப்புடன் இருப்பவர்.
- அவர் உச்சநீதிமன்றத்தின் மதிப்புமிகு சொத்தாக இருப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.
- 2019–ஆம் ஆண்டு ஒன்டாரியோ மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஜமால் நியமிக்கப்பட்டார். அவர் வழக்குரைஞராகப் பணியாற்றிய காலத்தில் இலவச சட்ட சேவையாற்றுவதில் முனைப்பு காட்டி வந்தார்.
- கனடா உச்சநீதிமன்றத்தில் சிவில், அரசியலமைப்பு, குற்ற வழக்குகள் தொடர்பான 35 மேல்முறையீட்டு வழக்குகளில் ஆஜராகி வாதாடியுள்ளார்.

## ஈரான் அதிபர் தேர்தலில் இப்ராஹிம் ரெய்ஸி வெற்றி

- ஈரானில் சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தல் இப்ராஹிம் ரெய்ஸி வெற்றி பெற்றுள்ளார்.

**ஈரான்**

- தலைநகரம் – தெஹ்ரான்
- நாணையம் – ஈரான் ரியால்

## சுரேஷ் N படேல் மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் தற்காலிக தலைவராக நியமனம்

- கண்காணிப்பு ஆணையாளர் சுரேஷ் N படேல் மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் தற்காலிக தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## துணைத் தேர்தல் ஆணையருக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு

- இந்தியத் தேர்தல் ஆணையத்தில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு பொறுப்பான துணைத் தேர்தல் ஆணையர் உமேஷ் சின்ஹாவுக்கு மூன்றாவது முறையாக ஓராண்டுக்கு பணி நீட்டிப்பு வழங்க மத்திய அமைச்சரவையின் நியமனங்களுக்கான குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## உஷா நடேசன்

- தேசிய ஆசிரியர் தொழிற்நுட்ப பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக அண்ணா பல்கலைக்கழகத்தின் நீர் ஆராய்ச்சி மையத்தின் துணை இயக்குநர் உஷா நடேசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## அட்டர்னி ஜெனரல் பதவிக்காலம் நீட்டிப்பு

- அட்டர்னி ஜெனரல் வேணுகோபாலின் பதவிக்காலம் ஒரு ஆண்டிற்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது.

## CBI யின் புதிய சிறப்பு இயக்குநராக பிரவீன் சின்ஹா நியமனம்

- மத்திய நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு பிரவின் சின்ஹா (மூத்த IPS அதிகாரி) வை CBIயின் புதிய இயக்குநராக நியமனம் செய்துள்ளது.

## தமிழக புதிய டிஜிபி சைலேந்திர பாபு

- தமிழக காவல் துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபியாக சி.சைலேந்திரபாபு நியமிக்கப்பட்டார்.
- தமிழக காவல் துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபியாக இருக்கும் ஜே.கே.திரிபாதி (ஜுன் 30) ஓய்வு பெறுகிறார். இதனால் தமிழக காவல்துறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளின் தலைமைப் பதவியாகவும் கருதப்படும் சட்டம் மற்றும் ஒழுங்கு

டிஜிபியாக யாரை நியமிப்பது என தமிழக அரசு ஆலோசித்து வந்தது.

- புதிய டிஜிபியாக தகுதி உடையவர்களாக ரயில்வே டிஜிபி சி.சைலேந்திரபாபு, தீயணைப்புத் துறை டிஜிபி கரண் சின்ஹா, அயல் பணியாக மத்திய அரசுப் பணியில் இருக்கும். டிஜிபி சஞ்சய் அரோரா உள்ளிட்ட 7 பேர் இருந்தனர். இவர்களில் சைலேந்திரபாபு, கரண்சின்ஹா, சஞ்சய் அரோரா ஆகியோர் பெயர்கள் இறுதிப்பட்டியலில் இருந்தன.
- இந்நிலையில், சைலேந்திரபாபுவை தமிழக காவல்துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபியாக நியமித்து தமிழக அரசின் தலைமைச் செயலர் இறையன்பு உத்தரவிட்டார். இந்த உத்தரவின்படி, சைலேந்திரபாபு புதிய டிஜிபியாக பொறுப்பு ஏற்பார் என காவல் துறை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

### சிறுபான்மையினர் ஆணையத் தலைவராக பீட்டர் அல்போன்ஸ் நியமனம்

- தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவராக பீட்டர் அல்போன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு: மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் கடந்த 1989–ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்துக்கு கடந்த 2010–ஆம் ஆண்டில் சட்டப்பூர்வ அதிகாரமும் வழங்கப்பட்டது.

## 1.10 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### அணு ஆயுதங்களை அதிகரிக்கும் இந்தியா சீனா, பாகிஸ்தான்: ஆய்வில் தகவல்

- இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அணு ஆயுதங்களைத் தொடர்ந்து அதிகரித்து வருவது ஆய்வில் தெரியவந்துள்ளது.
- எல்லை விவகாரங்களில் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் இந்தியா பிரச்னைகளை எதிர்கொண்டு வருகிறது. அவ்விரு நாடுகள் மட்டுமே இந்தியாவுடன் போர் புரிந்துள்ளன. தற்போது கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் இந்தியா–சீனா ராணுவ வீரர்களிடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. ஓராண்டாகியும் லடாக் எல்லையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.
- இந்நிலையில், ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் (எஸ்ஐபிஆர்ஐ) சார்பில் அணு ஆயுதங்கள் தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டது. அதில் உலகம் முழுவதிலும் சுமார் 13,080 அணு ஆயதங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் 90 சதவீத ஆயுதங்கள் அமெரிக்கா, ரஷியா ஆகிய இரு நாடுகளில் மட்டுமே உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
- சர்வதேச அளவில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், வட கொரியா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் மட்டுமே அணு ஆயுதங்கள் உள்ளன. கடந்த ஜனவரி நிலவரப்படி, சீனாவில் 350 அணு ஆயுதங்களும், பாகிஸ்தானில் 165 ஆயுதங்களும், இந்தியாவில் 156 அணு ஆயுதங்களும் உள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சீனா அணு ஆயுதங்களை அதிகரிக்கும் வேகத்தைத் துரிதப்படுத்தியுள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் நாடுகளும் அணு ஆயதங்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அணு ஆயுதங்களைக் கொண்ட ஏவுகணைகளைத் தயாரிப்பதற்காக அதிசெறிவூட்டப்பட்ட யுரேனியம், புளூட்டோனியம் ஆகிய கதிரியக்கப் பொருள்களை நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. இந்தியா, இஸ்ரேல் ஆகியவை புளூட்டோனியத்தைக் கொண்டு அனு ஆயுதங்களைத் தயாரித்து வருகின்றன. பாகிஸ்தான் யுரேனியத்தைக் கொண்டு ஆயதங்களைத் தயாரித்து வருகிறது. மற்ற அணு ஆயுத நாடுகள் இரு கதிரியக்கப் பொருள்களையம் கொண்டு ஆயுதங்களைத் தயாரித்து வருகின்றன.

### சீனாவுடனான எல்லைக் கோட்டுப் பகுதிகளில் முப்படைத் தளபதி விபின் ராவத் ஆய்வு

- சீனாவுடனான எல்லைக் கோட்டுப் பகுதிகளில் முப்படைத் தளபதி விபின் ராவத் ஆய்வு மேற்கொண்டார்.
- ஹிமாசல பிரதேசத்தில் உள்ள சம்தோ செக்டாரில் சீனாவுடன் பகிர்ந்து கொள்ளப்படும் எல்லைக் கோட்டையொட்டிய பகுதிகளில் முப்படைத் தளபதி விபின் ராவத் ஆய்வு மேற்கொண்டார். அவரிடம் அங்குள்ள படைத்தலைவர்கள் கள நிலவரம் குறித்து விளக்கமளித்தனர். படை வீரர்களுடன் கலந்துரையாடிய அவர் அவர்களின் பணியை பாராட்டியதுடன் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் பணியில் தொடர்ந்து உறுதியுடன் செயல்படுமாறு அறிவுறுத்தியதாகவும் இந்திய ராணுவம் தெரிவித்தது.

## 1.11 கலாச்சாரம்

### ராஜ பிரபா திருவிழா ஒடிசா

- பருவமழை துவங்குவதை முன்னிட்டு ஒடிசா மாநிலத்தில் ராஜ பிரபா என்ற திருவிழா கொண்டாடப்படுகிறது.
- பூமித்தாயின் நினைவாக இந்த விழா கடைப்பிடிக்கப்படுகிறது.




# 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## ஜல் ஜீவன் திட்டம்: குஜராத்துக்கு ரூ.3,411 கோடி ஒதுக்கீடு

- ஜல் ஜீவன் திட்ட அமலாகத்துக்காக குஜராத் மாநிலத்துக்கு 2020–21 காலகட்டத்துக்கு ரூ.3,410.61 கோடியை ஜல் சக்தி அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.
- இது தொடர்பாக குஜராத் அரசு தரப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 2020–21 காலகட்டத்துக்காக குஜராத்துக்கு ரூ.3,410.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் முதல் தவணையாக ரூ.852 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

**ஜல்ஜீவன் மிஷன்**

- துவக்கம் – 2019
- 2024க்குள் அனைத்து குடும்பங்களுக்கும் குழாய் வழி குடிநீர் வசதி ஏற்பாடுகள்.
- அமைச்சகம் – ஜல் சக்தி

## பிரதமர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 3.61 லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல்

- பிரதமர் வீட்டு வசதி (நகர்ப்புற) திட்டத்தின் கீழ் 3.61 லட்சம் வீடுகளை கட்டுவதற்கான 708 திட்ட முன்மொழிவுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
- தில்லியில் நடைபெற்ற இந்தத் திட்டத்தின் கீழ் இயங்கும் மத்திய ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் (சிஎஸ்எம்சி) 54–வது கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதில் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டன.
- பயனாளிகள் கட்டுமானம் மற்றும் குறைந்த விலை வீட்டுவசதிக் கூட்டாண்மை மூலம் இந்த வீடுகளைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- "அனைவருக்கும் வீடு" என்ற தொலைநோக்குப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு 2022–ஆம் ஆண்டுக்குள் நகர்ப்புறங்களில் தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு உறுதியான வீடுகளைக் கட்டித்தரும் அரசின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.
- பிரதமர் விட்டு வசதித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட காலத்திற்குள் வீடுகளை கட்டித் தரும் பணியை நாடு முழுவதும் நிறைவு செய்ய வேண்டும் என்ற இலக்கை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.
- பிரதமர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இதுவரை 112.4 லட்சம் வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, சுமார் 82.5 லட்சம் வீடுகளுக்கு அடித்தளங்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் 48.31 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உரியர்வர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின் மொத்த முதலீடான ரூ.7.35 லட்சம் கோடியில் மத்திய அரசின் உதவி ரூ.1.81 லட்சம் கோடியாகும். இதில் ரூ.96,067 கோடி நிதி வழங்கப்பட்டுவிட்டது.

## விரைவில் தென்பெண்ணை பாலாறு இணைப்புத் திட்டம்

- தென்பெண்ணை–பாலாறு இணைப்புத் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது பாலாற்றில் தொடர்ந்து 3 மாதங்களுக்கு தண்ணீர் ஓடும் என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

## தெலுங்கு கங்கை கால்வாய் அகலப்படுத்தும் பணி தொடக்கம்

- சோமசீலா–கண்டலேரு நீர் தேக்கத்திலிருந்து தொடங்கும் தெலுங்கு கங்கை கால்வாயை அகலப்படுத்தும் பணி ஜீன் 6 அன்று பூமி பூஜையுடன் தொடங்கியது.
- ஆந்திர மாநிலம் கண்டலேரு நீர்தேக்கத்திலிருந்து நாள்தோறும் தமிழகத்துக்கு 1 டிஎம்சி நீர் தெலுங்கு கங்கை கால்வாய் மூலம் திறந்து விடப்பட்டு வருகிறது.
- கண்டலேரு நீர்த் தேக்கத்தில் 68 டிஎம்சி நீரை தேக்கி வைக்கலாம்.
- சோமசீலா நீர் தேக்கத்திலிருந்து கால்வாய் மூலம் கண்டலேரு நீர்த்தேக்கத்துக்கு நீர் கொண்டு சொல்லப்படுகிறது.

## இந்திய எம்எஸ்எம்இ துறையை ஊக்குவிக்க ரூ.3,650 கோடி திட்டம் – உலக வங்கி ஒப்புதல்

- கரோனா பொது முடக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர (எம்எஸ்எம்இ) தொழில்துறையை புத்துயிரூட்ட ரூ.3,650 கோடி (50 கோடி டாலர்) திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது. இது குறித்து உலக வங்கி அண்மையில் வெயிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:
- கரோனா பொது முடக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையைப் புத்துயிரூட்ட இந்திய அரசு தேசிய அளவிலான திட்டத்தை அறிவித்துள்ளது.
- இதற்கு உதவும் வகையில் ரூ.3,650 கோடி திட்டத்துக்கு உலக வங்யின் செயல் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள 5,55,000 குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த உதவும்.
- இந்திய குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு உலக வங்கி அளிக்கும் இரண்டாவது உதவித் திட்டம் இது.
- ஏற்கெனவே, எம்எஸ்எம்இ அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 2020–ம் ஆண்டு ஜீலையில் ரூ.5,475 கோடி திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்தது. அதன் மூலம் 50 லட்சம் குறு, சிறு நிறுவனங்கள் அரசிடமிருந்து கடனுதவி பெற்று, தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.
- இப்போது புதிதாக அளித்திருக்கும் ஒப்புதல் மூலம், எம்எஸ்எம்இ துறையின் உற்பத்தியைப் பெருக்கவும்,நிதி நிலையை மேம்படுத்துவதற்கென கடந்த ஓராண்டில் ரூ.9,125 கோடி அளவில் உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்தன் சங்கல்ப் கே சித்தி திட்டம்

- மத்திய பழங்குடியின விவகார அமைச்சர் அர்ஜுன் முண்டா–உள்ளூர் பழங்குடியினரின் உற்பத்தியை மேம்படுத்த சங்கல்ப் கே சித்தி திட்டத்தை துவங்கியுள்ளார்.
- TRIFEDன் புதிய அலுவலகத்தையும் அமைச்சர் திறன் பழங்குடியின விற்பனை மையங்கள்
- ஜேக்தல்பூர் – 2, ராக்சி – 3, ஜாம்கேஷ்பூர் – 1, சாராவித் – 1

## ஜான் ஹை டு ஜஹான் ஹை பிரச்சாரம்

- கிராமப்புறங்களில் உள்ள அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஜான் ஹை டு ஜஹான் ஹை என்ற பிரச்சாரம் சிறுபான்மை நல அமைச்சகத்தால் துவங்கப்பட்டுள்ளது.

## ஊட்டச்சத்து பற்றாக்குறை கணக்கெடுப்பு

- பாராளுமன்ற நிலைக்குழு மக்களிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைய ஒவ்வொரு தனிநபரிடமும் கணக்கெடுப்பு நடத்த மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் குழு அமைக்க கேட்டுக் கொண்டுள்ளது.
- நாட்டில் உள்ள 14 இலட்சம் அங்கன்வாடிகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரின் இலவச ரேஷன் பொருள் திட்டம் நவம்பர் மாதம் வரை நீட்டிப்பு

- பிரதமரின் ஏழைகள் நலன் திட்டத்தின் கீழ் இலவச ரேஷன் பொருள்களை வழங்குவதை அடுத்த 5 மாதங்களுக்கு நீட்டித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் விவரம்:

- வரும் ஜுலை முதல் நவம்பர் மாதம் வரை, தேசிண உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 81.35 கொடி பயனாளிகளுக்கு மாதந்தோறும் குடும்பத்தில் உள்ள நபர் ஒருவருக்கு 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப்படும்.
- இதற்காக கூடுதல் உணவு மானியமாக ரூ.64,031 கோடி செலவாகும். இந்த உணவு தானியங்களின் போக்குவரத்து மற்றும் கையாளுதல் ஆகியவற்றுக்கு ரூ.3,234,85 கோடி என மொத்தம் ரூ.67,266.44 கோடி கூடுதல் செலவாகும். இதனை மத்திய அரசு ஏற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் உணவு தானியத்தின் மொத்த அளவு 204 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்றும், இதன்மூலம் கரோனாவால் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வரும் ஏழைகள் பயன்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேம்–II (FAME II)

- மத்திய அரசு மின்சார வாகனங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் துவங்கியுள்ள பேம்–II திட்டத்தை மார்ச் 2024 வரை நீட்டித்துள்ளது.
- இந்த திட்டம் 2019 ஆண்டில் துவங்கப்பட்டது. 3 ஆண்டுகளுக்கு திட்டமிடப்பட்டு துவங்கப்பட்ட இத்திட்டம் தற்போது 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரின் ஜீவன் ஜோதி காப்பீட்டு திட்டம்: கடந்த நிதியாண்டில் ரூ.4,698 கோடி வழங்கல்

- பிரதமரின் ஜீவன் ஜோதி காப்பீட்டு திட்டத்தின் கீழ் இணைந்த காப்பீட்டுதாரர்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கடந்த நிதியாண்டில் ரூ.4,698.10 கோடி காப்பீட்டு தொகை வழங்கப்பட்டதாக மத்திய அரசு தெரித்துள்ளது.
- இது தொடர்பாக தகவல் அறியும் சட்த்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய நிதியமைச்சத்தின் கீழ் செயல்படும் நிதி சேவைகள் துறை அளித்துள்ள பதில்: பிரதமரின் ஜீவன் ஜோதி காப்பீட்டு திட்டத்தின் கீழ் இணைந்திருந்தவர்களின் மரணமடைந்த 2,34,905 பேரின் குடும்பத்தினருக்கு கடந்த நிதியாண்டில் ரூ.4,698.10 கோடி காப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### கருப்பு கார்பனுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் மூலம் இமாலய பனிப்பறைகள் உடைதலை கட்டுப்படுத்தலாம்: உலக வங்கி

- கரும் கார்பன் படிமங்கள் அதிகமாதலை குறைப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் இமயமலைப் பகுதியில் பனிவெடிப்புகள் ஏற்படுதலை குறைக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.
- தற்போதுள்ள அளவில் 50% வரை குறைவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பருவகால மாற்றங்களால் இந்துகுஷ் மலைப்பகுதியில் உள்ள பனிப்பாறைகள் 0.3 மீட்டர் மற்றும் மேற்கு பகுதியில் 0.1 மீட்டர் பனிப்பாறை அளவுகள் குறைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கரும் கார்பன் குறைந்த காலமே வாழும் தன்மையுடையதாய் இருப்பினும் உலக வெப்பமயமாதலில் அதிக பங்கெடுப்பதாக கார்பன்டை ஆக்ஸைடுடன் இணைந்து பங்களிக்கின்றது.

### 5வது பெருங்கடல்

- நேஷனல் ஜியோகிராபிக் இதழ் தெற்கு பெருங்கடலை 5வது பெருங்கடலாக அறிவித்துள்ளது.
- இந்த தென்னக பெருங்கடல் மூன்று பெருங்கடல்களை இணைக்கிறது.

### இந்தியாவின் பாலைவனமான களர் நிலங்கள் வரைபடம் வெளியீடு

- மத்திய சுற்றுச்சூழல் வளங்கள் மற்றும் பருவகால மாற்ற அமைச்சகம் இந்திய பாலைவனமாதல் மற்றும் களர் நிலங்கள் வரைபடத்தை வெளியிட்டுள்ளது.
- இந்திய விண்வெளி நிறுவனம், இஸ்ரோ ஆகியவை இணைந்து 2018–19 களர் நிலங்கள் வரைபடத்தை 2003–05 முதல் 2018–19 வரை தயாரித்து வெளியிட்டுள்ளது.
- சர்வதேச பாலைவனமாதலை தடுத்தல் களர் நில பயன்பாடு பெற்ற ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த பதிவு உருவாக்கப்பட உள்ளது.

### பூஜ்ஜிய கார்பன் உமிழ் இலக்கு

- ரிலையன்ஸ் நிறுவனம் 2025க்குள் தனது அனைத்து நிறுவனங்களிலும் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடையும் என ஆசியாவின் பெரும்பணக்காரர் முகேஷ் அம்பானி தெரிவித்துள்ளார்.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக சரிவு கரோனா பாதிப்பு எதிரொலி

- நாட்டின் பொருளாதாரம் கடந்த நிதியாண்டில் 7.3 சதவீதமாக சரிவைச் சந்தித்துள்ளது என மத்திய அரசு தெரிவித்தது.
- இது குறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வெளியிட்ட புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:
- கடந்த 2020–21 நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 7.3% சரிவைச் சந்தித்துள்ளது. இது, எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவான பின்னடைவேயாகும்.
- ஆசியாவின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார பலத்தைக் கொண்ட இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஜனவரி–மார்ச் காலகட்டத்தில் 1.6 சதவீதமாக இருந்தது. இது, முந்தைய டிசம்பர் காலாண்டு வளர்ச்சியான 0.5 சதவீதத்தைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும்.

### முக்கிய 8 துறைகளின் உற்பத்தி 56.1% அதிகரிப்பு

- முக்கிய 8 துறைகளின் உற்பத்தி கடந்த ஏப்ரல் மாதத்தில் 56.1 சதவீதம் ஏற்றம் கண்டுள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.
- இது குறித்து வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
- நாட்டின் முக்கிய 8 துறைகளான, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, நிலக்கரி, சுத்திகரிப்பு தயாரிப்புகள், உரம், உருக்கு, சிமெண்ட் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்தி பொது முடக்கம் காரணமாக கடந்த 2020–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 37.9 சதவீதம் பின்னடைவைக் கண்டது.
- இந்த நிலையில், நடப்பாண்டு ஏப்ரலில் அத்துறைகளின் உற்பத்தி விறுவிறுப்படைந்து 56.1 சதவீத வளர்ச்சியை தொட்டுள்ளது. அதே போன்று, நடப்பாண்டு மார்ச் மாதத்திலும் முக்கிய 8 துறைகளின் உற்பத்தி 11.4 வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### கரோனா இரண்டாவது அலையால் பொருளாதார பாதிப்பு பெரிய அளவில் இருக்காது தலைமைப் பொருளாதார ஆலோசகர்

- கரோனா இரண்டாவது அலையால் நாட்டின் பொருளாதார பாதிப்பு பெரிய அளவில் இருக்காது என்று மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் கே.வி.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 2022 நிதியாண்டில் 7.9%: பாரதஸ்டேட் வங்கி

- பாரத ஸ்டேட் வங்கி 2022ஆம் ஆண்டிற்கான இந்திய பொருளாதார வளர்ச்சி 79% ஆக இருக்கும் என கணித்துள்ளது.
- கரோனா இரண்டாவது அலையின் காரணமாக பொருளாதாரம் W வடிவில் மீட்சி அடையும் என அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 11% சரிவு

- கரோனா பேரிடர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காணப்பட்ட மந்தநிலை காரணமாக கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் நாட்டின் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 596 கோடி டாலர் (ரூ.43,717.26 கோடி) அளவுக்கே இருந்தது. இது, முந்தைய 2019–20–ஆம் நிதியாண்டில் இந்தியா ஏற்றுமதி செய்த கடல் உணவுப் பொருள்களின் மதிப்பான 668 கோடி டாலருடன் (ரூ.46,662.85 கோடி) ஒப்பிடுகையில் 10.88 சதவீதம் குறைவாகும்.
- கணக்கீட்டு நிதியாண்டுகளில் இதன் ஏற்றுமதி அளவின் அடிப்படையிலும் 12,89.651 டன்னிலிருந்து 11,49.341 டன்னாக சரிந்துள்ளது.
- கடந்த நிதியாண்டில் கடல் உணவுப் பொருள்களின் மூலம் கிடைத்த வருவாயில் பதப்படுத்தப்பட்ட இறாலின் பங்களிப்பு 74.31 சதவீதமாக இருந்தது. அதே போன்று, அளவின் அடிப்படையிலும் இது 51.36 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

## நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 9.5%–ஆக இருக்கும்

- 2021–22–ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கணித்துள்ளது.
- முன்பு பொருளாதார வளர்ச்சி 10.5 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்த நிலையில், கரோனா தொற்றின் 2–அவது அலை பரவல் காரணமாக மதிப்பீட்டை ஆர்பிஐ குறைத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக் குழுக் கூட்டம் ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளதாவது:
- கரோனா தொற்று பரவல் காரணமாக பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும். இத்தகைய இக்கட்டான சூழலில், மத்திய அரசு அதிக அளவில் கடன் பெறுவதைக் குறைக்கும் நோக்கில், மத்திய அரசின் நிதிப் பத்திரங்களை வாங்குவதற்கான திட்டத்தை ஆர்பிஐ அமல்படுத்தி வருகிறது.
- அத்திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டின் ஏப்ரல், மே மாதங்களில் ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான நிதிப் பத்திரங்கள் வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. நடப்பு மே மாதத்தில் ரூ.40,000 கோடி மதிப்பிலான நிதிப் பத்திரங்கள் வாங்கப்படவுள்ளன. இத்திட்டத்தை மேலும் நீட்டிக்க ஆர்பிஐ முடிவெடுத்துள்ளது.
- நடப்பு நிதியாண்டின் 2–ஆவது காலாண்டில் ரூ.1.2 லட்சம் கோடி மதிப்பிலான மத்திய அரசின் நிதிப் பத்திரங்களை ஆர்பிஐ வாங்கவுள்ளது.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீதமாக இருக்கும். நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 18.5 சதவீதமாகவும் 2–ஆவது காலாண்டில் 7.9 சதவீதமாகவும், 3–ஆவது காலாண்டில் 7.2 சதவீதமாகவும், இறுதி காலாண்டில் 6.6 சதவீதமாகவும் ஜிடிபி வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நிதிக் கொள்கைக் குழுக்கூட்டத்தின் போது ஜிடிபி வளர்ச்சி 10.5 சதவீதம் இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்குப் பிறகு கரோனா தொற்று பரவல், நகரங்கள் தொடங்கி கிராமங்கள் வரை அதிகரித்துக் காணப்பட்டதால் தற்போது ஜிடிபி வளர்ச்சி மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது.

### வட்டி விகிதங்களில் மாற்றமில்லை

- ரிசர்வ் வங்கியிடமிருந்து (ஆர்பிஐ) பிற வங்கிகள் பெறும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தில் (ரெப்போ ரேட்) மாற்றம் இன்றி 4 சதவீதமாகவே தொடரும் என ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
- அதேபோல், பிற வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் தொகைக்கான வட்டியிலும் (ரிவர்ஸ் ரெப்போ ரேட்) மாற்றம் செய்யப்படவில்லை. அது 3.35 சதவீதமாகத் தொடரும் என்று ஆர்பிஐ அறிவித்துள்ளது.

## 2031–32க்குள் கார்பன் நடுநிலைமை நிறுவனம் என்ற நிலையில் HDFC அடையும்

- HDFC வங்கி 2031–32க்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து மின்சாரம் பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளால் கார்பன் உமிழ்வற்ற நிலையை அடைந்த நிறுவனமாக மாறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மே மாதத்தில் ரூ.1.02 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூல்

- கடந்த மே மாதத்தில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாயாக ரூ.1,02,709 கோடி வசூலாகியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஜிஎஸ்டி வருவாய் தொடர்ந்து 8–ஆவது மாதமாக ரூ.1 லட்சம் கோடியைக் கடந்துள்ளது.
- கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த ஆண்டில் அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தால் பொருளாதார நடவடிக்கைகள் கடும் பின்னடைவைச் சந்தித்தன. அதன் காரணமாக சரக்கு–சேவை வரி வருவாயும் குறைந்தது. முக்கியமாக, கடந்த ஆண்டு ஏப்ரலில் குறைந்தபட்ச அளவாக ரூ.32,172 கோடி மட்டுமே வருவாய் கிடைத்தது.
- பொது முடக்கத்துக்கு தளர்வுகள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொருளாதார நடவடிக்கைகள் சீரடைந்தன.

## 2021–இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 8.3%

- 2021–ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகவும், அதுவே 2022–ஆம் ஆண்டு 7.5 சதவீதமாகவும் இருக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது.
- இதே நேரத்தில் சர்வதேச பொருளாதாரம் 2021–ஆம் ஆண்டு 5.6 சதவீதம் வளரும் என்று உலக வங்கி கூறியுள்ளது.
- உலக வங்கியின் சர்வதேச பொருளாதார அறிக்கை வாஷிங்டனில் வெளியிடப்பட்டது. இதில் இந்தியா பொருளாதாரம் குறித்து கூறப்பட்டுள்ளதாவது:
- கரோனா இரண்டாவது அலையின் தாக்கத்தில் இருந்து இந்தியா மீண்டு வருகிறது. முன்னதாக, முதல் அலைத் தாக்கத்தில் இருந்து இந்தியப் பொருளாதாரம் வேகமாக எழும்ப முயன்றபோது இரண்டாவது அலை தாக்கியது.
- எனினும், கடந்த நிதியாண்டின் இரண்டாவது பகுதியில் இந்தியப் பொருளாதாரம் சிறப்பாக இருந்தது. முக்கியமாக சேவைகள் துறை சிறப்பாக செயல்பட்டது.
- இப்போது இந்திய அரசு எடுத்துள்ள கொள்கை முடிவுகளால் உள்கட்டமைப்பு, கிராமப்புற மேம்பாடு, சுகாதாரத் துறையில் செலவிடப்படுவது அதிகரித்துள்ளது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் எதிர்பார்த்ததை விட வலுவான வேகமான மீட்சி இருக்கும்.
- எனவே, 2021–ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகும், 2022–இல் 7.5 சதவீதமாகவும், 2023–இல் 6.5 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கரோனா பிரச்சனையால் இந்தியாவில் நுகர்வு, முதலீடு குறைந்துள்ளது. அடுத்து ஆண்டுகளில் இது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். பணி நிரந்தரமின்மை தொடர்பான அச்சம், வருமானம் அதிகரிக்காதது போன்றவை பிரச்னைக்குரிய விஷயங்களாக தொடரும். வீட்டில் போடப்படும் பட்ஜெட் தொடங்கி பெரு நிறுவனங்கள், வங்கிகள் நிதிநிலை அறிக்கை வரை இதன் தாக்கம் அடுத்து வரும் அண்டுகளில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

## இரு பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரம்

- இரண்டு பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.
- அந்த வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- நடப்பு 2021–22–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த பிப்ரவரி 1–ஆம் தேதி தாக்கல் செய்தார். அப்போது, இரு பொதுத்துறை வங்கிகளையும் ஒரு காப்பீட்டு நிறுவனத்தையும் தனியார்மயமாக்க இருப்பதாக அவர் அறிவித்தார்.
- எந்த இரு வங்கிகளைத் தனியார் மயமாக்குவது என்பது தொடர்பாக நீதி ஆயோக் ஆய்வு நடத்தியது. சில வங்கிகளின் பெயர்களை மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபாவுக்கு நீதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.
- சென்ட்ரல் ஃபேங்க் ஆஃப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, பேங்க் ஆஃப் இந்தியா உள்ளிட்ட வங்கிகளின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பரிந்தரைகள் மீது முக்கிய துறைகளின் செயலர்கள் ஆய்வு நடத்த உள்ளனர்.
- பொருளாதார விவகாரங்கள் துறைக்கான செயலர், வருவாய் துறைக்கான செயலர், செலவினத்துறைக்கான செயலர், பெருநிறுவன

விவகாரங்கள் துறைக்கான செயலர், சட்ட விவகாரங்கள் துறை செயலர், முதலீட்டு–பொதுச் சொத்துகள் மேலாண்மை துறைக்கான செயலர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

## மத்திய நிதியமைச்சர் தலைமையில் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சில் கூட்டம் நடைபெறுகிறது.
- கரோனா தொற்று, கருப்புப் பூஞ்சை பாதிப்பு உள்ளிட்டவற்றுக்கு சிகிச்சை அளிக்கப்ப பயன்படும் மருந்துகள் மீது விதிக்கப்படும் சரக்கு–சேவை வரியை நீக்குவது தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.
- காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் 44–ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் அனுராக் தாக்குர், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்கள், மத்திய, மாநில அரசுகளின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

## கருப்பு பூஞ்சை மருந்துக்கு ஜிஎஸ்டி ரத்து

- கருப்புப் பூஞ்சைக்கான ஆம்ஃபோடெரிசின்–பி, கரோனாவுக்கான டோசிலிஜுமாப் ஆகிய மருந்துகளுக்கு சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.
- மருத்துவ ஆக்சிஜன், ஆக்சிஜன் செறிவூட்டிகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மீதான சரக்கு–சேவை வரி குறைக்கப்பட்டுள்ளது.
- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைடிபற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- 44–ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இதில், மத்திய நிதித்துறை இணையமைச்சர் அனுராக் தாக்குர், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நிதியைமைச்சர்கள், மத்திய, மாநில அரசுகளின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
- மருத்துவ ஆக்சிஜன், பல்ஸ் ஆக்சிமீட்டர், கை சுத்திகரிப்பான், அத்தியாவசிய மருந்துப் பொருள்கள், ஆக்சிஜன் செறிவூட்டிகள் உள்ளிட்டவற்றின் மீது விதிக்கப்படும் சரக்கு–சேவை வரியை ரத்து செய்வது தொடர்பாக ஆய்வு செய்ய மாநில அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டிருந்தது.
- அக்குழு அளித்த அறிக்கை குறித்து ஜிஎஸ்டி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இறுதியில் மருந்துப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் மீதான சரக்கு–சேவை வரியைக் குறைப்பதற்கு கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

| | தற்போதைய ஜிஎஸ்டி | மாற்றி அமைக்கப்பட்ட ஜிஎஸ்டி |
|---|---|---|
| ஆம்ஃபோ டெரிசின்–பி | 5% | 0 |
| டோசிலிஜுமாப் | 5% | 0 |
| பல்ஸ் ஆக்சிமீட்டர் | 12% | 5% |
| கை சுத்திகரிப்பான் | 18% | 5% |
| உடல் வெப்பநிலை பரிசோதனைக் கருவி | 18% | 5% |
| ஆம்புலன்ஸ் | 28% | 12% |
| கரோனா பரிசோதனைக் கருவிகள் | 12% | 5% |
| மருத்துவ தர ஆக்சிஜன் | 12% | 5% |
| சுவாசக் கருவி | 12% | 5% |
| ரெம்டெசிவிர் | 12% | 5% |

## பணவீக்கம் வரலாறு காணாத உயர்வு: மே மாதத்தில் 12.94% எட்டியது

- நாட்டின் பொதுப் பணவீக்கம் சென்ற மே மாதத்தில் வரலாறு காணாத அளவுக்கு 12.94 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:
- மொத்த விற்பனை விலை குறியீட்டெண் (டபிள்யூபிஐ) அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்கம் நடப்பாண்டு மே மாதத்தில் 12.94 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இது, முன்னெப்போதும் காணப்படாத உச்சபட்ச அளவாகும். கச்சா எண்ணெய், உற்பத்தி துறை பொருள்களின் விலை உயர்வே இந்த வரலாறு காணாத பணவீக்கத்துக்கு முக்கிய காரணம்.

- இப்பணவீக்கம் கடந்தாண்டு மே மாதத்தில் – 3.37 சதவீதமாகவும், 2021 ஏப்ரலில் 10.49 சதவீதம் என்ற அளவில் இரட்டை இலக்கத்தையம் தொட்டது.
- டபிள்யூபிஐ அடிப்படையில் மதிப்பிடப்படும் பணவீக்கமானது தொடர்ந்து ஐந்தாவது மாதமாக மே–யிலும் அதிகரிப்பைக் கண்டுள்ளது.
- மதிப்பீட்டு மாதத்தில் உணவுப் பொருள் தொகுப்புக்கான பணவீக்கமானது 1.96 சதவீதத்திலிருந்து 5.01 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதுவே சில்லறைப் பணவீக்கம் கணிசமாக உயர்ந்துள்ளதற்கு முக்கிய காரணம்.
- மேலும். ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள 6 சதவீதம் என்ற வரம்பைக் காட்லும் மே மாதத்தில் பணவீக்கம் சற்று அதிகமாகவே உள்ளது என மத்திய அரசின் தேசிய புள்ளியியல் அலுவலக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய உள்நாட்டு உற்பத்தி 2022ல் 9.5% ஆக இருக்கும்

- இந்திய தொழில் கூட்டமைவு (CII) 2022ல் இந்தியாவில் உள்நாட்டு உற்பத்தி 9.5% ஆக இருக்கும் என கணித்துள்ளது.

## உபரி நிதியை அரசுக்கு அளிப்பதில் இந்திய ரிசர்வ் வங்கி 2ம் இடம்

- அரசிற்கு தன்னிடமுள்ள உபரி நிதியை அளிப்பதில் உலக அளவில் துருக்கி ரிசர்வ் வங்கி முதலிடத்திலும் இந்திய ரிசர்வ் வங்கி 2ம் இடத்திலும் உள்ளது.
- துருக்கி ரிசர்வ் வங்கி அதன் GDPயில் 0.5% அளவிற்கு அரசுக்கு அளித்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி 0.44%4 அளவிற்கு அளித்துள்ளது.

## பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களில் 100% அந்நிய நேரடி முதலீடு

- பொதுத்துறை எண்ணெய்–எரிவாயு நிறுவனங்களில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதற்கான வரைவு பரிந்துரை அறிக்கையை மத்திய வர்த்தகம்–தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது தொடர்பாக மற்ற அமைச்சகங்களிடம் கருத்துகளைக் கோருவதற்காக இந்த வரைவு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்நிறுவனங்களைத் தனியாருக்கு ஒப்படைப்பதற்கு மத்திய அரசு தயாராகி வருகிறது.
- இந்த வரைவு பரிந்துரை அறிக்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தால், பாரத் பெட்ரோலியம் நிறுவனம் (பிபிசிஎல்) தனியார் மயமாக்கப்படும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அந்நிறுவனம் இந்தியாவில் கச்சா எண்ணெயை சுத்திகரிப்பு செய்யும் 2–ஆவது மிகப் பெரிய நிறுவனம் ஆகும்.
- பிபிசிஎல் நிறுவனத்தில் மத்திய அரசு தற்போது 52.98 சதவீத பங்குகளை வைத்துள்ளது. 100 சதவீத அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டால், அந்நிறுவனத்தின் மொத்த பங்குகளையும் விற்பனை செய்வதற்கு மத்திய அரசு ஆயத்தமாகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொருளாதாரத்தை ஊக்குவிக்க மேலும் பல நடவடிக்கைகள்

- கரோனா இரண்டாவது அலையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிக்க மத்திய அரசு மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக மத்திய அரசு ரூ.3 லட்சம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்க வேண்டும் என்ற சில தொழில் கூட்டமைப்புகள் கோரிக்கை வைத்துள்ளன. இரண்டாவது அலையால் ஏற்பட்ட பொருளாதார சுணக்கத்தால் ரூ.2 லட்சம் கோடி மதிப்பிலான உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கியும் அறிவித்துள்ளது.
- கடந்த 2021–22 பட்ஜெட்டின் போது கரோனா முதல் அலையால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புகளில் இருந்து மீள நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பல்வேறு சலுகைகளை அறிவித்தார். இப்போது, இரண்டாவது அலை காரணமாக அமர்படுத்தப்பட்ட பொது முடக்கம் பல்வேறு தரப்பு மக்களின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளது. இது தொடர்பாக எழுந்துள்ள கோரிக்கைகளை பரிசீலித்து மத்திய அரசு அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கே.வி. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
- கடந்த ஆண்டைப் போல, இந்த ஆண்டிலும் பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
- கட்டுமானத் துறையில் அரசு செலவிடுவது 15

சதவீதம் அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு மதிப்பில் கட்டுமானத் துறைக்கான ஒதுக்கீடு 34 சதவீதமாக கடந்த 6 ஆண்டுகளில் அதிகரித்து விட்டது.

## திவ்யங்தா கேல் கேந்திரங்கள்

- மத்திய சமூக நீதி மற்றும் வலுப்படுத்தல் அமைச்சர் தவார் சந்த் கெலட் நாடு முழுவதும் விளையாட்டு வீர்களுக்காகவும் குறிப்பாக மாற்றுத்திறனாளி வீரர்களுக்காக திவியங்தா கேல் கேந்திராவை துவங்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.
- சமாரிக் அதி காரிதா சிவில் என்ற திட்டத்தின் கீழ் இந்த திவ்யாங்வன் துவங்கப்பட்டுள்ளது.

## பான் கார்டு செயலிழப்பு

- ஜுன் 30க்கு பிறகு ஆதாருடன் இணைக்கப்படாத பான் கார்டுக்குள் செயலிழந்து விடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- புதிய நேரடி வரி வாரியம் வருமானவரிச் சட்டம் 1961ன் 234H பதிவின் கீழ் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.
- ஜுன் 30க்கு பிறகு ஆதாருடன் இணைக்கப்படாத பான் கார்டுகளுக்கு 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

## சுவிஸ் வங்கியில் பணம் செலுத்தியவர்களில் இந்தியா 51வது இடம்

- உலக அளவில் சுவிஸ் வங்கிகளில் பணம் செலுத்தியவர்கள் பட்டியலை சுவிஸ் தேசிய வங்கி வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலில் இங்கிலாந்து முதலிடத்தில் உள்ளது, அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவிலிருந்து 20700 என்ற அளவிற்கு நிதி ஸ்விஸ் வங்கிகளில் சேமிக்கப்பட்டது.
- நியுசிலாந்து, நார்வே, சுவீடன், டென்மார்க், ஹங்கேரி, மொரிஷியஸ், பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு முன்னர் இந்தியா உள்ளது.

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5%: எஸ் & பி

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான எஸ்&பி 9.5 சதவீதமாக குறைத்துள்ளது.
- இதுகுறித்து அந்த நிறுவனம் கூறியுள்ளதாவது: நடப்பாண்டு ஏப்ரல் மே மாதங்களில் கரோனா இரண்டாவதது அலை காரணமாக மாநிலங்கள் பிறப்பித்த பொதுமுடக்கம் பொருளாதார நடவடிக்கைகளில் கடும் பின்னடைவை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில், கரோனா மூன்றாவது அலை உருவாக்கக்கூடும் என்ற கணிப்பு இடர்பாட்டை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

## அந்நிய நேரடி முதலீடு 60% அதிகரிப்பு

- இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ) கடந்த ஏப்ரல் மாதத்தில் 60 சதவீதம் அதிகரித்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
- 2021 ஏப்ரலில் இந்தியாவுக்கு வந்த அந்நிய நேரடி முதலீடு 60 சதவீதம் அதிகரித்து 444 கோடி டாலரை (இந்திய மதிப்பில் சுமார் ரூ.33,000 கோடி) எட்டியுள்ளது. இது, முந்தைய 2020 ஏப்ரல் மாதத்தில் 277 கோடி டாலராக மட்டுமே இருந்தது.

## ஸ்டேட் வங்கியின் ஆரோக்கியம் சுகாதார வர்த்தக கடன்

- கரோனா தொற்று காலத்தில் சுகாதார துறை நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டிற்காக ஆரோக்கியம் என்ற சுகாதார கடன் திட்டத்தை துவங்கியுள்ளது.
- 10 ஆண்டுகளில் செலுத்தப்படக்கூடிய 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கடன்கள் வழங்கப்பட உள்ளது.

SBI

- தலைவர் – தினேஷ்குமார் காரா
- தலைமையிடம் – மும்பை
- துவக்கம் – 1955 ஜுலை 1

## சுகாதாரத் துறை கட்டமைப்புக்கு ரூ.50,000 கோடி கடன்

- கரோனா நோயத்தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட துறைகளை மீட்டெடுக்கும் வகையில் ரூ.1.1 லட்சம் கோடி கடன் உத்தரவாதத் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.
- சுகாதாரத் துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.50,000 கோடி கடன், சுற்றுலா உள்ளிட்ட பிற துறைகளுக்கு ரூ.60,000 கோடி

கடன் உத்தரவாதத் திட்டத்தை அவர் அறிவித்தார்.

- பொருளாதார வளர்ச்சியை: கரோனா தொற்று பரவலால் அமல்படுத்தப்பட்ட பொது முடக்கம் காரணமாக சுற்றுலா, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகள் பாதிப்பைச் சந்தித்தன. அத்துறைகளை இயல்பு நிலைக்கு மீட்டெடுத்து, பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- மருத்துவமனைகளுக்கு ரூ.100 கோடி: கரோனா தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட துறைகளுக்கு ரூ.1.1 லட்சம் கோடி மதிப்பிலான கடனுதவித் திட்டம் செயல்படுத்தப்படும். நாட்டில் சுகாதாரக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டம் பெரிதும் உதவும். இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளுக்கு அதிகபட்சமாக தலா ரூ.100 கோடி வரை 3 ஆண்டுகளுக்குக் கடன் வழங்கப்படும்.
- அதிகபட்ச வட்டி 7.95 சதவீதம்: இந்தக் கடனுக்கு அதிகபட்ச வட்டியானது 7.95 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்களுக்கும் கடனுதவி வழங்கப்படும்.
- அவசரகால கடன் வட்டி 7.5 சதவீதம்: இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள், மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்டவற்றில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலையை நிறுவுவதற்காக ரூ.2 கோடி வரை வழங்கப்படும் கடன்களுக்கான 100 சதவீத உத்தரவாதத்தையும் மத்திய அரசே வழங்கும்.
- அவசரகால கடன் உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கான அதிகபட்ச வட்டி 7.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்குக் குறைவான வட்டியிலும் கடன்களை வங்கிகள் வழங்கலாம்.
- சுகாதாரதக் கட்டமைப்பு: பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகக் கடந்த மார்ச் 31–ஆம் தேதி வரை ரூ.15,000 கோடி வழங்கப்பட்டிருந்தது. தற்போது கூடுதலாக ரூ.23,220 கோடி வழங்கப்படவுள்ளது. இதன் மூலமாக மருத்துவமனைகளில் குழந்தைகள் நலன் தொடர்பான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## இந்தியர்களின் வங்கி செலுத்தல் அதிகரிப்பு

- சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி 2020ம் ஆண்டில் இந்தியாவில் வங்கிகளில் செலுத்தப்பட்ட தொகை GDPயுடன் ஒப்பிடுகையில் 56% அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

வாய்மையே வெல்லும்




# 5.அறிவியல்

## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### உருமாறிய கரோனா தீநுண்மிகளுக்கு புதிய அடையாளப் பெயர்

- பல்வேறு நாடுகளில் கண்டறியப்பட்ட உருமாறிய கரோனா தீநுண்மிகளை எளிதில் அடையாளம் காணும் நோக்கில் அவற்றுக்குப் புதிய பெயர்களை உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ளது.
- அதன்படி, இந்தியாவில் கண்டறியப்பட்ட கரோனா தீநுண்மிகளுக்கு "கப்பா", "டெல்டா" என்ற பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.
- மரபணு மாற்றம் அடைந்த உருமாறிய கரோனா தீநுண்மிகள் பல நாடுகளில் பரவின. அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக அறிவியல் பெயர்கள் வழங்கப்பட்டன. இந்தியாவில் முதல் முதலில் கண்டறியப்பட்ட கரோனா தீநுண்மிகளுக்கு பி.1.617.1, பி.1.617.2 என்ற அறிவியல் பெயர்கள் வழங்கப்பட்டன.
- உருமாறிய கரோனா தீநுண்மிகளுக்கு கிரேக்க எழுத்துகளைப் பெயராக வைக்கலாம் என்று அந்தக் குழு பரிந்துரை அளித்தது. அதை உலக சுகாதார அமைப்பு ஏற்றுக் கொண்டது.
- புதிய பெயர்கள்: இந்தியாவில் முதல் முதலாகக் கண்டறியப்பட்ட பி.1.617.1 வகை கரோனா தீநுண்மிக்கு "கப்பா" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தியாவில் கண்டறியப்பட்ட பி.1.617.2 வகை தீநுண்மிக்கு "டெல்டா" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- பிரிட்டனில் முதல் முதலில் கண்டறியப்பட்ட பி.1.1.7 என்ற உருமாறிய வகை கரோனா தீநுண்மிக்கு "ஆல்ஃபா" எனவும், தென்னாப்பிரிக்காவில் தோன்றிய பி.1.351 என்ற தீநுண்மிக்கு "பீட்டா" எனவும், பிரேஸிலில் கண்டறியப்பட்ட பி.1 வகை கரோனா தீநுண்மிக்கு "காமா" எனவும் பெயரிடப்பட்டுள்ளது.
- பிரேஸிலில் கண்டறியப்பட்ட மற்றொரு பி.2 வகை உருமாறிய கரோனா தீநுண்மிக்கு "ஜீட்டா" எனவும் அமெரிக்காவில் முதல் முதலாகக் கண்டறியப்பட்ட கரோனா தீநுண்மிகளுக்கு "எப்சிலான்", "லோட்டா" எனவும் உலக சுகாதார அமைப்பு பெயர் சூட்டியுள்ளது.

### சீனாவில் முதல்முறையாக ஒருவருக்கு ஹெச்10என்3 பறவைக் காய்ச்சல்

- "ஹெச்10என்3" எனப்படும் பறவைக் காய்ச்சல் நோய்த்தொற்று சீனாவில் ஒருவரிடம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வகை தீநுண்மியால் மனிதர் ஒருவர் பாதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.
- கோழிப் பண்ணைகளில் பரவி வரும் "ஹெச்10என்3" தீநுண்மியைப் போலவே, "ஹெச்5என்8"-ம் பறவைக் காய்ச்சலை ஏற்படுத்தும் "இன்புளுயன்ஸா-ஏ" தீநுண்மியின் துணை வகையாகும். இந்த வகை தீநுண்மிகளால் மனிதர்களுக்கு உயிரிழந்த அபாயம் குறைவு என்றாலும், பண்ணைப் பறவைகளுக்கும், வனப் பறவைகளுக்கும் இந்தத் தீநுண்மிகள் பேரழிவை ஏற்படுத்துபவை என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

### "AmbiTAG" இந்தியாவின் முதல் வெப்பநிலை தகவல் கருவி

- பஞ்சாபின் ரோபார் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT Ropar) முழுவதுமாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட "Ambi TAG" என்ற வெப்பநிலை கட்டுப்படுத்தும் தகவல் கருவியை வடிவமைத்து உள்ளது.

- அழுகும் பொருட்கள் மற்றும் உடல் உறுப்புகள் சரியான வெப்பநிலையில் ஓரிடம் விட்டு மற்றொரு இடம் கடத்துவதற்கு இந்த கருவி பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசியாவின் முதல் சர்வதேச நினைவாற்றல் கல்வி செயற்கூட்டம்

- ஆசியாவின் முதல் நினைவாற்றல் கல்வி செயற்கூடத்தை சென்னை 117 காணலி காட்சி மூலம் நடத்தியுள்ளது.
- இந்திய நினைவாற்றல் கல்விக்கான இணையதளம்.
- நாட்டின் முதல் கூட்டத்தை சர்வதேச நினைவாற்றல் கல்வி கூட்டமைப்பின் கீழ் நடத்தியுள்ளது.
- சர்வதேச நினைவு கல்வி கூட்டமைவு ஆம்ஸ்டர்டமில் அமைந்துள்ளது.

## காற்றுச் சூழல் மூலம் புயலை கண்டறியும் புதிய தொழில்நுட்பம்

- புயல் ஏற்பட இருப்பதை செயற்கைக்கோள் கண்டுபிடிப்பதற்கு முன்பே, காற்றுச்சுழல் மூலம் அதனைக் கண்டுபிடிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் புயலை முன்கூட்டியே கண்டறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உயிர்சேதம் மற்றும் பொருள் சேதத்தை தவிர்க்க முடியும்.
- இதுவரை, தொலை உணர்வு செயற்கை கோள்கள் மூலம் புயல் உருவாவது முன்கூட்டியே கண்டறியப்பட்டு வந்தது. வெப்பமான கடலின் மேல் பரப்பில், காற்றழுத்த தாழ்வு பகுதிய உருவான பின்பே, செயற்கைகோள் படங்கள் மூலம் இவற்றை அறிய முடியும். இந்த கண்டுபிடிப்புக்கும், புயல் தாக்குவதற்கும் அதிக இடைவெளி இருப்பது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும்.
- வடக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் காற்றழுத்தம் உருவாவதை செயற்கைகோள் படம்பிடிப்பதற்கு முன்பே, காற்றுச் சூழல் உருவாகிறது. இந்த புயல் சூழல் தான், காற்றழுத்த தாழ்வு பகுதியை உருவாக்கும் முக்கிய அம்சம்.
- இந்த காற்றச் சுழலை கண்டறியும் புதிய தொழில்நுட்பத்தை காரக்பூர் ஐஐடி விஞ்ஞானிகள் ஜியா ஆல்பர்ட், விஷ்ணுப்பிரியா சாகு மற்றும் பிரசாத் கோ.பாஸ்கரன் ஆகியோர் கண்டறிந்துள்ளனர். அவர்களின் ஆய்வு திட்டத்துக்கு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பதுறையின் கீழ் உள்ள பருவநிலை மாற்ற திட்டம் உதவியது. இந்த காற்றுச் சூழலை ஆய்வு செய்யும் தொழில்நுட்பம் மூலம் வட இந்திய பெருங்கடல் பகுதியில் உருவாகும் புயல்களை செயற்கைகோள் கண்டறிவதற்கு முன்பே கண்டறிய முடியும். இந்த ஆய்பு கட்டுரை "அட்மாஸ்பெரிக் ரிசர்ச்" என்ற இதழில் சமீபத்தில் வெளியானது.

## சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பத் தயாராகிறது சீனா

- தனது சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்ப சீனா தயாராகி வருகிறது; வீரர்கள் அனுப்பப்படவுள்ள ராக்கெட் ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.
- சீன விண்வெளி நிலையத்துக்கு அடுத்த வாரம் அனுப்பப்படவுள்ள மூன்று விண்வெளி வீரர்கள், விண்வெளி நிலையத்தில் 3 மாதங்கள் தங்கியிருந்து கட்டமைப்பு, பராமரிப்புப் பணி மற்றும் அறிவியல் பரிசோதனைகளில் ஈடுபடுவார்கள்.
- சீனா தனக்கு என சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைத்து வருகிறது. தியான்ஹே எனப்படும் இந்த விண்வெளி நிலையத்தின் பிரதான பகுதி கடந்த ஏப்ரல் 29–ஆம் தேதி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. கடந்த மாதம் ஒரு விண்கலம் மூலம் எரிபொருள், உணவு, வீரர்களை விண்வெளிக்கு உபகரணங்கள் ஆகியவை அனுப்பிவைக்கப்பட்டன.
- இந்நிலையில், மூன்று விண்வெளி வீரர்கள் செல்லவுள்ள சென்ஷோ–12 விண்கலத்தை ஏற்றிக்கொண்டு செல்லும் லாங் மார்ச்–2எஃப் ஒய் 12 ராக்கெட் வடமேற்கு சீனாவில் உள்ள ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக சீன விண்வெளி பொறியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.
- "முதல்முறையாக விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்படவுள்ள மூவரும் ஆண்கள்; எதிர்காலத்தில் விண்வெளி வீராங்கனைகளும் அனுப்பப்படுவர்" என சீன விண்வெளி நிறுவனத்தின் அதிகாரியும், சீனாவின் முதல் விண்வெளி வீரரருமான யாங் லிவி தெரிவித்தார்.

## மீண்டும் தொடங்கிய ஈரான் அணுசக்தி பேச்சுவார்த்தை

- ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்காவை மீண்டும் இணைப்பதற்கான அடுத்தகட்டப் பேச்சுவார்த்தையை வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் தொடங்கினர்.
- இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- ஈரானுடனான 2015–ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக பல கட்டங்களாக வியன்னாவில் நடைபெற்று வரும் மாநா மீண்டும் தொடங்கியது.

## வெள்ளிக்கோளிற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டம்

- ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் வெள்ளி கிரகத்தை பற்றி ஆராய 'EnVision' என்ற திட்டம் 2030க்குள் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

## இந்தியாவில் கண்டறியப்பட்டிருக்கும் புதிய "டெல்டா–பிளஸ்" வகை கரோனா தீநுண்மி

- இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்டு வேகமாகப் பரவி வந்த டெல்டா (பி.1.617.2) வகை தீநுண்மி இப்போது டெல்டா–பிளஸ் (ஏஒய்.1) வகையாக உருமாற்றம் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த புதிய உருமாறிய வகை கரோனா தாக்கம் இப்போது குறைந்த அளவில் இருப்பதால், இதனால் இந்தியாவில் இப்போதைக்கு ஆபத்தில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## லண்டன் ராயல் வேதியியல் கழக உறுப்பினர்களாக தியாகராஜர் கல்லூரி பேராசிரியர்கள் இருவர் தேர்வு

- லண்டனில் இயங்கி வரும் ராயல் வேதியியல் கழகத்தின் உறுப்பினர்களாக மதுரை தியாகராஜர் கல்லூரி பேராசிரியர்கள் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- சர்வதேச அளவில் உயர் கல்வி நிறுவனங்களில் வேதியியல் துறையில் சிறந்து விளங்குபவர்களும் அங்கீகாரம் வழங்கும் அமைப்பாக ராயல் வேதியியல் கழகம் உள்ளது. லண்டனை தலையமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் இந்த அமைப்பு சர்வதேச நாடுகளில் உயர்கல்வி நிறுவனங்களில் வேதியியல் துறையில் ஆய்வு மேற்கொள்பவார்கள், புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும் பேராசிரியர்களுக்கு உறுப்பினர் பொறுப்பு வழங்கி கௌரவித்து வருகிறது. இந்நிலையில் மதுரை தியாகராஜர் கலை அறிவியல் கல்லூரியின் வேதியியல் துணை இணைப்பேராசிரியர்கள் பி.பிரகாஷ், பி.தர்மராஜ் ஆகிய இருவரும் லண்டன் ராயல் வேதியியல் கழகத்தின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ரோபோட்டிக் அறுவை சிகிச்சை கருவி கண்டுபிடிப்புக்கு தேசிய விருது

- உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் குறைந்த விலையில் அதிநவீன ரோபோட்டிக் அறுவை சிகிச்சை கருவியை உருவாக்கிய சென்னை எஸ். எஸ். இன்னொவேஷன்ஸ் நிறுவனத்துக்கு சிறந்த கண்டுபிடிப்புக்கான தேசிய விருது அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.
- ரோபோட்டிக் அறுவை சிகிச்சை மருத்துவரான சுதீர் ஸ்ரீவத்சவா எஸ்எஸ்ஐ மந்த்ரா என்ற பெயரில் அதிநவீன, மேம்படுத்தப்பட்ட, விலை குறைந்த, ரோபோ உதவியுடன் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் கருவியை வடிவமைத்துத் தயாரித்துள்ளார்.
- ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த கருவி உதவியுடன் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு துறை நோயாளிகளுக்கு ரோபோட்டிக் முறையில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்துள்ளனர்.

## சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பி சீனா சாதனை

- சொந்த விண்வெளி நிலையத்துக்கு 3 வீரர்களை முதல்முறையாக அனுப்பி சீனா சாதனை படைத்துள்ளது.
- சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளிக்கு வீரர்களை அனுப்பியுள்ள அந்த நாடு, இதுவரை இல்லாத வகையில் 380 கி.மீ. தொலைவுக்கு அவர்களை அனுப்பியுள்ளது.
- விண்வெளியில் சீனா அமைத்து வரும் தியான்காங் ஆய்வு நிலைத்தின் பிரதான பகுதியான தியான்ஹே கடந்த ஏப்ரல் மாதம் 29–ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளும் வீரர்கள் அதில் தங்கியிருப்பதற்குத் தேவையான பொருள்கள், உபகரணங்கள் அடங்கிய சரக்குக் கலமான தியான்ஷோ, கடந்த மாதம் செலுத்தப்பட்டு தியான்ஹோ கலத்துடன் இணைக்கப்பட்டது.

### "Project O2 for India"

- மருத்துவ ஆக்ஸிஜன் முறைப்படுத்தி தேவையான இடங்களில் வழங்க மத்திய அரசு "Project O2 for India" என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.
- அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்திலிருந்து இந்த திட்டத்திற்கு வரைவு அளிக்கப்பட்டுள்ளது.

### SENSIT – விரைவு கோவிட்–19 பரிசோதனை கிட்

- 15 நிமிடங்களில் கோவிட்–19 ன் SARS CoV–2ஐ கண்டறியும் SENSIT கருவியை DBT–BIRAC நிறுவனம் உருவாக்கியுள்ளது.

### அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றி

- அணு ஆயதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட, கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன அக்னி பிரைம் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- அக்னி ரக ஏவுகணைகளில் அதிநவீன, மேம்பட்ட வகையாக அக்னி பிரைம் ஏவுகணை விளங்குகிறது. 1000 கி.மீ. முதல் 2000 கி.மீ. தூரம் வரை உள்ள இலக்குகளை எட்டும் திறனை இந்த ஏவுகணை பெற்றுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கிய இந்த ஏவுகணை, ஒடிஸா மாநிலத்தின் பாலே சுவரம் அருகே உள்ள ஏ.பி. ஜே. அப்துல் கலாம் தீவிலிருந்து விண்ணில் ஏவி வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
- கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு தொலை தூரத் தொடர்பு நிலையங்கள் மற்றும் ரேடார் நிலையங்களின் மூலம் ஏவுகணை கண்காணிக்கப்பட்டது.

## 5.2 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

### மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் புதிய உதவி எண்களை வெளியிட்டுள்ளது

- 1075 – மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்.
- 1098 – பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
- 14566 – முதியோர் உதவி எண் (சமூகநீதி அமைச்சகம்)
- 08046110007 – மனநலன் பாதித்தோருக்கான உதவி எண்.
- 14443 – ஆயுஷ் அமைச்சகம்

### செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான "Xraysetu"

- கிராமப்புறங்களில் கோவிட் பரவலை கண்டறியும் நோக்கில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான Xray setu என்ற எளிய முறை அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.
- இது வாட்ஸ் ஆப்பின் அடிப்படையில் செயல்புரியக் கூடியது.
- ARTPARK என்ற நிறுவனம் இந்த செயல்பாட்டை உருவாக்கியுள்ளது.

### மூத்த குடிமக்களுக்கான: SAGE தளம்

- மத்திய சமூக நீதி அமைச்சர் தவார் சந்த் கெலாட் ஜுன் 4, 2021ல் மூத்த குடிமக்களுக்கு உதவுவதற்காக SAGE என்ற தளத்தை துவங்கியுள்ளார்.
- SAGE (Senior care Ageing Growth Engine) வயதானவர்கள் தங்கள் தேவையான பொருட்களை இந்த தளத்தில் தெரிவிப்பதன் மூலம் இருந்த இடத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

### ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் முதல் பொதுத்துறைகள் பாதுகாப்பு செயற்குழு

- மைக்ரோசாப்ட் நிறுவனம் ஆசியா பசிபிக் பிராந்தியாத்தின் முதல் பொதுத்துறை சைபர் பாதுகாப்பு செயற்குழுவை துவங்க போவதாக அறிவிப்பு செய்துள்ளது.
- இந்த குழு இந்த பகுதியில் நாடுகளுக்கு சைபர் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும்

கொள்கையை புருனே, இந்தோனேசியா, கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 15 உறுப்பு நாடுகளைக் கொண்டு துவங்கப்பட்டுள்ளது.

## பேரிடர் தகவல்களைத் தெரிவிக்க தனி கட்செவி அஞ்சல்

- பேரிடர் தகவல்களை அரசுக்கு பொதுமக்களே தெரிவிக்க தனி கட்செவி அஞ்சல் எண் (வாட்ஸ் அப்) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்த எச்சரிக்கைத் தகவல்கள் TNSMART என்ற செயலி மூலமும், TWITTER, FACEBOOK உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலமாகவும் பொதுமக்கள் அறிந்து கெள்ளலாம். பேரிடர்கள், விபத்துக்களைத் தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மக்களே தகவல் தெரிவிக்கவும், படம் எடுத்து அனுப்பவும் தனி கட்செவி அஞ்சல் எண் உருவாக்கப்பட்டுள்ளது.
- அதன்படி, 94458 69848 என்ற எண்ணில் பேரிடர் குறித்த தகவல்களை பொது மக்களே தெரிவிக்கலாம் என்றார் அமைச்சர் ராமச்சந்திரன்.

## வருமான வரி தாக்கல்: பயன்பாட்டுக்கு வந்தது புதிய வலைதளம்

- வருமான வரி கணக்கை இணைய வழியில் தாக்கல் செய்வதற்கான பல்வேறு வசதிகளுடன் கூடிய புதிய வலைதளம் ஜீன் 7 அன்று பயன்பாட்டுக்கு வந்தது. அதன் மூலம் நீண்ட காலமாக பயன்பாட்டில் இருந்து வந்த http://incometaxindiaefilling.gov.in என்ற வலைதளம் நீக்கப்பட்டு புதியதாக http://incometax.gov.in என்ற வலைதளம் பயன்பாட்டுக்கு வந்ததுள்ளது.

## 5ஜி தொழில்நுட்பம் பாதுகாப்பனது: COAI

- 5ஜி தொழில்நுட்பம் பாதுகாப்பனது என்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் உள்ளதாக இந்திய செல்லிடப்பேசி சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பு (சிஓஏஐ) தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த கூட்டமைப்பின் தலைமை இயக்குநர் எஸ்.பி. கோச்சார் மேலும் கூறியுள்ளதாவது: அடுத்த தலைமுறைக்கான 5ஜி தொழில்நுட்பம் பாதுகாப்பனது என்பது பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- அதற்கான அனைத்து ஆதாரங்களும் உள்ளன. எனவே, 5ஜி தொழில்நுட்பம் உடல் ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது முற்றிலும் தவறானது.
- உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கதிர்வீச்சில் பத்தில் ஒரு பகுதி மட்டுமே இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தும் போதும் இது போன்ற தவறான அச்சங்கள் எழுவது என்பது வாடிக்கையானதே.

## நமஸ்தே யோகா செயலி

- மத்திய ஆயுஷ் அமைச்சகம் 7வது சர்வதேச யோகா தினமான ஜுன் 11ல் நமஸ்தே யோகா என்ற செயலியின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.
- மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில் இந்த செயலி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.
- 2021 சர்வதேச யோகா தினத்தின் மையக்கருத்து – "Be with Yoga Be at home".

## கரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கை ஒளியாகும் யோகா

- கரோனா நோய்த்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் யோகப்பயிற்சிகள் மக்களிடையே நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக திகழ்வதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மக்கள் யோகப்பயிற்சிகளை எளிதாகக் கற்கும் வகையில் செல்லிடப்பேசி செயலி வடிவமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
- 7–ஆவது சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

### திருக்குறளை மேற்கோள் காட்டிய பிரதமர்

- "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
  வாய்நாடி வாய்ப்பச் செயல்" – என்று கூறியுள்ளார்.
- ஏதாவது நோய் ஏற்பட்டால், அது ஏற்பட்டதற்கான மூல காரணத்தைக் கண்டறிந்து அதற்கேற்ப நோய்க்கு சிகிச்சையளிக்க வேண்டும் என்பதே அதன் பொருள். அதுவே யோகாவின் அடிப்படையாகவும் உள்ளது என்றார்.

**செல்லிடப்பேசி செயலி:**

- யோகப் பயிற்சிகளை மக்களுக்கு எளிதாகக் கற்றுத் தரும் நோக்கில் "எம்–யோகா" என்ற செல்லிடப்பேசி செயலியை இந்தியா வடிவமைக்கவுள்ளது. இதற்காக உலக சுகாதார அமைப்புடன் இணைந்து இந்தியா செயல்பட்டு வருகிறது.

## Windows–11 ஐ வெளியிட்டுள்ள மைக்ரோசாப்ட்

- அடுத்த தலைமுறை இயங்குதளமான விண்டோஸ்–11ஐ மைக்ரோசாப்ட் நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- விண்டோஸ்–10ஐ 2015ல் வெளியிட்டது.

## 50 நாடுகளில் செயல்புரிய உள்ள COWIN

- இந்தியாவின் கோவிட் தடுப்பூசி வழிகாட்டி செயலியான கோவின் 50 நாடுகளில் செயல்புரிய உள்ளதாக தேசிய சுகாதார ஆணையர் தலைவர் R.S.சர்மா தெரிவித்தள்ளார்.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## மின்சார வாகனங்களுக்கு பதிவுக் கட்டண சலுகை: மத்திய அரசு வரைவு அறிக்கை வெளியிட்டது

- மின்கலங்கள் மூலம் இயங்கும் புதிய வாகனங்கள் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவைகளுக்கும் மோட்டார் வாகனப்பதிவு (ஆர்சி) கட்டணங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கான பொதுமக்கள் கருத்து கேட்பிற்கும் சிறப்பு அரசிதழ் வரைவு அறிவிக்கையையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- 1989-ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதிகள் திருத்தம் செய்யப்பட்டு மின்கலங்களில் இயங்கும் புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட வரும்போது அதற்கான கட்டணங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு பதிவு செய்யப்படும். மேலும், இத்தகைய வாகனங்கள் புதுப்பிக்கவும் செலுத்த வேண்டிய கட்டங்களிலும் விலக்கு அளிக்கப்படும்.

## ஆஸ்திரேலியா பாதுகாப்புத் துறை அமைச்சருடன் ராஜ்நாத் சிங் பேச்சு கரோனா தடுப்புப் பணிகள் குறித்து ஆலோசனை

- ஆஸ்திரேலிய பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட்டர் டட்டனுடன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, கரோனா பரவலைத் தடுக்க இரு நாடுகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக விவாதித்தனர்.

## மாநில அரசு அதிக கடன் வாங்குவது தவிர்க்க இயலாதது

- கரோனா பரவலினால் ஏற்பட்டுள்ள நிதிச்சுமைகளால் மாநில அரசின் கடன் வாங்குதல் அதிகரிக்கும் என நிதிகுழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழுவின் விதிகளின்படி மாநில அரசின் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4%க்களாக இருக்க வேண்டும். கடந்த அரசின் இடைக்கால பட்ஜெட்டில் தாக்கல் செய்யப்பட்ட பற்றாகுறை 84,686 கோடி என்பது 3.94% சதவீதமாக கணக்கிடப்பட்டிருந்தது.

## டோக்கியோ ஒலிம்பிக் இந்தியாவின் தயார் நிலையை ஆய்வு செய்தார் பிரதமர்

- ஒலிம்பிக்கில் பங்கேற்கும் போட்டியாளர்களுக்கு 135 கோடி இந்தியர்களின் வாழ்த்துகள் இருப்பதாக அவர் கூறினார். பயிற்சி வசதிகள் முதல் கரோனா தடுப்பூசி வரை போட்டியாளர்கள், பயிற்சியாளர்கள், உதவிப் பணியாளர்கள் ஆகியோரின் அனைத்து தேவைகளுக்கும் முன்னுரிமை அளித்து அவற்றை நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.
- டோக்கியோ ஒலிம்பிக்கின் 11 விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்க 100 போட்டியாளர்கள் இந்தியாவின் சார்பில் தேர்வாகியிருப்பதாகவும், மேலும் 25 பேர் அந்தப் போட்டிக்கு தகுதி பெற வாய்ப்புள்ளதாகவும் ஆய்வுக் கூட்டத்தில் பிரதமர் மோடிக்கு தெரிவிக்கப்பட்டது. இது தவிர பாரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இதுவரை 26 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும், மேலும் 16 பேர் வரை தகுதி பெற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஜப்பானில் வரும் ஜுலை 23 முதல் ஆகஸ்ட் 8-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

## மாதிரி வாடகைச் சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- முழுவதும் வாடகை வீடுகளை முறைப்படுத்துவதற்கான மாதிரி வாடகை சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மேலும், இதை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் அனுப்பி புதிய வாடகை மற்றும் குத்தகைச் சட்டங்களை

இயற்றவோ அல்லது ஏற்கெனவே உள்ள சட்டங்களை தகுந்த வகையில் திருத்தங்களை மேற்கொள்ளவோ மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- மத்திய நகர்ப்பற வளர்ச்சித் துறை கொண்டு வந்துள்ள இந்த "மாதிரி வாடகை சட்டம்" 2015–ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. 2011–இல் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் 110 லட்சம் வீடுகள் காலியாக இருந்ததாகக் கூறப்பட்டது.
- தற்போது இந்த மாதிரி சட்டத்தில் வாடகை தீர்ப்பாயங்கள் அல்லது வாடகை நீதிமன்றங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு இதுபோன்ற தாவாக்களை விரைவாக தீர்க்கும் வசதி இந்தச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த மாதிரி வாடகை சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## நீடித்த அபிவிருத்தி இலக்கில் முதல் இரு இடங்களில் கேரளம், தமிழகம்

- 2020–21–ஆம் ஆண்டுக்கான நீடித்த அபிவிருத்தி இலக்குகளில் இந்திய அளவில் கேரளம் முதல் இடமும், தமிழகம், ஹிமாச்சாலப் பிரதேசம் ஆகியவை இரண்டாவது இடமும் பெற்றுள்ளன. இதில், வறுமை இல்லாத இலக்கை அடைந்ததில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவின் நீடித்த அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜி) அட்டவணை குறியீடு மற்றும் தகவல் பலகை 2020–21–இன் மூன்றாவது பதிப்பை நீதி ஆயோக் வெளியிட்டது. இந்த ஆண்டு எஸ்டிஜி அட்டவணை குறியீடு தகவல் பலகை, "ஒரு தசாபதத்தின் (10 ஆண்டு கால) செயல்பாட்டின் கூட்டாண்மை" என்கிற தலைப்பிலா அறிக்கையை நீதி ஆயோக்கின் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ் குமார் வெளியிட்டார்.
- 75 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், தமிழகம், ஹிமாச்சலப் பிரதேசம் ஆகியவை 74 புள்ளிகள் பெற்று இரண்டாமிடம் பெற்றன. ஆந்திரம், கோவா, கர்நாடகம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்கள் 72 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், சிக்கிம் (71), மகாராஷ்டிரம் (70) ஆகிய மாநிலங்கள் முறையோ 4,5–ஆவது இடங்களையும் பெற்றுள்ளன.
- இதில் புள்ளிகள் குறைவாகப் பெற்றுள்ள பட்டியலில் ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், அஸ்ஸாம், ஜார்கண்ட், பிகார் உள்ளிட்ட மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- குறிப்பிட்ட இலக்குகளை அடைந்த மாநிலங்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. வறுமை இல்லாத (No Poverty) இலக்கை அடைந்ததில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- முற்றிலும் பசியை (zero Hunger) போக்கிய மாநிலமாக கேரளமும், சண்டீகர் யூனியன் பிரதேசமும் இலக்கை அடைந்து இரண்டாவது இடத்தை பெற்றுள்ளன. மேலும், பாலின சமத்துவம், தூய்மையான குடிநீர், சுகாதாரம் போன்றவற்றில் சிறப்பாகச் செயல்பட்டதாக சண்டீகர், அந்தமான் நிக்கோபர் தீவுகள், கோவா, லட்சத்தீவுகள் ஆகியவை ஐந்தாவது, ஆறாவது இடங்களைப் பெற்றுள்ளன.
- இந்த அறிக்கையை வெளியிட்டுப் பேசிய நீதி ஆயோக்கின் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ் குமார், "இந்தியாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டைக் கண்காணிக்கும் நமது முயற்சியை உலகம் முழுவதும் பாராட்டுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீது மாநிலங்களின் குறியீட்டை கணக்கிட்டு, அவற்றை வரிசைப்படுத்தும் தரவுகளின் அடிப்படையிலான அரிய முன்முயற்சியான இந்த நடவடிக்கை ஒரு உந்து சக்தியாகத் திகழும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்".

## கோதுமை, நெல் கொள்முதல் சாதனை அளவை எட்டியது

- நடப்பு ரபி சந்ததைப் பருவத்தில் ஜுன் 2 வரையிலான நிலவரப்படி அரசின் கோதுமை கொள்முதல் இதுவரை இல்லாத அளவில் 411.12 லட்சம் டன்னை எட்டி சாதனை படைத்தள்ளது. இது, இதற்கு முந்தைய காலகட்டத்தில் 365.36 லட்சம் டன்னாக இருந்தது.
- இதற்கு முன்பு கடந்த ஆண்டு 389.92 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

## ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான ஊதிய பிரிப்பு

- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பயனாளிகளுக்கான ஊதியத்தில் பட்டியலின மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் ஊதியத்தில் பிரித்து வழங்க வகை செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## பொருளாதார ரீதியில் பின்தங்கிய அனைவருக்கும் ரேஷன் அட்டை

- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனடையும் மக்களில், அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரும், தற்போதைய கரோனா தொற்று சூழலில் இந்தச் சட்டத்தால் பயனடைவதை உறுதி செய்வது அவசியமாகிறது.
- இதனைக் கருத்தில் கொண்டு, நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் இத்தகையப் பிரிவினரைக் கண்டறிந்து, அவர்களுக்கு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ரேஷன் அட்டைகளை வழங்குவதற்கான சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும், மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அறிவுறுத்தியுள்ளது.

## சிந்து சிறந்த மாபெரும் உணவு பூங்கா: ராய்பூர் சட்டீஸ்கர்

- சட்டீஸ்கரின் ராய்பூரில் சிந்து மாபெரும் சிறந்த உணவு பூங்காவை மத்திய உணவு பதப்படுத்தல் அமைச்சர் நரேந்திரசிங் தோமர் மற்றும் சட்டீஸ்கர் முதலமைச்சர் துவங்கி வைத்தனர்.

## சர்க்கரை உற்பத்தி 13% அதிகரிப்பு

- நாட்டின் சர்க்கரை உற்பத்தி நடப்பு சந்தைப் பருவத்தின் முதல் எட்டு மாதங்களில் 13 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த கூட்டமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது:
- மகாராஷ்டிர மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தியானது கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இதைத் தொடர்ந்து செப்டம்பருடன் முடிவடையவுள்ள நடப்பு சந்தைப் பருவத்தின் முதல் 8 மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 13 சதவீதம் அதிகரித்து 305.68 லட்சம் டன்னைத் தொட்டுள்ளது. சர்க்கரை சந்தைப் பருவம் அக்டோபர் முதல் செப்டம்பர் வரையில் கணக்கிடப்பட்டு வருகிறது.
- இதற்கு முந்தைய சந்தைப் பருவத்தில் சர்க்கரை உற்பத்தியானது 270.05 லட்சம் டன்னாக காணப்பட்டது.
- குறிப்பாக, உத்தர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களில் நடப்பாண்டு மே 31–ஆம் தேதி நிலவரப்படி ஏழு சர்க்கரை ஆலைகள் மட்டுமே அரவைப் பணிகளில் ஈடுபட்டிருந்தன.
- உத்தர பிரதேசத்தின் சர்க்கரை உற்பத்தி 2020 அக்டோபர் 1 முதல் 2021 மே 31–ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் 110.16 லட்சம் டன்னாக உள்ளது. இது, இதற்கு முந்தைய காலகட்டத்தில் 125.46 லட்சம் டன்னாக காணப்பட்டது.
- அதே சமயம், மகாராஷ்டிர மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி 61.69 லட்சம் டன்னிலிருந்து 106.28 லட்சம் டன்னாக குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது.
- கர்நாடக மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தியும் 33.80 லட்சம் டன்னிலிருந்து 41.67 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.
- 2021 ஜனவரி முதல் 2021 மே வரையிலான இடைப்பட்ட காலத்தில் சர்க்கரை ஏற்றுமதியானது 44–45 லட்சம் டன்னை எட்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக இஸ்மா தெரிவித்துள்ளது.

## 72 ரயில் நிலையங்களுக்கு "ஐஎஸ்ஓ" சான்றிதழ்

- சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தியதற்காக, தெற்கு ரயில்வேயில் 72 ரயில் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ 14001 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய ரயில்வேயில் பசுமை முயற்சிகளை அதிகப்படுத்துவதற்காக, இந்திய ரயில்வே– இந்திய தொழில் கூட்டமைப்பு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2016–ஆம் ஆண்டு கையெழுத்தானது. இதன்பிறகு, ரயில்வேயில் பசுமை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கையால், 30 பணிமனைகள், 7 உற்பத்தி நிறுவனங்கள், 8 லோகோ பணிமனைகள், ஒரு ஸ்டோர்ஸ் டிப்போ ஆகியவை "கிரீன்கோ" சான்றிதழ் பெற்றுள்ளன. இதுதவிர, 19 ரயில்வே நிலையங்களைப் பசுமையாக மாற்றியதற்காக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- கடந்த 2 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தியதற்காக ஐஎஸ்ஓ 14001 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 718 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- தெற்கு ரயில்வேயில் சுற்றுச்சூழல் மேலாண்மைச் செயல்படுத்தியதற்காக 72 ரயில் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ 14001 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை ரயில்வே கோட்டத்தில் 19, திருவனந்தபுரம் கோட்டத்தில் 17, பாலக்காடு கோட்டத்தில் 15, மதுரை ரயில்வே கோட்டத்தில் 8, திருச்சி கோட்டத்தில் 7, சேலம் கோட்டத்தில் 6 ரயில் நிலையங்களும் என்று மொத்தம் 72 ரயில் நிலையங்கள் அடங்கும்.

## 2025–க்குள் பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பு

- வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனாலை கலந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- முன்பு இந்த இலக்கு 2030–ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றும், இதன் மூலம் சுற்றுச்சூழல் மாசு குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.
- உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, எத்தனாலை பெட்ரோலுடன் கலக்கும் தொலைநோக்கு திட்டத்தை பிரதமர் மோடி வெளியிட்டு பேசியதாவது:
- 2022ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 10 சதவீத எத்தனாலை கலந்து விநியோகிக்கவும், 2030–ஆம் ஆண்டுக்குள் 20 சதவீத அளவு எத்தனாலை கலக்கவும் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.
- தற்போது சுமார் 8.5 சதவீதம் எத்தனால் பெட்ரோலில் கலக்கப்படுகிறது. இது 2014–இல் 1 முதல் 1.5 சதவீதமாக இருந்தது. இதனால் எத்தனால் கொள்முதல் 38 கோடி லிட்டரில் இருந்து 320 கோடி லிட்டராக அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு எத்தனால் கொள்முதலுக்காக எண்ணெய் நிறுவனங்கள் ரூ.21 ஆயிரம் கோடி செலவிட்டுள்ளன. எத்தனால் கொள்முதல் எட்டு மடங்கு அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பலன் அடைவார்கள் என்றார்.

## கரோனா 2–ஆவது அலை வேளாண் துறையில் பாதிப்பை ஏற்படுத்தாது

- இந்தியாவில் கரோனா தொற்றின் இரண்டாவது அலை, வேளாண் துறையில் எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று நீதி ஆயோக் தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த அமைப்பின் வேளாண் பிரிவுக்கான உறுப்பினர் ரமேஷ் சந்த் கூறியதாவது:
- இந்தியாவில் கரோனா தொற்றின் இரண்டாவது அலை, கடந்த மே மாதத்தில் கிராமப்புறங்களில் வேகமாகப் பரவியது. இருப்பினும் அந்த கால கட்டத்தில் வேளாண் சார்ந்த பணிகள் பெரிய அளவில் எதுவும் நடைபெறவில்லை. கோடைக்காலம் என்பதால் சிறிய அளவில் காய்கறி சாகுபடி நடைபெற்றது தவிர, உழவு, அறுவடை என்று எந்த விவசாயப் பணிகளும் மே மாதத்தில் நடைபெறவில்லை.
- வழக்கமாக, வேளாண் பணிகள் மார்ச்–ஏப்ரல் மாதங்களில் முடிவுக்கு வந்து, ஜுன் மாதம் பருவ மழை பெய்யத் தொடங்கிய மீண்டும் வேகமெடுக்கும். இதனால், கரோனா தொற்றின் 2–ஆவது அலை வேளாண் துறையில் எந்த வழியிலும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்று நம்புகிறேன்.
- பருப்பு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடையவில்லை. இதனால், பருப்பு உற்பத்தியில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி, சாகுபடி பரப்பளவை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

## குஜராத்தில் "மின்சார வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கும் பகுதி

- மின்சார வாகனங்கள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் அவ்வாகனங்களுக்கான பிரத்யேக பகுதி குஜராத்தின் கேவாடியாவில் அமைக்கப்படவுள்ளது.
- மின்சார வாகனங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கும் வகையில் பிரத்யேக பகுதி அமைக்கப்படுவது நாட்டிலேயே இது முதல் முறையாகும்.
- சுற்றுச்சூழல் மாசுபாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் மின்சார வாகனங்கள் மக்களிடையே படிப்படியாக வரவேற்பைப் பெற்று வருகின்றன. அவ்வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.
- அதன் ஒரு பகுதியாக, குஜராத்தின் கேவாடியா பகுதியில் அமைந்துள்ள 182 மீட்டர் உயரமுள்ள வல்லபபாய் படேலின் "ஒற்றுமைக்கான சிலையை" சுற்றியுள்ள பகுதி முழுவதையும் மின்சார வாகனங்களுக்கான பிரத்யேக பகுதியாக மாற்றுவதற்கு மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

- அப்பகுதி முழுவதிலும் மின்சார வாகனங்கள் மட்டுமே இயங்கும் வகையில் படிப்படியாக மாற்றப்படும் என்று உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதையடுத்து, நாட்டின் முதல் மின்சார வாகனங்கள் நகரமாக கேவாடியா மாறும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா. இலக்குகளை அமல்படுத்துவதில் இந்தியாவுக்கு 117–ஆவது இடம்

- ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா 117–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- வறுமையை ஒழித்தல், பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட 17 இலக்குகளை 2030–ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான ஒப்பந்தத்தில் கடந்த 2015–ஆம் ஆண்டில் ஐ.நா.வின் 193 நாடுகளும் கையெழுத்திட்டன.
- அந்த இலக்குகளை அடைவதற்காக ஒவ்வொரு நாடும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்காணித்த, அந்நாடுகளை யாலே பல்கலைக்கழகம் வரிசைப்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் 2021–ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அந்தப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தையொட்டி யாலே பல்கலைக்கழகம் இநத அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அந்த அறிக்கையில் இந்தியா 117–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியா 2 இடங்கள் சரிவைச் சந்தித்துள்ளது. மொத்தமுள்ள 100 புள்ளிகளில் இந்தியா 61.9 புள்ளிகளைப் பெற்றுள்ளது.
- முக்கியமாக, பசியின்மையை ஒழித்து உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் (இலக்கு–2), பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல் (இலக்கு–5), போதுமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (இலக்கு–9) ஆகியவற்றில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் காணப்படாததால், இந்தியாவின் புள்ளிகள் சரிவைச் சந்தித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030–ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான நடவடிக்கைகளை ஜார்க்கண்ட். பிகார் அகிய மாநிலங்கள் மந்தகதியில் மேற்கொண்டு வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரளம், சண்டீகர், ஹிமாசல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வேகமாக முன்னேறி வருகின்றன.

## கல்வி அமைச்சகத்தின் செயல்திறன் தரக் குறியீடு முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்கள்

- மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல்திறன் தரக் குறியீட்டில் (பிஜிஐ) தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் மாநிலங்கள், அந்தமான் நிகோபார் தீவுகள், சண்டீகர் யூனியன் பிரதேசங்கள் மிகச் சிறந்த (ஏ++) வரிசையில் இடம்பிடித்துள்ளன.
- பள்ளிக் கல்வி அமைப்பை வலுவாக்க அந்த அமைப்பில் உள்ள வெற்றிடங்கள், அதன் மூலம் முன்னுரிமை அடிப்படையில் முன்னேற்றம் காண வேண்டிய அந்த அமைப்பின் பிரிவுகளை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அடையாளம் காண பிஜிஐ உதவும். இந்நிலையில் கடந்த 2019–20–ஆம் ஆண்டுக்கான பிஜிஐ அறிக்கையை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பள்ளிக் கல்வி அமைப்பில் தங்கள் தரத்தை மேம்படுத்தியுள்ளன. இதில் தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப், சண்டீகர், அந்தமான் நிகோபார் தீவுகள் மிகச் சிறந்த (ஏ++) வரிசையில் இடம்பிடித்துள்ளன. புதுச்சேரி, தில்லி, குஜராத், ஹரியாணா, ராஜஸ்தான், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி சிறந்த (ஏ+) வரிசையில் இடம் பெற்றுள்ளன.
- பள்ளிக் கல்வி சார்ந்த நிர்வாகத்தில் ஆந்திரம், மேற்கு வங்கம், பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களின் தரம் 20 சதவீதம் முன்னேற்றம் அடைந்துள்ளது. 19 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள்10 சதவீதம் அல்லது அதற்கு கூடுதலான முன்னேற்றத்தை கண்டுள்ளன.
- பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள், நிர்வாக அலுவலர்களுக்கான பற்றாக்குறை, பள்ளிகளில் தொடர்ந்து மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்யாதது, ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சி இல்லாதது, உரிய நேரத்தில் நிதி கிடைக்காதது உள்ளிட்ட சில காரணிகள் நாட்டில் பள்ளிக் கல்வி அமைப்புக்கு தொடர்ந்து இடையூறை ஏற்படுத்துகின்றன. இதை பிஜிஐ மூலம் உறுதிப்படுத்த வழி கோலப்பட்டுள்ளது. இது இடையூறுகளை களைவதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அஸாமின் ஆறாவது தேசிய பூங்கா

- அசாமின் காக்ராஜ்வார் மாவட்டத்தின் ராய் மோனா பகுதி அந்த மாநிலத்தில் 6வது தேசிய பூங்காவாக அம்மாநில முதல்வர் ஹிமாந்த பிஸ்வ சர்மா அறிவித்துள்ளார்.

**அஸாமின் 5 தேசிய பூங்காக்கள்**

- காசிரங்கா தேசிய பூங்கா
- மனாஸ் தேசிய பூங்கா
- நமேரி தேசிய பூங்கா
- ஓராங் தேசிய பூங்கா
- திப்ரு சைக்கோவா தேசிய பூங்கா

## THE ஆசிய பல்கலைக்கழக தரவுநிலை 2021 வெளியீடு

- டைம்ஸ் உயர் கல்வி (Times Higher Education) ஆசிய பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இதில் முதல் 100 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் IISC பெங்களூரு 37வது இடம் பெற்றுள்ளது. 108 இடங்களுக்கும் IIT ரூபார் (55), IIT இந்தூர் (78) போன்றவை இடம் பெற்றுள்ளன.
- சீனாவின் சின்குவா பல்கலைக்கழகம் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது.

## 100% தடுப்பூசி பெற்ற முதல் கிராமம்

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பந்திப்பூர் மாவட்டத்தின் வீயான் கிராமத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்ற நிலையை அடைந்த முதல் மாநிலம்.

## தெலங்கானா உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் உச்சவரம்பு 42–ஆக அதிகரிப்பு

- தெலங்கானா உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் இடங்களுக்கான உச்சவரம்பு 24–இல் இருந்து 42–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- அதாவது 75 சதவீதம் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என். வி.ரமணா வழங்கியுள்ளார். இந்த மொத்த நீதிபதிகள் எண்ணிக்கையில் 34 பேர் நிரந்தர நீதிபதிகளாகவும், 10 பேர் கூடுதல் நீதிபதிகளாகவும் பொறுப்பு வகிக்க உள்ளனர்.

## நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.72 அதிகரிப்பு

- நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.72 உயர்த்தி ரூ.1,940–ஆக நிர்ணயித்து மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதே போல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், சிறு தானியங்கள் ஆகியவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.
- அமைச்சரவைக் கூட்டத்துக்குப்பிறகு மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது:
- 2021 ஜுலை முதல் 2022 ஜுன் வரையிலான சாகுபடி ஆண்டில் விளையும் 14 வகையான பொருள்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், விவசாயிகள் 50–85 சதவீதம் வரை லாபம் அடைவர்.
- வேளாண் சட்டங்கள் அமலுக்கு வந்த பிறகு குறைந்தபட்ச ஆதரவு விலை தொடருமா என்று விவசாயிகள் மத்தியில் சந்தேகம் நிலவி வந்தது. அப்போது, நானும் பிரதமரும் உறுதியளித்தோம். குறைந்தபட்ச ஆதரவு விலை தற்போதும் எதிர்காலத்திலும் தொடரும்.
- சாதாரண ரக நெல்லுக்கான குறைந்தபட்ச ரூ.72 உயர்த்தப்பட்டு ரூ.1,940–ஆகவும், முதல் தர நெல்லின் விலை ரூ.1,960–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- நீண்ட இழை பருத்தி விலை (குவிண்டாலுக்கு ரூ.200 உயர்வு) ரூ.6,025–ஆகவும், நடுத்தர இழை பருத்தி (ரூ.211 உயர்வு) ரூ.5,726–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- சோளத்தின் விலை (ரூ.118 உயர்வு) ரூ.2,738–ஆகவும், மால்தானி ரக சோளத்தின் விலை ரூ.2,58–ஆகவும், கம்பு விலை (ரூ.100) ரூ.ஃ2,250–ஆகவும், கேழ்வரகு விலை (ரூ.82) ரூ.ஃ3,377–ஆகவும், மக்காச்சோளத்தின் விலை (ரூ.20) ரூ.1,870–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் அவற்றின் ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியற்றின் விலை (குவிண்டாலுக்க ரூ.300 உயர்வு) ரூ.6,300–ஆகவும், பச்சைப் பயறு விலை (ரூ.79) ரூ.7,27–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் சர்வதேச கடல்சார் மையம் கிப்ட் சிட்டியில் வர உள்ளது

- குஜராத் மாநிலத்தின் சர்வதேச நிதிச்சேவைகளுக்காக செயல்படும் கிப்ட் சிட்டியில் குஜராத் கடல்சார் வாரியம் முதல் சர்வதேச கடல்சார் சேவை மையத்தை துவங்க உள்ளது.
- இதன் மூலம் துறைமுக போக்குவரத்து சேவைகள் மேம்படும்.

## குவைத் பிரதமருடன் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்திப்பு

- அரசுமுறைப் பயணமாக குவைத் வந்துள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமர் ஷேக் சபா காலித் அல்–ஹமாத் அல்–சபாவை சந்தித்துப் பேசினார்.
- அப்போது இந்தியா–குவைத் இடையேயான உறவை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதில் உறுதியாக இருக்கும் குவைத் பிரதமருக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

## ஜெர்மனியுடன் இணைந்து செயல்பட இந்தியா விருப்பம்

- இந்தியா–பசிபிக் பிராந்தியத்தில் சுதந்திரத்தை உறுதி செய்யும் தொலைநோக்குத் திட்டத்துடன் இருக்கும் ஜெர்மனியுடன் இணைந்து பணியாற்றுவதை இந்தியா ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா கூறினார்.
- இந்தியா–ஜெர்மனி இடையே தூதரக உறவு ஏற்பட்டதன் 70–ஆவது ஆண்டை ஒட்டி, தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் இதைத் தெரிவித்தார்.
- இந்தியா–ஜெர்மனி தூதராக உறவின் 70–ஆம் ஆண்டு நினைவுத் தபால் தலையை புதுதில்லியில் வெளியிட்ட நிகழ்ச்சியில் வெளியுறவுத் துறைச் செயலர் ஷ்ரிங்லா, ஜெர்மனி தூதர் வால்டர் லிண்டனர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கரோனா தொற்றால் ஆதரவற்றவர்களான 30,000 சிறார்கள்

- கடந்த ஆண்டு ஏப்ரல் 1முதல் இந்த ஆண்டு ஜீன் 5வரை 32,071 சிறார்கள் ஆதரவற்றவர்களாகியுள்ளனர்.
- இவர்களில் பெரும்பாலானவர்கள் கரோனா தொற்றால் பெற்றோரை இழந்தவர்கள், கைவிடப்பட்டவர்கள் என்று உச்சநீதிமன்றத்தில் தேசிய குழந்தை உரிமைகள் ஆணையம் என்.சி.பி.சி.ஆர். தெரிவித்துள்ளது.
- இதுபோன்ற ஆதரவற்ற சிறார்களை தனிநபர்களும், அமைப்புகளும் சிறார் சட்டம் 2015–இன் நடைமுறைகளை பின்பற்றாமல் தத்துக் கொடுப்பதாக புகார்கள் வந்துள்ளன.
- சிறார்களின் விவரங்களை அரசு அதிகாரிகள் தன்னார்வ அமைப்புகளுக்கு அளிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.
- பல தன்னார்வ அமைப்புகள் சிறார்களின் பெயரில் நிதியுதவி கோருகின்றன.
- எனவே, சிறார் நிலக் குழுவின் (CPUC) பரிந்துரையின்றி சிறார்கள் குறித்த எந்தவொரு ரகசிய தகவலையும் பொதுத்தளத்தில் வெளியிடவோ, எந்தவொரு தனிநபர், நிறுவனம் அல்லது அமைப்புக்கு வழங்கவோ கூடாது என அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு உத்தரவிட வேண்டும்.

## கோவின் செயலி பதிவிற்கு UDID அட்டை பயன்பாடு

- கோவின்–2 செயலி மார்ச் மாதத்தில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இந்த செயலி–யில் கோவிட்–19 தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கான பதிவு செய்யும் ஊனமுற்றவர்கள் தங்கள் தனித்துவ ஊனமுற்றோர் அடையாள எண்ணை (UDID)–ஐ பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம்

- ஆசியான் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை சீனா தலைமையேற்று நடத்தியுள்ளது.
- இந்த கூட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளின் குவாட் அமைப்பு பற்றி விதிக்கப்பட்டது.

**ஆசியான்** (ASEAN) Association for South East Asian Nations

- துவக்கம் – 1967, ஆகஸ்ட் 8.
- செயலகம் – இந்தோனேசியா, ஜாகர்தா.
- துவங்கப்பட்ட இடம் – பேங்காக், தாய்லாந்து
- உறுப்பு நாடுகள் – புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்டர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்.

## சுத்தமான ஆற்றலுக்கான புதிய கண்டுபிடிப்பு திட்டங்கள்

- சுத்தமான ஆற்றலை உற்பத்தி செய்வதற்காக புதிய ஆற்றல் மாற்ற கண்டுபிடிப்பு திட்டத்தை இந்தியா துவங்கியுள்ளது.
- 2015–ல் ஐக்கிய நாடுகள் சபையின் பருவகால மாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## வேளாண் இயந்திரமாக்கல்: தமிழகம், ஆந்திரம் முன்னிலை

- வேளாண் இயந்திரமாக்கல் திட்டத்தில் பயன்பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழகமும் ஆந்திரமும் முன்னிலையில் உள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வருமானம் பெருகி, வேளாண் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளது என்று மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய வேளாண் துறை கூறியுள்ளதாவது:
- சிறு, குறு விவசாயிகளின் வேளாண்மைகளில் இயந்திரமயமாக்கலின் வரம்பை அதிகரிக்கும் நோக்கில் மத்திய வேளாண் துறை 2014–15–ஆம் நிதியாண்டில் "வேளாண் இயந்திரமயமாக்கல்" என்கிற துணைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- நிலங்களின் பயன்பாடு, நீர் வளங்கள் போன்றவற்றைத் திறம்பட பயன்படுத்தி வேளாண் தொழிலை ஒரு லாபகரமாக மாற்றுவதிலும் ஊரகப் பகுதி இளைஞர்கள் இந்தத் தொழில் ஆர்வத்துடன் பங்கேற்கவும் இயந்திரமயமாக்கல் முக்கியத்துவம் பெறுகிறது.

## நோய் எதிர்ப்பு சக்தியைக் கண்டறிய நாடு முழுவதும் ஆய்வு: ஐசிஎம்ஆர்

- கரோனா தொற்று பரவலைக் கண்டறிவதற்காக நாடு முழுவதும் நோய் எதிர்ப்பு சக்தியை (சிரோ சர்வே) கண்டறியும் ஆய்வை இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சில் (ஐசிஎம்ஆர்) ஜுன் மாதமே தொடங்க உள்ளது என்று நீதி ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) வி.கே.பவுல் தெரிவித்தார்.
- இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில், நாட்டில் கரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை குறையத் தொடங்கி உள்ளது. தினந்தோறும் பாதிப்பு எண்ணிக்கை 5 சதவீதம் வரை குறைகிறது. எனினும், மக்கள் கரோனா தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

## அருகாமை பகுதி தொடர்புகள் (NFC) அடிப்படையிலான மின்னணு அடையாள அட்டையை பயன்படுத்தும் முதல் மாநிலம் பஞ்சாப்

- பஞ்சாப் மண்டி வாரியத்தின் பணியாளர்களுக்கு மின்னணு அடையாள அட்டையை அருகாமை பகுதி தொடர்புகள் அடிப்படையில் ஏற்படுத்தியுள்ள முதல் மாநிலம் பஞ்சாப் ஆகும்.

## அசாமின் 7வது தேசிய பூங்கா: திகிங் பட்காய்

- அசாம் மாநிலத்தின் 7வது தேசிய பூங்காவாக திகிங்பட்காய் வனவிலங்கு சரணாலயப் பகுதி அறிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய பிரதேசத்தில் 12 தேசிய பூங்காக்களும் அந்தமான் நிக்கோபரில் 9 தேசிய பூங்காக்களும் அசாமின் 7 தேசிய பூங்காக்களும் உள்ளன.

## 'ஒரு பூமி, ஒரே சுகாதார" அணுகுமுறை: ஜி7 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு

- அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் இடம்பெற்றுள்ள ஜி7 நாடுகளின் உச்சிமாநாடு பிரிட்டனில் உள்ள கார்ன்வால் நகரில் ஜுன் 11 முதல் 13–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் இந்தியா, தென் கொரியா நாடுகள் கலந்துகொள்ள சிறப்பு அழைபட்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்று மாநாட்டில் பிரதமர் மோடி காணொலி வழியாக பேசியதாவது:
- கரோனா தொற்றை ஒட்டுமொத்த சமூகமாக இணைந்து இந்தியா எதிர்கொண்டது. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கண்டறியவும், தடுப்பூசிகளை நிர்வகிக்கும் பணியிலும் டிஜிட்டல் உபகரணங்களை இந்தியா வெற்றிகரமாக பயன்படுத்தியது.
- உலக அளவில் சுகாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும். எதிர்காலத்தில் நோய்த்தொற்றுகள் ஏற்படுவதை தடுக்க உலகளாவிய ஒன்றுமை இருக்க வேண்டும். இதில் வெளிப்படையான ஜனநாயக சமூகங்களுக்கு சிறப்பு பொறுப்பு உள்ளது.

- கரோனா தொற்றை திறம்பட எதிர்கொள்ள "ஒரு பூமி, ஒரே சுகாதார" அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற செய்தியை இந்த உச்சி மாநாடு ஒட்டுமொத்த உலகுக்கும் அளிக்க வேண்டும்.

## போர் வரலாறுகளை தொகுப்பாக்கும் திட்டம்

- இந்தியாவில் நடைபெற்ற போர்களின் வரலாற்று விவரங்களையும் அப்போது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் செயல்பாடுகளின் விவரங்களையும் சேகரித்து தொகுப்பாக வெளியிடும் திட்டத்துக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.
- பாதுகாப்பு அமைச்சகத்தில் கீழ் உள்ள அமைப்புகளான சேவைகள், ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்கள், அஸ்ஸாம் ரை∴பிள்ஸ், இந்தியா கடலோர காவல்படை ஆகியவை போர் நாட்குறிப்புகள், நடவடிக்கைகளின் கடிதங்கள், செயல்பாட்டு பதிவு புத்தகங்கள் உள்ளிட்ட ஆவணங்களை வரலாற்றுப் பிரிவுக்கு மாற்றுவதற்கு இந்தத் திட்டம் வழிசெய்கிறது. இதன் மூலம் போர் விவரங்களை சரியாகப் பராமரிக்கவும், ஆவணக் காப்பகத்துக்க வரலாறுகளை எழுதுவதற்கு உதவும்.
- இந்த வரலாறு விவரங்கள் தொகுக்கப்பட்டவுடன், 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பதிவுகளை காப்பக வல்லுநர்கள் மதிப்பீடு செய்து இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் தலைமையிலான குழுவில், மத்திய வெளியுறவு, உள்துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகள் குழு இதனை இறுதி செய்யும்.

## "ஆபரேஷன் ஒலிவியா"

- இந்திய கடலோர காவல்படை 1980 முதல் ஒடிசா கடற்கரைப் பகுதியில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் அலிவ் ரிட்லி ஆமைகளை காப்பாற்றுவதற்காக ஆபரேஷன் ஒலிவியாவை நடத்தி வருகிறது.
- ஆலிவ்ரிட்லியின் அறிவியல் பெயர் (Lepidochelys olivacea) IUCN பட்டியலில் பாதிப்பிற்கு உள்ளாகும் விலங்குகள் பட்டியலில் உள்ளது.

## 2021–கோர்சீராவின் உலக திறன் அறிக்கை

- இந்தியா கோர்சீராவின் உலக திறன் அறிக்கை 2021ல் 67வது இடம் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடம் பெற்றுள்ளது.

## பாதுகாப்புத்துறை கண்டுபிடிப்புகளுக்காக 498 கோடி ஒதுக்கீடு

- பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 498 கோடியில் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் வருவித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.
- பாதுகாப்புத் துறை கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க இந்த நிதி ஒதுக்கீடு பெரிதும் துணைபுரியும்.
- 300க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் ஆப்–கள் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் மூலம் இந்த செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

## காபி குடும்ப மரம் அந்தமான் நிக்கோபார் தீவில் கண்டுபிடிப்பு

- 15 மீட்டர் உயரம் வளரக்கூடிய காபி குடும்பத்தை சேர்ந்த "பைரோஸ்ரியா லால்ஜி என்ற தாவா இனம் அந்தமான் நிக்கோபார் தீவில் கண்டறியப்பட்டுள்ளது.

## 2.6 ஹெக்டேர் சீர்கேடு அடைந்த நிலங்கள் 2030–க்குள் மீட்கப்படும்

- நாட்டில் உள்ள 2.6 கோடி ஹெக்டேர் சீர்கேடு அடைந்த நிலங்களை 2030–ஆம் ஆண்டுக்குள் மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐ.நா. ஒப்பந்தத்தின் (யுஎன்சிசிடி) 14–ஆவது மாநாட்டின் தலைவராக பிரதமர் மோடி உள்ளார். அதன் சிறப்புக் கூட்டம், ஐ.நா. 75–ஆவது பொதுச் சபையின் தலைவர் வோல்கன் போஸ்கிர் அழைப்பு விடுத்ததன் அடிப்படையில் நடைபெற்றது.
- பாலைவனமாதல், நிலம் சீர்கெடல், வறட்சி உள்ளிட்டவற்றைத் தடுப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. காணொலி வாயிலாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், "நிலம் சீர்கெடல் காரணமாக உலகம் முழுவதும் மூன்றில் இரண்டுபங்கு மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

- இந்தியாவில் நிலத்துக்கு எப்போதும் தனி மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. நிலத்தை தாய் மண்ணாகக் கருதுவதை இந்தியர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 30 லட்சம் ஹெக்டேர் வனப்பரப்பு கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது. இான் மூலமாக நாட்டின் ஒட்டுமொத்த பரப்பில் சுமார் கால்பங்கானது வனப்பகுதிகளாக உருவாகியுள்ளது.
- நாட்டில் சீர்கெடு அடைந்த சுமார் 2.6 கோடி ஹெக்டேர் பரப்பிலான நிலங்கள் 2030–ஆம் ஆண்டுக்குள் மீட்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. நிலம் சீர்கேடு அடையாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும், இந்தியாவின் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்க உதவும்.
- கடந்த 2019–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தில்லி அறிக்கை, நிலத்தை மீட்டெடுப்பதற்கான முக்கிய வழிமுறைகளை வழங்கியது. நிலம் சீர்கெடலைத் தடுப்பதற்காக சிறப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. நிலம் சீர்கெடல் பிரச்னையை பல வளர்ந்து வரும் நாடுகள் எதிர்கொண்டு வருகின்றன. நிலத்தை மீட்கும் நடவடிக்கைகளில் அந்நாடுகளுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது.

## ஜல் ஜீவன் திட்டம்: ஆந்திரத்துக்கு ரூ.3,183 கோடி ஒதுக்கீடு

- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 2021–22–ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்துக்கு ரூ.3,182.88 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
- கடந்த 2020–21ஆம் ஆண்டு ரூ.790.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப்போது நான்கு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.
- ஆந்திரத்தில் 18650 கிராமங்களில் மொத்தம் உள்ள 95.66 லட்சம் வீடுகளில், 46.89 லட்சம் வீடுகளுக்கு (49.02%) குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு விட்டன. கடந்த 2019–ஆம் ஆண்டு ஜல் ஜீவன் இயக்கம் தொடங்கப்பட்ட போது அந்த மாநிலத்தில் 30.74 லட்சம் (32.14%) வீடுகள் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்புகளைப் பெற்றிருந்தன. 21 மாதங்களில் 16.14 லட்சம் (16.88%) வீடுகளில் இணைப்புகள் வழங்கப்பட்டன. இது, தேசிய சராசரி அதிகரிப்பைவிட 22% குறைவாகும்.

## 'ஒரே தேசம் ஒரே ரேஷன்" திட்டம்

- இந்தியா முழுவதிற்குமான குடிமக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு ஒரே தேசம் ஒரே ரேஷன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 2013 உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மிகக் குறைவான விலையில் உணவு பொருட்கள் 69 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வழங்கப்படுகிறது.

## காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய நேரடி முதலீடு: டிபிஐஐடி அறிவிப்பு

- காப்பீட்டுத் துறையில் அரசின் முன் அனுமதியின்றி 74% அந்நிய நேரடி முதலீடு பெறுவது தொடர்பான அறிவிக்கையை மத்திய தொழிலக மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டிபிஐஐடி) முறையாக வெளியிட்டுள்ளது.
- கடந்த 2015–ஆம் ஆண்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை 26 சதவதத்தில் இருந்து 49 சதவதமாக மத்திய அரசு அதிகரித்தது.
- இந்நிலையில் அந்தத் துறையில் அரசின் முன் அனுமதியின்றி 74% அந்நிய நேரடி முதலீட்டை பெறுவதற்கு வழிவகை செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. அது தொடர்பான காப்பீட்டுச் சட்டத்திருத்த மசோதா – 2021 கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
- இந்நிலையில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு அதிகரிப்பு குறித்து மத்திய தொழிலக மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை முறையாக அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், 74% உச்சவரம்பானது, அந்நிய செலவாணி மேலாண்மை சட்ட அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது.

## "விவாடெக்" தொழில்நுட்ப மாநாடு: பிரதமர் மோடி சிறப்புரை

- 'விவாடெக்" அமைப்பின் 5–ஆவது தொழில்நுட்ப மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.
- இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:
- ஐரோப்பிய நாடுகளின் மிகப்பெரிய டிஜிட்டல், புதுமை கண்டுபிடிப்புகளுக்கான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு, விவாடெக் என்ற பெயரில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2016–ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வருகிறது.

- 5–ஆவது மாநாடு, ஜூன் 16–ஆம் தேதி முதல் 19–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர் மாநாட்டில் சிறப்புரையாற்றுகிறார். இதேபோல், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகிறார்கள்.

## கரோனா மாறுபட்ட AY.1 வகை

- இந்தியாவில் மாறுபட்ட aY.1 வகை கரோனா வகை, உறுதி செய்யப்பட்டுள்ளது. இது டெல்டா வகையினைச் சேர்ந்தது.
- AY.1 அல்லது B.1617.2.1 என்ற மாறுபட்ட வகையானது K417N என அழைக்கப்படுகிறது. இது தென்ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட பீட்டா வகையுடனும் தொடர்படையதாய் உள்ளது.

## AICTE யின் ஐடியா ஆய்வகங்கள்

- தமிழ்நாட்டில் 4 பொறியியல் கல்லூரிகள் 24X7 என்ற அடிப்படையில் ஆய்வக வசதிகள் வழங்கி வருவதை குறிக்கும் ஐடியா (IDEA) ஆய்வகங்கள் என்ற வசதியை AICTE ஏற்படுத்தியுள்ளது.
- ஹிந்துஸ்தான் பொறியியல் கல்லூரி, ராமகிருஷ்ண பொறியல் கல்லூரி, கோயம்புத்தூர், K.S.ரங்கசாமி தொழில்நுட்ப கல்லூரி, திருச்செங்கோடு, முத்தயம்மாள் பொறியியல் கல்லூரி ராசிபுரம், RMK பொறியியல் கல்லூரி கவரப்பேட்டை ஆகியவை இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

## உலகின் 14வது நன்கொடை அளிக்கும் நாடு இந்தியா

- உலக அளித்தல் குறியீடு 2021 சார்டிஸ் பவுண்டேஷனல் வெளியிடப்பட்டுள்ளது.
- இதில் கரோனா காலகட்டத்தில் பல்வேறு நாடுகளுக்கும் அளித்த உதவிகளின் அடிப்படையில் இந்தியா 14வது இடம் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்தோனேசியா முதலிடத்தில் உள்ளது.

## 4 விசார் குறியீடு பெற்ற ஐர்தாலு மாம்பழம்

- பகல்பூரினிலிருந்து புவிசார் குறியீடு பெற்ற ஜர்தாலு மாம்பழம் இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.
- 2018ல் இந்த மாம்பழத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

APEDA

- Agricultural and Processed Food Products Export Development Authority.

## இந்தியாவில் முதலீடு: உலக நாடுகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு

- 'புதுமை கண்டுபிடிப்பாளர்களும் முதலீட்டாளர்களும் இந்தியாவுக்கு தேவைப்படுகிறார்கள்; திறமை, சந்தை, மூலதனம் உள்ளிட்ட 5 முக்கியத் தூண்களின் அடிப்படையில் இந்தியாவில் முதலீடு செய்ய உலக நாடுகள் முன் வர வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- ஐரோப்பிய நாடுகளின் மிகப்பெரிய டிஜிட்டல், புதுமை கண்டுபிடிப்புகளுக்கான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு, விவாடெக் என்ற பெயரில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2016–இல் இருந்து நடத்தப்பட்டு வருகிறது. அதன் 5–ஆவது தொழில்நுட்ப மாநாடு தொடங்கியது. அதில், பிரதமர் மோடி காணொலி முறையில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

## முன்களப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

- கரோனா முன்களப் பணியாளர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி ஜூன் 18 காலை 11 மணியளவில் காணொலி வாயிலாக தொடக்கி வைக்கிறார்.
- 26 மாநிலங்களில் உள்ள 111 பயிற்சி மையங்களில் இந்நிகழ்ச்சி தொடங்குகிறது. நாடு முழுவதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தத் திட்டம் மூலம் பயிற்சி பெற உள்ளன.
- வீட்டு கவனிப்பு உதவி, அடிப்படை கவனிப்பு உதவி, மேம்பட்ட சிகிச்சை உதவி, அவசர சிகிச்சை உதவி, மாதிரி சேகரிப்பு மற்றும் மருத்துவ சாதன உதவி ஆகியவற்றில் திருத்தியமைக்கப்பட்ட விதி முறைகளின் அடிப்படையில் இந்தப் பயிற்சி வழங்கப்படும்.
- பிரதமரின் கவுசல் விகாஸ் திட்டத்தின் கீழ் ரூ.276 கோடி இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையில் எதிர்காலத் தேவைக்கு ஏற்ப, மருத்துவம் அல்லாத சுகாதாரப் பணியாளர்களை திறன் வாய்ந்தவர்களாக இந்தத் திட்டம் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## டிஏபி உர மானியம் மூட்டைக்கு ரூ.700 அதிகரிப்பு

- வேளாண்மைக்குப் பயன்படும் டை–அமோனியம் பாஸ்பேட் (டிஏபி) உரமானியத்தை மூட்டைக்கு ரூ.700 அதிகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் அரசுக்கு கூடுதலாக ரூ.14,775 கோடி செலவாகும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நாட்டில் வேளாண்மைப் பணிகளில் யூரியாவுக்கு அடுத்தபடியாக டிஏபி உரம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு டிஏபி மூட்டை ஒன்றின் விலை ரூ.1,700–ஆக இருந்தது. இதில் மத்திய அரசின் மானியமாக ரூ.500 வழங்கப்பட்டு வந்தது. இதையடுத்து உர நிறுவனங்கள் டிஏபி உர மூட்டையை ரூ.1,200–க்கு விற்பனை செய்து வந்தன. இந்நிலையில், அந்த உரத்தின் விலை சர்வதேச அளவில் உயர்ந்து மூட்டை ஒன்றின் விலை ரூ.2,400–ஆக அதிகரித்தது. இந்த விலை உயர்வு விவசாயிகளைப் பாதிக்காமல் இருப்பதற்கு அந்த உரத்துக்கு அளிக்கப்படும் மானியத்தை மூட்டைக்கு ரூ.700 உயர்த்த கடந்த மாதம் மத்திய அரசு முடிவு செய்தது.
- ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்துக்கு ஒப்புதல்: ஆழ்கடல் வளங்கள் குறித்து ஆய்வு செய்யவும், கடல் வளங்களை நிலையாகப் பயன்படுத்த ஆழ்கடல் தொழில்நுட்பங்களை உருவாக்கவும் ரூ.4,077 கோடி மதிப்பில் ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## ஆயுத தயாரிப்பு தொழிற்சாலை 7 நிறுவனங்கள் மறுசீரமைப்பு

- 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆயுத தயாரிப்பு தொழிற்சாலையை பிரித்து அரசுக்குச் சொந்தமான 7 புதிய பொதுத் துறை நிறுவனங்களாக மறுசீரமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- மத்திய பாதுகாப்பு துறையின் கீழ் ஆயுத தயாரிப்பு தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலையில் பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் 41 ஆலைகள் இயங்கி வருகின்றன. இந்த தொழிற்சாலையை பிரித்து அரசுக்குச் சொந்தமான 7 புதிய பொதுத் துறை நிறுவனங்களாக மறுசீரமைக்க மத்திய அரசுக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பரிந்துரைக்கப்பட்டது. இந்தப் பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்த அணுகுமுறை ராஜ்நாத் சிங் வலியுறுத்தல்

- பயங்கரவாதமும் தீவிரவாதமும் உலகின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றன. இவற்றை எதிர்கொள்வதற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகிறது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.
- ஆசியான் நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மாநாடு நடைபெற்றது. அதில், அமைச்சர் ராஜ்நாத் சிங் காணொலி வழியாகப் பங்கேற்றுப் பேசியதாவது: நாடுகளின் இறையாண்மை, எல்லை ஆகியவற்றுக்கு மதிப்பளித்து இந்திய–பசிபிக் பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். தென்சீனக் கடல் பகுதியில் சிலர் (சீனா) ஆதிக்கம் செலுத்துவதும், கடல்சார் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதும் கவலை அளிக்கிறது.
- கரோனா தொற்றின் இரண்டாவது அலை தாக்குதலில் இருந்து இந்தியா மீண்டெழுந்து வருகிறது. இரண்டாவது அலை தாக்குதல், இந்தியாவின் மருந்துகள் இருப்பை கேள்விக்குறியாக்கிவிட்டது. கரோனா பெருந்தொற்றில் இருந்து உலகம் விடுபடுவதற்கு, கரோனா தடுப்பூசிகளுக்கு காப்புரிமையில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். மருந்துப் பொருள்கள் தடையின்றி கிடைக்க வேண்டும். இவற்றை மேற்கொள்ள சர்வதேச அளவிலான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும்.

## இந்தியா இலங்கைக்கு 100 மில்லியன் டாலர் கடனுதவி

- இலங்கைக்கு இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி (EXIM) 100 மில்லியன் டாலர் கடனுதவி அளிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இலங்கையின் சூரிய மின்உற்பத்தி திட்டங்களுக்கு இந்த உதவி சர்வதேச சூரிய ஒளி கூட்டமைவின் உறுப்பினர் என்ற முறையில் அளிக்கப்பட உள்ளது.
- சர்வதேச சூரிய ஒளி கூட்டமைவில் (ISA) 89க்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளது.
- 2015ம் ஆண்டில் துவங்கப்பட்டது.
- தலைமையிடம் – குருகிராம், ஹரியானா

## 2026க்குள் 330 மில்லியன் 5G இணைப்புகள்

- இந்தியாவிலுள்ள தொலைபேசி இணைப்புகளுள் 26% அதாவது 330 மில்லியன் இணைப்புகள் 2026குள் 5G வசதி பெற்றிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 4G இணைப்புகள் 2026ல் 830 மில்லியன் அளவிற்கு அதிகரிக்கும்.
- இந்தியாவில் ஒட்டுமொத்த இணைப்புகள் 1.2 மில்லியன் உயரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## BRICS பல்கலைக்கழக வலையமைப்பு 2021

- மும்பை 117 3 நாட்கள் "BRICS Network Universities என்ற மாநாட்டை நடத்தியுள்ளது.
- அதன் மையக்கருத்து – "Electric Mobility".

## ஜல்கோன் வாழை துபாய்க்கு ஏற்றுமதி

- மகாராஷ்டிரா மாநிலத்தில் விளையும் புவிசார் குறியீடு பெற்ற ஜல்கோன் வாழை துபாயிற்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.
- 2016ல் புவிசார் குறியீடு பெற்ற இந்த வாழைப்பழம் மகாராஷ்டிராவின் ஜல் கதவோன் மாவட்டத்தில் விளைந்தது.

## சர்வதேச யோகா தினம்: 800 இடங்களில் சிறப்பு அஞ்சல் தலை முத்திரை"

- சர்வதேச யோகா தினம் ஜுன் 21–ஆம் தேதி கொண்டாடப்படவிருக்கும் நிலையில், சர்வதேச யோகா தினத்தை குறிக்கும் விதமாக சிறப்பு அஞ்சல் தலை முத்திரை ஒன்றை இந்திய அஞ்சல் துறை வெளியிடவுள்ளது. படவடிவமைப்புடன் கூடிய இந்த சிறப்பு அஞ்சல் தலை முத்திரை நாடு முழுவதும் உள்ள 810 தலைமைன தபால் அலுவலகங்களில் வெளியிடப்படும்.
- ஜுன் 21–ஆம் தேதி பதிவு செய்யப்படும் அனைத்து கடிதங்களிலும் இந்த முத்திரையை தலைமை தபால் அலுவலகங்கள் பதிக்கும். இதில் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் "சர்வதேச யோகா தினம் 2021" என்று பொறிக்கப்பட்டிருக்கும். இத்தகைய முத்திரைகளுக்கு அஞ்சல் தலை ஆர்வலர்களிடையே பெரும் வரவேற்புள்ளது.

## நாட்டின் கனிமங்கள் உற்பத்தி 37% அதிகரிப்பு

- இந்தியாவில் கனிமனங்களின் உற்பத்தி கடந்த ஏப்ரல் மாதத்தில் 37 சதவதம் அதிகரித்துள்ளது.
- இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
- 2021 ஏப்ரலில் சுரங்கம் மற்றும் குவாரிதுறையின் கனிம உற்பத்தி குறியீடு 108.0 என்ற அளவில் இருந்தது. இது, 2020 ஏப்ரல் மாத உற்பத்தி அளவைக் காட்டிலும் 37.1 சதவதம் அதிகமாகும்.
- 2021 ஏப்ரலில் நிலக்கரி 516 லடச்ம் டன்னும், லிக்னைட் 31 லட்சம் டன்னும், இயற்கை எரிவாயு 2,583 மில்லியன் கியூபிக் மீட்டரும், பெட்ரோலியம் (கச்சா) 25 லட்சம் டன்னும், பாக்ஸைட் 16.61 லட்சம் டன்னும், குரோமைட் 6.36 லட்சம் டன்னும், தங்கம் 120 கிலோவும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கடந்தாண்டைக் காட்டிலும் நடப்பாண்டு ஏப்ரலில் நிலக்கரி, லிக்னைட், இயற்கை எரிவாயு, பாக்ஸைட், குரோமைட், காப்பர், தங்கம், இரும்பு, மாங்கனீஸ் தாது, ஸிங், லைம்ஸ்டோன், பாஸ்போரைட் உள்ளிட்ட முக்கிய தனிமங்களின் உற்பத்தி சிறப்பான நேர்மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளன.
- அதே சமயம், கச்சா பெட்ரோலியம் உற்பத்தி மட்டும் கணக்கீட்டு மாதத்தில் எதிர்மறை வளர்ச்சியை கண்டுள்ளதாக கனிம வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## தேசிய வேலைவாய்ப்பின்மை விகிதம் 8.7 ஆக குறைவு

- கோவிட் ஊரடங்கால் மே மாதத்தில் 14.7%ஆக இருந்த நாட்டின் வேலையில்லா தன்மை நிலை ஊரடங்கு தளர்வு காரணமாக ஜுன் மாதத்தில் 8ல் 7 சதவீதமாக குறைந்துள்ளது.
- இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்திலிருந்து வெளியிடப்பட்ட தகவலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டப் பேரவை கூட்டத் தொடர் தொடக்கம்

- தமிழகத்தில் 16–ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் ஜுன் 21 தொடங்குகிறது.
- சட்டப் பேரவைத் தேர்தலுக்கு பிறகு நடைபெறும் புதிய பேரவையின் முதல் கூட்டத்தை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றி தொடக்கி வைக்கிறார்.

## சர்வதேச யோகா தினம்: இணையவழியில் பயிற்சி மேற்கொள்ள மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

- உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் இணைய வழியில் குறைந்தபட்சம் 45 நிமிஷங்கள் யோகா பயிற்சியில் ஈடுபட்டு அது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.
- இது குறித்து அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள், கல்லூரி முதர்வர்களுக்க யுஜிசி அனுப்பியுள்ள சுற்றறிக்கை: சர்வதேச யோகா தினமான, ஜூன் 21–ஆம் தேதி "யோகாவுடன் இருங்கள்; வீட்டிலேயே இருங்கள்" என்ற கருப்பொருளில் பேராசிரியர்கள், மாணவர்கள் அவரவர் வீடுகளில் இருந்தே யோகா செயல்பாடுகளில் ஈடுபடுமாறு சுற்றறிக்கை மூலம் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது.

## புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலுக்கு இந்தியா பதில்

- இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப விதிகள்–2021 குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் சிறப்பு பிரதிநிதிகள் கவலை தெரிவித்ததற்கு இந்தியா பதிலளித்துள்ளது.
- இது தொடர்பாக ஐ.நா. அமைப்பின் சிறப்புப் பிரதிநிதிகளுக்கு அந்த அமைப்புக்கான இந்திய பிரதிநிதி அலுவலகம் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:
- புதிய தகவல் தொழில்நுட்ப வரைவு விதிகளை தயாரிப்பது தொடர்பாக இந்திய மின்னணு மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவை கடந்த 2018–ஆம் ஆண்டு பொதுமக்கள், தொழில்துறை சங்கங்கள், நிறுவனங்கள் உள்பட பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளை பெற்றன. அதன் பிறகு அமைச்சகங்களுக்கு இடையோயான கூட்டத்தில் அதுகுறித்து விவாதிக்கப்பட்டு, அதற்குத் தகுந்தவாறு விதிகள் இறுதி செய்யப்பட்டன.
- சமூக ஊடகங்கள் தவறாக பயன்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து கவலை எழுந்த நிலையில், இந்த விதிகளை அமல்படுத்துவதற்கான தேவை உருவானது. சமூக ஊடகங்களை உபயோகிக்கும் சாதாரண பன்பாட்டாளர்களுக்கும் அதிகாரமளிக்கும் விதத்தில் இந்த விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- அதே வேளையில் அடிப்படை ஜனநாயக கொள்கைகள், பண்புகளை இந்தியா எப்போதும் அங்ககரித்துள்ளதையும், பேச்சு மற்றும் கருத்து சுதந்திர உரிமையை இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளதையும் இந்திய தூதரகம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. எனவே பேச்சு மற்றும் கருத்துரிமையில் புதிய தொழில்நுட்ப விதிகள் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறுவது தவறு.

## நீதிமன்ற வரம்பை கேரளத்திலிருந்து கர்நாடகத்துக்கு மாற்ற லட்சத்தீவுகள் நிர்வாகம் திட்டம்

- கேரள உயர்நீதிமன்றத்தில் இருந்து கர்நாடக உயர்நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கு நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.
- கேரள உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்குள் லட்சத்தீவுகள் வருகிறது.
- நீதித்துறை சார்ந்த விவகாரங்களுக்கு லட்சத்தீவுகள் மக்கள் கேரள உயர்நீதிமன்றத்தையே நாட வேண்டும்.
- லட்சத்தீவுகள் நிர்வாகி பிர.ஃபுல் கோடா படேல் தலைமையிலான நிர்வாகம், அண்மையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. யூனியன் பிரதேசத்தில் சுற்றுலாவை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலைக் காக்கவும் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

## உலக அளவில் அந்நிய நேரடி முதலீடு: இந்தியாவுக்கு 5–ஆவது இடம்

- கடந்த 2020–ஆம் ஆண்டில் அதிக அளவில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த நாடுகளின் பட்டியலில் 6,400 கோடி டாலர் (ரூ.4.7 லட்சம் கோடி) முதலீட்டுடன் இந்தியா 5–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதுகுறித்துஐ.நா.வின்வர்த்தகம்மற்றும்மேம்பாட்டு அமைப்பு (யுஎன்சிடிஏடி) தெரிவித்துள்ளதாவது: கரோனா பேரிடர் சர்வதேச அந்நிய நேரடி முதலீட்டில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக, கடந்த 2020–இல் சர்வதேச நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டின் அளவு 35 சதவீதம் சரிவடைந்து 1 லட்சம் கோடி டாலர்களாக குறைந்துள்ளது. அதேசமயம், கரோனா பாதிப்புக்கு முந்தைய 2019–ஆம் ஆண்டில் இந்த முதலீடு 1.5 லட்சம் கோடி டாலராக காணப்பட்டது.

- அதே சமயம், இந்தியாவில் கடந்த 2019–ஆம் ஆண்டில் 5,100 கோடி டாலராக (ரூ.3.78 லட்சம் கோடி) காணப்பட்ட அந்நிய நேரடி முதலீடு பேரிடர் காலமான 2020–லும் 27 சதவீத வளர்ச்சியைக் கண்டு 6,400 கோடி டாலராக (ரூ.4.7 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இதற்கு, தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத் துறையே (ஐசிடி) முக்கிய காரணம். இது, உலக அளவில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகம் ஈர்த்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 5–அவது இடத்தை பிடிக்க உதவியுள்ளது.
- கரோனா பேரிடர் காரணமாக, சர்வதேச அளவில் டிஜிட்டல் கட்டமைப்பு, சேவைகளுக்கான தேவை சூடு பிடித்துள்ளது.
- இதன் விளைவாக, ஐசிடி துறையில் புதிய அந்நிய நேரடி முதலீட்டு திட்டங்களுக்கான அறிவிப்புகள் 22 சதவீதம் அதிகரித்து 8,100 கோடி டாலராக (ரூ.6 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

## வாழ்வதற்கு உகந்த நகரங்கள் குறியீடு 2020

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் வெளியிட்டுள்ள வாழ்விற்கு உகந்த நகரங்கள் பட்டியலில் பெங்களூரு முதலிடம் பெற்றுள்ளது.
- இந்தியாவின் சுற்றுச்சூழல் 2020 என்ற அறிக்கையின் ஒரு பகுதியாக இந்த குறியீடு வெளியிட்டுள்ளது.
- வாழ்க்கைத்தரம், பொருளாதார நிலை, நீடித்த வாழ்வு, எதிர்கால தேவைகள் என்ற அடிப்படையில் இந்த குறியீடு தயாரிக்கப்பட்டது.
- முதல் 5 நகரங்கள்: பெங்களூரு, சென்னை, சிம்லா, புவனேஷ்வர், மும்பை.

## உலகின் முதல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இரப்பர்

- அஸ்ஸாம் மாநிலத்தில் உலகின் முதல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இரப்பர் மரக்கன்று நடப்பட்டுள்ளது.
- ரப்பர் வாரிய தலைவர் K.N.ராகவன் இந்த மரக்கன்றை நட்டார்.
- இதில் அதிகளவு MnSOD ஜீனின் அதிக பதிவுகள் சூப்பர் ஆக்ஸைடு, டிஸ்முடேஸ், மங்கனீசு போன்றவை சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- கேரளாவில் உள்ள ரப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

## செய்திகளில் உண்மைத்தன்மை அறிக்கை 2021

- 2021 ரீடர்ஸ் டிஜிட்டல் செய்தி நிறுவனத்தின் அறிக்கையில் 46 நாடுகளில் செய்திகளில் உள்ள உண்மைத்தன்மை குறியீட்டுகளில் இந்தியா 31வது இடம் பெற்றுள்ளது.
- பின்லாந்து 65% உறுதி நிலையுடன் முதலிடத்திலும் அமெரிக்கா 29% உடன் கடைசி நிலையிலும் உள்ளது.
- இந்தியாவில் 73% மக்கள் இணையதள யுடியூப், வாட்ஸ்அப் வழியாக செய்திகளை அறிவதாக தெரிவித்துள்ளது.

## உள்நாட்டு பொம்மை தயாரிப்புத் தொழில் மேம்பட வேண்டும்

- 'உள்ளூர் பொம்மைகளுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும்; உள்நாட்டு பொம்மை தயாரிப்புத் தொழில் மேம்பட வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.
- டாய்க்கத்தான் – 2021 எனப்படும் புதிய பொம்மைகள் தயாரிப்பு மற்றும் விளையாட்டுகளுக்கான போட்டிகளில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் மோடி காணொலி முறையில் கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியதாவது:
- நாம் 80 சதவீத பொம்மைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். இதனால் நம்முடை பணம் கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டியது முக்கியம்.
- சர்வதேச அளவில் பொம்மை தயாரிப்புச் சந்தையில் ரூ.7.5 லட்சம் கோடி அளவுக்கு வர்த்தகம் நடைபெறுகிறது. அதில், ரூ.11,000 கோடி அளவுக்கு மட்டுமே இந்தியா பகிர்ந்து கொள்கிறது. இந்தியாவில் பொம்மை தயாரிப்புத் தொழில் துறை மேம்பட வேண்டும். அதாவது, பொம்மைகள் தயாரிப்பு மற்றும் விளையாட்டுகள் சார்ந்த பொருளாதாரம் மேம்பட வேண்டும்.
- நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு, பொம்மை தயாரிப்புத் துறையினருக்கு மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. அவர்கள், சுதந்திர போராட்ட வீரர்களின் கதைகள், அவர்களின் வீரம், தலைமைப் பண்பு ஆகியவற்றை கருத்துருவாகக் கொண்டு விளையாட்டுகளை உருவாக்கலாம் என்றார் பிரதமர் மோடி.

## இந்த நூற்றாண்டின் சிறந்த கொடையாளி ஜாம்ஷெட்ஜி டாடா

- ஹிருன் ஆராய்ச்சி ஈடில்கிவ் அமைப்பின் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த நூற்றாண்டிற்கான சிறந்த கொடையாளியாக ஜாம்ஷெட்ஜி டாடா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 50 சிறந்த கொடையாளிகள் பட்டியலை இந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.
- டாடா இதுவரை 102.4 பில்லியன், பில்கேட்ஸ் அறக்கட்டளை. 74.6 பில்லியனுடன் இரண்டாமிடம், ஹென்றி வெல்கம் 56.7 பில்லியன், பட்டியலில் 12ம் இடம் பெற்றுள்ள மற்றொரு இந்தியர் ஆசிம் பிரேம்ஜி.

## சீர்மிகு நகரங்கள் திட்டத்தைச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேசம் முதலிடம்

- சீர்மிகு நகரங்கள் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தைச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேசம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழகம் மூன்றாமிடம் பெற்றுள்ளது.
- நகரங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 2015–ஆம் ஆண்டு ஜுன் 25–ஆம் தேதி சீர்மிகு நகரங்கள் திட்டத்தை மத்திய பாஜக அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் படி, நாட்டில் 100 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது.
- இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன் 6–ஆம் ஆண்டையொட்டி சிறப்பு விருதுகளை மத்திய வீட்டுவசதி–நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் அறிவித்தது. அதன்படி, சீர்மிகு நகரங்கள் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் உத்தர பிரதேசம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதில் மத்திய பிரதேசம் இரண்டாம் இடத்தையும் தமிழகம் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.
- ஆசியா ஆற்றல் அமைச்சர்கள் வட்ட மேசை மாநாடு–2022
- 9வது ஆசியா ஆற்றல் அமைச்சர்கள் வட்ட மேசை மாநாட்டை இந்தியா தலைமையேற்று நடத்த உள்ளது.
- சர்வதேசஆற்றல்மன்றத்தின்பொதுச்செயலாளராக ஜோசப் மெக்மோனிங்க்லே மற்றும் பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் இதை அறிவித்தனர்.
- 2019ம் ஆண்டு கூட்டம் அபுதாபியில் நடைபெற்றது.

## ரேபிஸ் அற்ற முதல் மாநிலம் கோவா

- ரேபிஸ் நோய் பதிவாகாத இந்தியாவின் முதல் மாநிலம் கோவா ஆகும்.
- கோவா முதலமைச்சர் பிமோத் சவாந்த் இதை அறிவித்துள்ளார். இந்த நிலை ராபிஸ் ஒழிப்பு என்ற திட்டத்தின் மூலம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## இரயில்வே செயலாக்கம் அதிகரிப்பு

- 2019–2020ம் ஆண்டு ஒப்பீட்டளவில் 2020–2021 ஆம் ஆண்டின் இரயில்வே செயல்பாடு 97.45% அதிகரித்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 100 ரூபாயில் செயலாக்க விகிதம் உயர்ந்திருப்பதாக இந்திய இரயில்வே சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார சீர்திருத்தங்களின் முன்னோடி நரசிம்ம ராவ் பிரதமர் புகழாரம்

- இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தங்களின் முன்னோடியாக திகழ்ந்தவர் என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு புகழாரம் சூட்டினார்.
- மறைந்த முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவின் 100–ஆவது பிறந்த நாளையொட்டி அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

## அகமதாபாத் ஜென் பூங்கா

- குஜராத் மாநிலம் அகமாதாபாத்தில் பிரதமர் நரேந்திர மோடி கெய்சன் அகாடமியின் ஜென் பூங்காவை திறந்து வைத்தார்.
- ஜப்பான் நாட்டுடன் இணைந்த இந்த பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## லக்னௌவில் அம்பேத்கர் நினைவிடத்துக்கு அடிக்கல் நாட்டினார் குடியரசுத் தலைவர்

- உத்தர பிரதேச மாநிலத் தலைநகர் லக்னௌவில் அரசியல் சட்ட வரைவுக் குழுத் தலைவரான பி.ஆர்.அம்பேத்கரின் நினைவிடத்துக்கு குடியரசுத் தலைவர் ராம்நாம் கோவிந்த் அடிக்கல் நாட்டினார்.
- லக்னௌ நகரின் ஐஷ்பாக் பகுதியில் ரூ.45 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள இந்த நினைவிடத்தில் நூலகம், ஆய்வு மையம், புகைப்பட அரங்கம், அருங்காட்சியகம், உணவகம், 750 பேர் அமரக்கூடிய மண்டபம் ஆகியவை அமைய

உள்ளன. நினைவிடத்தில் 25 அடி உயரம் கொண்ட அம்பேத்கரின் சிலையும் நிறுவப்படும்.

- இந்த நினைவிடத்தை அமைப்பதற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அடிக்கல் நாட்டினார். விழாவில் உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத், துணை முதல்வர்கள் கேசவ் பிரசாத் மௌர்யா, தினேஷ் சர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர். குடியரசுத் தலைவர் இவ்விழாவில் பேசியது:
- 93 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில்தான் அம்பேத்கர் "சமதா" என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அவரது சமத்துவ சமுதாயச் சிந்தனையைப் பரப்பவே இந்தப் பத்திரிகை தொடங்கப்பட்டது. சமத்துவம் இல்லாமல் சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வாய்ப்பில்லை. பெண்களுக்கு சம உரிமைகளை உறுதிப்படுத்துவதில் அம்பேத்கர் தீவிரமாகச் செயல்பட்டார்.

## அணுசக்தி மையங்களின் படங்களை ஐ.நா.விடம் தர முடியாது

- அணுசக்தி மையங்களின் படங்களை ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பிடம் (ஐஏஇஏ) ஒப்படைக்க முடியாது என்று ஈரான் திடீரென அறிவித்துள்ளது.
- இதையடுத்து, அந்த நாட்டுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான முயற்சியில் மேலும் சிக்கல் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.
- இது குறித்து ஈரான் நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமது பக்கீர் காலிபாஃப் கூறியதாவது: அணுசக்தி மையங்களின் உள்ளே எடுக்கப்படும் படங்களை ஐஏஇஏ-வுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. எனவே, இனி அத்தகைய படங்கள் எதுவும் அந்த அமைப்பிடம் வழங்கப்படாது. அந்தப் படங்களை ஈரானே கைவசம் வைத்திருக்கும் என்றார் அவர்.
- ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனிக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

## புகழ்பெற்ற இந்திய இலக்கிய நூல்கள்: எஸ்சிஓ அமைப்புக்கு பரிசளிப்பு

- வெவ்வேறு இந்திய மொழிகளில் எழுதப்பட்ட 10 புகழ்பெற்ற நவீன இலக்கிய நூல்களை மொழிபெயர்த்து ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்புக்கு (எஸ்சிஓ) இந்தியா பரிசளித்துள்ளது.
- பெய்ஜிங்கில் உள்ள எஸ்சிஓ தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த நூல்களை எஸ்சிஓ பொதுச் செயலர் விளாதிமீர் நோரோவிடம் சீனாவுக்கான இந்திய தூதர் விக்ரம் மிஸ்ரி வழங்கினார்.
- ஜெயகாந்தனின் "சிலநேரங்களில் சில மனிதர்கள்', தாராசங்கர் பந்தோபாத்யாய எழுதியுள்ள ஆரோக்ய நிகேதன் (வங்கமொழி), ராஜேன்திர சிங் பேடியின் "ஏக் சதர் மைலி ஸி" (உருது), ரச்சகொண்டா விஸ்வநாத சாஜ்திரியின் "இல்லு" (தெலுங்கு), நிர்மல் வர்மாவின் "கவ்வே ஔர்காலா பானி" (ஹிந்தி), மனோஜ் தாஸ் எழுதி ஒடியா சிறுகதைகள், குர்தயாள் சிங்கின் "மரீ த தீவா" (பஞ்சாபி), எஸ்.எல்.பை ரப்பா எழுதிய "பர்வ" (கன்னடம்), ஜாவேர்சந்த் மேக்னானி எழுதிய "வேவிஷால்" (குஜராத்தி), சையத் அப்துல் மாலிக்கின் "சூர்ய முகீர் ஸ்வப்னா" (அஸ்ஸாமி) ஆகிய நூல்களின் சீன, ரஷிய, ஆங்கில மொழிபெயர்ப்புகள் பரிசளிக்கப்பட்டுள்ளன.
- அப்போது, அந்த நூல்களால் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளுக்கு இடையேயான கலாசார உறவு வலுப்படும் என்று தாம் நம்புவதாக விக்ரம் மிஸ்ரி கூறினார்.

## ஜூலை 1 முதல் தேர்தல் நிதிப் பத்திரங்கள் விற்பனை

- தேர்தல் நிதிப் பத்திரங்களை ஜூலை 1 முதல் 10 ஆம் தேதி வரை விற்பனை செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசியல் கட்சிகளுக்கு பணமாக நன்கொடை அளிப்பதற்கு மாற்றாகவும், கட்சிகளுக்கு நிதி கிடைப்பதில் வெளிப்படைத்தன்மையை கொண்டு வரவும் தேர்தல் நிதிப் பத்திரத் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- இந்நிலையில் அந்தப் பத்திரங்களின் 17-ஆம் கட்ட விற்பனைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்தது. அந்தப் பத்திரங்கள் ஜூலை 1 முதல் 10-ஆம் தேதி விற்பனை செய்யப்படும் என்ற அந்த அமைச்சகம் கூறியுள்ளது.
- இந்தப் பத்திரங்கள் புதுதில்லி, சென்னை,

திருவனந்தபுரம், மும்பை உள்ளிட்ட நகரங்களில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) 29 கிளைகளில் மட்டும் விற்பனை செய்யப்படுகின்றன.

## துருக்மெனிஸ்தானின் அஸ்காபாத் உலக அளவில் செலவு மிகுந்த நகரம்

- மெர்கர் 2021 வாழ்வதற்குரிய செலவினங்கள் அடிப்படையிலான பட்டியலில் வெளிநாட்டினர் தங்குதற்கு அதிக செலவு உடைய நகரமாக துருக்மெனிஸ்தானின் அஸ்காபாத் நகரம் உள்ளது.
- ஹாங்காங் இரண்டாமிடத்திலும், பீரட் (லெபனான்) 3ம் இடத்திலும் ஜப்பானின் டோக்கியோ 4வது இடத்தையும் பெற்றுள்ளது.
- இந்திய அளவில் மும்பை 78வது இடத்தையும், புதுதில்லி 117, சென்னை (158), பெங்களூரு 170 இடத்தை பெற்றுள்ளது.

# 7 சர்வதேச நிகழ்வு



## மேற்கு ஆப்பிரிக்க கூட்டமைப்பிலிருந்து மாலி நீக்கம்

- மாலியில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதைக் கண்டித்து, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து அந்த நாடு நீக்கப்பட்டுள்ளது.
- பயங்கரவாதத் தாக்குதல்கள், கரோனா தொற்று பரவல் உள்ளிட்டவற்றைக் காரணம் காட்டி மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இடைக்கால அரசின் அதிபராக பா டாவ், பிரதமராக மோக்டர் அவுனே ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

### மேற்கு ஆப்பிரிக்க கூட்டமைப்பு

- துவக்கம் – 1975
- உறுப்பு நாடுகள் – 15
- பெனின், பர்இனத, காபோ, கோட் டி இவோரி, காம்பியா, கானா, கினியா, மிஸிவா, லைபீரியா, மாலி, நைஜர், நைஜிரியா, செனிகல், சீரா லியோன், டோகோ.

## கரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு பிரிக்ஸ் கூட்டத்தில் வலியுறுத்தல்

- பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கரோனா நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.
- பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் அமைப்பின் கூட்டம் காணொலி வழியாக நடைபெற்றது. இதில் 5 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.

## ஈரான் போர்க் கப்பல் எரிந்து மூழ்கியது

- ஈரானின் மிகப்பெரிய போர்க் கப்பல் ஓமன் வளைகுடாவில் மர்மமான முறையில் எரிந்து மூழ்கியது.
- ஓமன் வளைகுடா பகுதியில் ஈரான் கடற்படைக்குச் சொந்தமான "கார்க்" கப்பலில் தீப்பிடித்தது. 207 மீட்டர் நீளம் கொண்ட அந்தக் கப்பல்தான் ஈரானின் மிகப்பெரிய போர்க்கப்பலாகும்.

## சீனாவின் "சினோவேக்"கிற்கு அவசரகால பயன்பாட்டிற்கு ஒப்புதல்

- உலக சுகாதார அமைப்பு அவசர கால பயன்பாட்டிற்கு சீனாவின் இரண்டாவது தடுப்பூசியான "சினோவே"க்கிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஏற்கனவே சினோபார்ம் என்ற சீனாவின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

## இஸ்ரேல் புதிய அதிபராக ஐசக் ஹெர்ஸாக் தேர்வு

- இஸ்ரேலின் புதிய அதிபராக மூத்த அரசியல்வாதி ஐசக் ஹெர்ஸாக் தேர்வு செய்யப்பட்டார். நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக நடைபெற்ற ரகசிய வாக்கெடுப்பில் அவர் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## நகர்ப்புற மேம்பாட்டில் ஜப்பானுடன் ஒத்துழைப்பு: ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- ஜப்பானுடன் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
- எஸ்சிஓ அமைப்புடன் ஒப்பந்தம்: ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (எஸ்சிஓ) இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பு நாடுகளுடன் மக்கள் தொடர்பு சாதனங்கள் துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா, கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷியா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெறும்.

## பிரதமர் மோடியுடன் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் பேச்சு

- ஆமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் உரையாடினார். அப்போது இந்தியாவுக்கு ஜுன் மாத இறுதியில் கரோனா தடுப்பூசி வழங்குவதாக அவர் தெரிவித்தார்.
- உலகளாவிய கரோனா தடுப்பூசி பகிர்வு திட்டத்தின் கீழ் ஜுன் இறுதியில் உலக நாடுகளுக்கு அமெரிக்கா 8 கோடி தடுப்பூசி விநியோகம் செய்வது தொடர்பான திட்டத்தை அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.
- அதன்படி, ஜுன் மாத இறுதியில் முதல் தவணையிலேயே இந்தியாவுக்கு அமெரிக்கா தடுப்பூசி வழங்கவுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறு முதல் தவணையில் தடுப்பூசி வழங்கப்பட இருக்கும் நாடுகளில், இந்தியா உள்ளிட்ட 4 நாடுகளின் தலைவர்களுடன் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் தொலைபேசியில் பேசினார்.

## பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்பைத் தடுக்க வரலாற்று ஒப்பந்தம்

- பன்னாட்டு நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்கும் சர்வதேச வரி சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் உலகின் மிகப் பெரிய 7 பணக்கார நாடுகள் கையெழுத்திட்டன.
- தொழில் வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் 7 நாடுகளின் கூட்டமைப்பான ஜி–7 அமைப்பின் 46–ஆவது மாநாடு பிரிட்டனின் கார்ன்வால் மாகாணம், பார்பிஸ் பே நகரில் வரும் 11 முதல் 13–ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது.
- இதில், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதியமைச்சர்கள் பங்கேற்றனர்.
- கரோனா நெருக்கடியால் நாடுகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்தச் சூழலில், வரலாற்றுக் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தால் நாடுகளுக்கு கணிசமான வரி வாருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த ஒப்பந்தம் அமலுக்கும் வந்தால், அமேஸான், கூகுள் போன்ற மிகப் பெரிய பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

**ஒப்பந்த அம்சங்கள்**

- நிறுவனங்கள் எந்த நாட்டில் செயல்பட்டு லாப மீட்டுகிறதோ, அந்த நாட்டில் தான் அதற்கான வரியை செலுத்த வேண்டும்.
- குறைந்தபட்சம் 10 சதவீதம் லாபமீட்டும் எல்லா பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்த விதிமுறை பொருந்தும்.
- நாடுகளிடையே தொழில் வரி விதிப்பில் ஏற்றத்தாழ்வுகளைகளையும் வகையில், சர்வதேச குறைந்தபட்ச தொழில் வரி விகிதம் 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## நைஜீரியாவில் ட்விட்டருக்கு தடை

- நைஜீரியா அதிபர் முகமது புஹாரியின் சர்ச்சைக்குரிய பதிவை சுட்டுரை (ட்விட்டர்) வலைதளம் நீக்கியதைத் தொடர்ந்து, அந்த வலைதளம் அங்கு தற்காலிகமாக முடக்கப்பட்டது.
- இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் செயல்பட்டு வரும் பிரிவினைவாதிகளுக்கு மிரட்டல் விடுத்து, சுட்டுரை வலைதளத்தில் அதிபர் புஹாரி பதிவு வெளியிட்டிருந்தார்.
- அந்தப் பதிவு தங்களது விதிமுறைகளுக்கு எதிரானது எனக் கூறி, ட்விட்டர் நிறுவனம் அதனை நீக்கியது.
- இதற்கு தகவல் துறை அமைச்சர் லாய் முகமது கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சுட்டுரைப் பதிவில், ட்விட்டர் நிறுவனம் நைஜீரியாவின் நலன்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் நாட்டில் சுட்டுரை வலைதளம் முடக்கி வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.
- ட்விட்டர் நிறுவனம் செயல்படும் விதம் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கெனவே, நைஜீரிய அரசுக்கு எதிராக அந்த நிறுவனம் செயல்பட்டதாகவும் அமைச்சர் லாய் முகமது சாடியிருந்தார்.
- எனினும், இந்த அறிவிப்பு எப்போது அமலுக்கு வரும் என்று அவர் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

## உலகின் முதல் கார்பன்டை ஆக்ஸைடு நடுநிலைமை பெற்ற சிமென்ட் தொழிற்சாலை

- உலகின் இரண்டாவது பெரிய தொழிற்சாலை ஹீடஸ்பெர்க் சிமென்ட் தொழிற்சாலை உலகின்

முதல் கார்பன் உமிழ்வுகளற்ற தொழிற்சாலையாக 2030க்குள் உருவாக்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

- இந்த நிறுவனம் ஸ்வீடனில் அமைந்துள்ளது.

## குட்டெரெஸ் மீண்டும் ஐ.நா. பொதுச் செயலர்: பாதுகாப்பு கவுன்சில் பரிந்துரை

- ஐ.நா. பொதுச் செயலர் பதவிக்காக அன்டோனியோ குட்டெரெஸ் பெயரை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பரிந்துரைத்தது.
- தற்போது ஐ.நா. பொதுச் செயலராக இருக்கும் குட்டெரெஸ், 2–ஆவது முறையாக அந்தப் பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் நடைபெற்றது. அதில், ஐ.நா. பொதுச் செயலர் பதவிக்காக குட்டெரெஸ் பெயரை பரிந்துரைக்கும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. அடுத்து இந்தத் தீர்மானம் ஐ.நா. பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்படும்.
- ஐ.நா. பொதுச் செயலர் நியாயமானது, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பரிந்துரையின் பேரில் ஐ.நா. பொதுச் சபையால் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தியா வரவேற்பு: குட்டெரெஸ் பெயர் பரிந்துரைக்கப்பட்டதற்கு வரவேற்பு தெரிவித்து ஐ.நா.வுக்கான இநதிய தூதர் டி.எஸ். திருமூர்த்தி வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், "ஐ.நா. பொதுச் செயலர் பதவிக்கு 2–ஆவது முறையாக அன்டோனியோ குட்டெரெஸ் பெயரை பரிந்துரைத்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானத்தை இந்தியா வரவேற்கிறது" என்று கூறியுள்ளார்.

## பிட்காயினை சட்டபூர்வ நாணயமாக அங்கீகரித்தது எல் சால்வடார்

- மெய்நிகர் நாணயமான பிட்காயினை பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சட்டப்பூர்வ நாணயமாக மத்திய அமெரிக்கா நாடான எல் சால்வடார் அங்கீகரித்துள்ளது. இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ள முதல் நாடு எல் சார்வடார் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார உளவு அமைப்பின் உலக வாழ்விட குறியீடு

- பொருளாதார உளவு அமைப்பின் EIUன் உலக வாழ்விட குறியீட்டில் ஆக்லாந்து முதலிடத்தில் உள்ளது.
- சுற்றுச்சூழல், கலாச்சாரம், கல்வி, ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது.
- அடிலெய்ட், ஒசாகா, டோக்கியோ, வெலிங்டன் ஆகியவை ஆசியாவின் முதல் 5 இடங்களில் உள்ள நகரங்கள் ஆகும்.
- 140 நகரங்களில் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஜெனீவா, கரிச் போன்ற நகரங்கள் முதல் 10 இடங்களுக்குள் உள்ளது.

## 8வது உலக நைட்ரஜன் மாநாடு

- 8வது சர்வதேச நைட்ரஜன் துவக்க மாநாடு ஜெர்மனி பெர்லினில் நடைபெற்றது.
- ஐக்கிய நாடுகள் சபை நீடித்த வளர்ச்சி இலக்குகள் 17ஐ நோக்கமாக கொண்டு இந்த சர்வதேச மாநாடு 2030ஐ இலக்காக கொண்டு நடத்தப்படுகிறது.
- ஜெர்மனி இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்குகிறது.

## ராணுவ அமைப்புகளைக் கண்காணிக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் இருந்து ரஷியா விலகல்

- ராணுவ கட்டமைப்புகளைக் கண்காணிப்பதற்கு வழிவகுக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் இருந்து ரஷியா விலகியுள்ளது.
- அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் இடையேயான பனிப்போர் முடிவுக்கு வந்ததையடுத்து, குறிப்பிட்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ராணுவ கட்டமைப்புகளை மற்ற நாடுகளின் விமானங்கள் கண்காணிக்கும் வகையில் சர்வதேச ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 35–க்கும் மேற்பட்ட நாடுகள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- கடந்த 2002–ம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தது.
- இதுவரை 1,500–க்கும் மேற்பட்ட விமானங்கள் சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள ராணுவக் கட்டமைப்புகளைக் கண்காணித்துள்ளன.
- இதன் வாயிலாக ராணுவ விவகாரத்தில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.
- ஆனால், இந்த ஒப்பந்தத்தை மீறி ரஷியா நடந்து கொண்டதாகக் கடந்த ஆண்டில் குற்றஞ்சாட்டிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் அந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தது.

## உலகின் நீளமான கடலுக்கு அடியிலான கேபிள் இணைப்பு

- கூகுள் நிறுவனம் பிரீமினியா என்ற அமெரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவை இணைக்கும் உலகின் மிக நீளமான கடலுக்கு அடியிலான கேபிள் இணைப்பை ஏற்படுத்தி வருகின்றது.

## செயின் அனாலிஸிஸ் அறிக்கை

- பிட்காயின் எனப்படும் மெய்நிகர் பணத்தில் அமெரிக்கா அதிக முதலீடுகளை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 18வது இடம் பெற்றுள்ளது.

## கென்யா வெளியுறவு அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

- கென்யாவுக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணமாக சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ரேச்சல் ஒமாமோவுடன் இரு தரப்பு நல்லுறவு குறித்து ஆலோசனை நடத்தினர்.

## இஸ்ரேல் புதிய பிரதமராக நாஃப்டாலி பென்னட் பதவியேற்பு

- இஸ்ரேல் புதிய பிரதமராக நாஃப்டாலி பென்னட் பதவியேற்றார். இதன் மூலம் பெஞ்சமின் நெதன்யாகுவின் 12 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது.
- இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்தன. அந்தக் கூட்டணி அமைத்துள்ள பதிய அரசுக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் அளிப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் வலதுசாரி யாமினா புதிய அரசு வெற்றி பெற்றது. 120 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் புதிய அரசுக்கு அதரவாக 60 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் கிடைத்தன. ஒரு உறுப்பினர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

## சீனாவுக்கு எதிரான ஜி–7 நாடுகளின் திட்டம் பரிசீலிக்கப்படும் இந்தியா தகவல்

- சீனாவின் பொருளாதார வழித்தடச் சாலை திட்டத்துக்கு எதிராக ஜி–7 நாடுகள் முன்மொழிந்துள்ள திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளது.
- பொருளாதார வழித்தடச் சாலை (பெல்ட் அண்ட் ரோட்) திட்டத்தை சீனா செயல்படுத்தி வருகிறது. அதன்படி, ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பிய பிராந்தியங்களில் உள்ள நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்திக் கொள்வதற்கு அந்நாடு திட்டமிட்டு வருகிறது.
- முக்கியமாக, ஆப்பிரிக்கா, ஆசியாவில் உள்ள வளர்ச்சியைடந்து வரும் நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் அதிக அளவில் கடன்களை வழங்கி கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.
- இந்நிலையில், அமெரிக்கா, பிரிட்டன், ஐப்பான், கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளைக் கொண்ட ஜி–7 கூட்டமைப்பின் மாநாடு அண்மையில் பிரிட்டனில் நடைபெற்றது. அதில், அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கம் குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தகவல்களை தெரிவிக்கின்றன.
- ஜி–7 நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீனா செயல்படுத்தி வரும் கட்டமைப்புத் திட்டத்துக்கு எதிராகப் புதிய திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று முன்மொழிந்தார்.

## சீன அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு அபாயம்

- சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் தைஸான் என்ற அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணுமின் நிலைய செயல்பாடுகளில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஃபிராமாடோம் என்ற நிறுவனம் உதவிபுரிந்து வருகிறது. இந்நிலையில், இந்த அணுமின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள கசிவால் உடனடி கதிர்வீச்சு அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக நிறுவனம் சார்பில் அமெரிக்க எரிசக்தி துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக சீன அரசு சார்பில் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.
- கதிரியக்க அச்சுறுத்தல் குறித்து பிரான்ஸ் நிறுவனம் எச்சரித்துள்ள போதிலும், சீன அணுமின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலால் அங்கு பணிபரிபவர்களுக்கோ சீன பொதுமக்களுக்கோ இப்போதைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை.

## உலகின் முதல் முகக்கவசத்தை விலக்கிய நாடு

- கரோனா காலத்திற்கு பிறகு தடுப்பூசி செலுத்தப்பட்டு மக்கள் முகக்கவசம் அணியாமல் வெளியே செல்லலாம் என்ற நிலையை அடைந்துள்ள முதல் நாடு இஸ்ரேல் ஆகும். அந்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் யுலி எடில் அறிவித்துள்ளார்.

## கத்தார் வெளியுறவுத் துறை அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

- கத்தார் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானியுடன் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தோஹாவில் சந்தித்து இருநாட்டு நல்லுறவு குறித்து ஆலோசனை நடத்தினார்.
- அந்நாட்டின் துணைப் பிரதமர் பதவியையும் வகிக்கும் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானியுடன் சர்வதேச மற்றும் இருநாட்டு விவகாரங்கள் குறித்தும் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## உலகின் முதல் மரத்தாலான செயற்கைகோள்

- ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆய்வு மையம் WISA என்ற மரத்தால் செய்யப்பட்ட செயற்கைக்கோளை நியுசிலாந்தின் மஹியா தீவிலிருந்து செலுத்த திட்டமிட்டுள்ளது. 2021ம் ஆண்டின் இறுதியில் மர பொருள்களால் உருவான இந்த திட்டம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

## ஜெனீவாவில் பைடன் – புதின் பேச்சு

- உலகின் சக்திவாய்ந்த இரு நாடுகளின் தலைவர்களான அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கும் ரஷிய அதிபர் விளாதிமீர் புதினுக்கும் இடையிலான நேரடிப் பேச்சவார்த்தை ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்றது.

## சிங்கப்பூர் உதவியுடன் ஹைதராபாதில் சர்வதேச மத்தியஸ்த மையம்

- ஹைதராபாத் நகரில் இந்திய சர்வதேச மத்தியஸ்த மையத்தை அமைக்க சிங்கப்பூரில் உள்ள உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனனிடம் உதவி கேட்டிருப்பதாக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா கூறினார்.
- ஹைதராபாதில் உள்ள ஆளுநர் மாளிகையில் தங்கியிருக்கும் அவர், இது தொடர்பாக மேலும் கூறியதாவது:
- தற்சமயம், சர்வதே அளவிலான வர்த்தகம் சார்ந்த வழக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கு லண்டன் அல்லது சிங்கப்பூரில் உள்ள சர்வதேச மத்தியஸ்த மையங்களை இந்திய நிறுவனங்கள் நாடுகின்றன.
- அதுபோன்ற மத்தியஸ்த மையத்தை இந்தியாவிலேயே அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிய நாடுகள், வளைகுடா நாடுகள், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுடன் தொடர்பில் இருக்கும் ஹைதராபாத் நகரம், அதற்குச் சிறந்த இடமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை தெலங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

## உலக போட்டி திறன் குறியீடு

- மேலாண்மை மேம்பாடு நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள உலக போட்டிதிறன் குறியீட்டில் இந்தியா 43வது இடம் பெற்றுள்ளது.
- இந்த பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடம் பிடித்துள்ளது.
- பிரிக்ஸ் நாடுகளில் இந்தியா சீனாவிற்கு அடுத்து 2ம் இடத்தில் உள்ளது.

## உலக அமைதி குறியீடு

- 15வது உலக அமைதி குறியீடு சிட்னி பொருளாதார மற்றும் அமைதி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
- உலக அளவில் 163 நாடுகளில் அமைதி வளர்ச்சியை மேம்படுத்துதலை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

### உலக அளவில்

- ஐஸ்லாந்து இந்த பட்டியலில் 2008 முதல் முதலிடம் பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது.

### தெற்கு ஆசியா

- இந்தியா இந்தப் பட்டியலில் 135வது இடத்தில் உள்ளது. தெற்கு ஆசிய பகுதியில் பூடான், நோபாளம் முதலிடம், இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

## உலகின் 3வது மிகப்பெரிய வைரம்

- ஆப்பரிக்கா கண்டத்தின் போட்ஸ்வானாவில் உலகின் 3வது மிகப்பெரிய வைரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- உலகின் முதல் மிகப்பெரிய வைரம்: 3106 கேரட்: குலினன்
- இரண்டாவது மிகப்பெரிய வைரம்: 1109 கேரட்: லெஸி டிலா ரோனா.

## ஈரான் குடியரசு தலைவர் தேர்தல்

- ஈரான் குடியரசு தலைவர் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் இப்ராஹிம் ரெய்ஸி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச தடுப்பூசி நிறுவனம்

- வங்கதேசத்தில் சர்வதேச நிறுவனத்தை அமெரிக்கா அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.
- இதற்காக அந்நாட்டு அரசு தென் கொரியாவுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- தொழில்நுட்ப பகிர்வு மற்றும் அடிப்படை கட்டமைப்பை வலுப்படுத்தல் அடிப்படையில் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட உள்ளது.

## இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

- இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனேவுடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

## அர்ஜென்டினாவில் நானோ யூரியா உற்பத்தி மையத்தை அமைக்க இப்கோ முடிவு

- இந்திய விவசாயிகள் உர கூட்டமைவு (IFFCO) தன்னுடைய உற்பத்தி மையத்தை அர்ஜென்டினாவில் அமைக்க திட்டமிட்டுள்ளது.
- அர்ஜென்டினாவின் சமூக பொருளாதார கூட்டமைவுடன் இணைந்து இதை உருவாக்க உள்ளனர். ஏற்கெனவே பிரேசிலிலும் இந்த நிறுவனம் அமைக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## ரஷிய பாதுகாப்பு ஆலோசகருடன் அஜுத் தோவல் ஆலோசனை

- ரஷியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிகோலாய் பட்ருஷேவை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் தஜிகிஸ்தானில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசித்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் ஜுன் 23, 24 ஆகிய தேதிகளில் துஷான்பேயில் நடைபெற்றது. இந்த ஆலோசனை குறித்து ரஷிய தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கரோனாவுக்கு பிறகு உலக அளவில் பயங்கரவாதம், போதைப் பொருள் கடத்தல், திட்டமிடப்பட்ட குற்றங்கள் அதிகரிப்பை தடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2001–இல் அமைக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகள் கூட்டமைப்பில் ரஷியா, சீனா, கிரிகிஸ்தான், கஜகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பேகிஸ்தான் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்தியாவும் பாகிஸ்தானும் 2017–இல் நிரந்தர உறுப்பு நாடுகளாயின.

## கண்காணிப்புப் பட்டியலில் பாகிஸ்தான் தொடரும்: எஃப்ஏடிஎஃப்

- இந்தியாவில் தேடப்படும் பயங்கரவாதிகளான ஹஃபீஸ் சயீத், மசூத் அசார் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தால், கண்காணிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் (கிரே லிஸ்ட்) பாகிஸ்தான் தொடர்ந்து நீடிக்கும் என்று பயங்கரவாத நிதித் தடுப்பு அமைப்பு (எஃப்ஏடிஎஃப்) தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக பாரீஸில் நடைபெற்ற அந்த அமைப்பின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அதன் தலைவர் மார்க்கஸ் பிலியர் இணையவழியில் கூறுகையில், பயங்கரவாதத்துக்கு நிதி உதவி அளிக்கப்படுவதைத் தடுக்க பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்ட 27 செயலாக்கங்களில் 26–ஐ அந்நாடு நிறைவேற்றியுள்ளது.

## கொரோனா வேக் குழந்தைகளுக்கு பாதுகாப்பானது

- சீனாவின் கொரோனா வேக் குழந்தைகளுக்கு (3–17) வயதுயடைவர்களுக்கு பாதுகாப்பானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனா: உலகின் இரண்டாவது மிகப் பெரிய நீர்மின் நிலையத்தில் மின் உற்பத்தி தொடக்கம்

- சீனாவில் அமைக்கப்பட்டுள்ள உலகின் இரண்டாவது மிகப் பெரிய நீர்மின் உற்பத்தி நிலையத்தின் முதல் இரண்டு அலகுகளில் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது.
- சீனாவின் தென்மேற்கே பாயம் யாங்ஸே ஆற்றின் துணை நதியான ஜின்ஷா ஆற்றின் குறுக்கே

இந்த நீர்மின் நிலையத்துக்கான பய்ஹேட்டன் அணையை சீனா கட்டியுள்ளது. சுமார் 954 அடி உயரம் கொண்ட இந்த அணையில், தலா 10 லட்சம் கிலோ வாட்ஸ் மின் உற்பத்தித் திறன் கொண்ட 16 அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

- முன்னதாக, யாங்ஸே ஆற்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட 2.25 கோடி கிலோ வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட "த்ரி கோர்ஜஸ்" அணையை சீனா கடந்த 2003–ஆம் ஆண்டு திறந்து செயல்பாட்டுக்கு கொண்டு வந்தது.
- இப்போது, சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நூற்றாண்டு நிறைவு வார விழாவின் ஒரு பகுதியாக, இரண்டாவது அணையில் மிகப் பெரிய நீர்மின் உற்பத்தி திட்டத்தை சீனா செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.
- அணைகள் அதிக அளவில் கட்டுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்களும் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுவது, மீன்கள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஆற்றின் சூழல் பாதிப்பு, சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எதிர்ப்பு உள்ளிட்ட காரணங்களால் நீர்மின் உற்பத்திக்கு உலகம் முழுவதும் ஆதரவு குறைந்து வருகிறது.

## முதல்வருடன் ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர்

- முதல்வர் மு.க.ஸ்டாலினை, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி.ரங்கராஜன் நேரில் சந்தித்துப் பேசினார். முன்னதாக, கரோனா நோய்த் தொற்று காலத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பாக கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் அறிக்கையை அளித்திருந்தார்.

## சர்வதேச ஒத்துழைப்பே கரோனா சவாலுக்கு பதில்: ஜி–20 மாநாட்டில் அமைச்சர் ஜெய்சங்கர்

- கரோனா தொற்று விடுத்திருக்கும் சவாலுக்கு, சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பே பதிலாகும் என்று ஜி–20 அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய வெளியுறவுத் தறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.
- இத்தாலியில் நடைபெறும் ஜி–20 கூட்டமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பங்கேற்று பேசியதாவது:
- உலகமயமாக்கலை பரவலாக்குவதுதான் இன்றைய உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாகும். அனைவருக்கும் பிரதிபலன் கிடைக்கும் வகையில் சர்வதேச கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.
- கரோனா தடுப்பூசியை சமமாக விநியோகம் செய்வதுதான் தற்போதைய உடனடி தேவையாக உள்ளது. தடுப்பூசிகள், மருந்துகள், பாதுகாப்பு கவச உடை, ஆக்சிஜன் என எதுவாக இருந்தாலும் கரோனா சவாலுக்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பே பதிலாகும் என்றார் அவர்.
- முன்னதாக, கிரீஸ் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜெய்சங்கர், அங்கிருதுந்து ஜி–20 அமைச்சர்கள் மத்தியலான மாநாட்டில் பங்கேற்க இத்தாலி வந்தார்.
- அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஜப்பான், இத்தாலி உள்ளிட்ட ஜி–20 நாடுகளின் மாநாடு அக்டோபர் மாதம் இத்தாலியில் நடைபெற உள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி–20 மாநாட்டுக்கு இந்தியா தலைமை ஏற்க உள்ளது.

### பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சருடன் சந்திப்பு

- பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் டொமினிக் ராபுடன் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.
- ஜி–20 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டின் இடையே இருவரின் சந்திப்பு நடைபெற்றது.
- இது தொடர்பாக சுட்டுரையில் அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்ட பதிவில், பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்து இரு நாட்டு நல்லுறவின் எதிர்கால திட்டம் குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. சர்வதேச மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் கரோனா, பருவநிலை மாற்றம் குறித்தும் ஆலோசனை நடத்தினோம் என்று தெரிவித்துள்ளார்.

# 8 தமிழ்நாடு



## மதுரையில் பிரம்மாண்ட நூலகம் எழுத்தாளர்களுக்கு வீடு-"இலக்கிய மாமணி" விருது

- முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் மதுரையில் பிரம்மாண்ட நூலகம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் சென்னை கோட்டூர்புரத்தில் ஆசியாவின் அதிநவீன மிகப்பெரிய நூலகமாக அண்ணா நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்டது. இந்த நூலகம், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கியவாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் விளங்கி வருகிறது.
- இது போன்றதொரு வசதியை மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டு, மதுரையில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் நினைவு நூலகம் அமைக்கப்படும். இந்த நூலகமானது இரண்டு லட்சம் சதுர அடி பரப்பில் ரூ.70 கோடி செலவில் நவீன வசதிகளுடன் ஏற்படுத்தப்படும்.

## கிங் ஆய்வக வளாகத்தில் பன்னோக்கு மருத்துவமனை

- சென்னை கிண்டியில் உள்ள கிங் ஆய்வக வளாகத்தில் ரூ.250 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினத்தை ஒட்டி, முதல்வர் ஸ்டாலின் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன்படி, தென் சென்னையில் உள்ள கிங் ஆய்வக வளாகத்தில் ரூ.250 கோடி மதிப்பில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.
- 122 ஆண்டுகள் பழைமையானது: சென்னை கிண்டியில் செயல்பட்டு வரும் கிங் ஆய்வகம் 122 ஆண்டுகள் பழைமையானது. ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 12 லட்சம் தடுப்பூசி மருந்துகளைத் தயாரித்து நோயத்தடுப்பில் முன்னிலை வகித்தது. சின்னம்மை, காலரா, ஸ்பானீஷ் ஃபுளு, டெங்கு, சிக்குன்குன்யா, பன்றிக் காய்ச்சல் ஆகிய நோயத் தாக்குதல்களில் இருந்து மக்களை காக்க இந்த ஆய்வகம் பெரிதும் பயன்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு பன்றிக் காய்ச்சல் பரவியபோது, சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டன.

## நீட் தேர்வுக்கு மாற்று வழிமுறைகளை ஆராய நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் உயர்நிலைக் குழு

- நீட் தேர்வுக்குப் பதிலாக அனைவரும் பயன்பெறத் தக்க வகையிலான மாற்று வழி முறைகள் குறித்த ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- உயர்நிலைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.கே.ராஜன், திண்டுக்கல் மாவட்டம் சிலுக்குவார்பட்டி கிராமத்தில் பிறந்தவர். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்து அதே கல்லூரியில் பகுதிநேரப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1987-ஆம் ஆண்டு நீதித் துறையில் பணியில் சேர்ந்து, திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, மதுரை, சேலம் மாவட்டங்களில் முதன்மை நீதிபதியாகப் பணியாற்றினார். 1996 முதல் 1999 வரையில் சட்டத் துறை செயலாளராகப் பணிபுரிந்தார். 2000-ஆம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்று 2005-இல் ஓய்வு பெற்றார்.

## நலிந்த கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி

- புதிதாக சேர்க்கப்பட்ட 1,000 நலிந்த கலைஞர்களுக்கான மாத நிதியுதவியை முதல்வர் மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.
- நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2018–19 மற்றும் 2019–2020–ஆம் ஆண்டுகளில் தலா 500 நலிந்த கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். மொத்தமாக 1,000 கலைஞர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட உள்ளன. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவியானது ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.3 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவித் திட்டத்தின் கீழ் 6,600 கலைஞர்கள் பயன்பெறுவர். இரண்டு ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட 1,000 கலைஞர்களுக்கான நிதியுதவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். அதன் அடையாளமாக 11 பேருக்கு அதற்கான உத்தரவுகளை அளித்தார்.

## பிரதான கோயில்களின் சொத்து ஆவணங்கள்: இணையத்தில் வெளியிட்டது அறநிலையத் துறை

- தமிழகத்தில் 23 மாவட்டங்களில் உள்ள பிரதான கோயில்களின் சொத்து ஆவணங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதில், திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமி கோயிலுக்குச் சொந்தமான 1,145–க்கும் மேற்பட்ட சொத்து ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் வருவாய்த் துறையின் ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு வருகின்றன.
- ஆவணங்கள் அனைத்தும் ஒத்திருப்பின் அவை இந்து சமய அறநிலையத் துறையின் இணையதளத்தில் (www.hrce.tn.gov.in) வெளியிடப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக, 23 மாவட்டங்களில் உள்ள பிரதான கோயில்களுக்குச் சொந்தமான சொத்து ஆவணங்கள் வெளியிடப்பட்டன.
- இது இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள கோயில்களில் 72 சதவீதம் கோயில்களின் சொத்துகள் இதில் அடங்கும் என அந்தத் துறை ஏற்கெனவே தெரிவித்திருந்தது.

## தமிழகத்தில் கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க "ஆபரேஷன் விண்ட்"

- தமிழகத்தில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்படுவதை தடுக்கும் வகையில் "ஆபரேஷன் விண்ட்" (Operation Wind) என்ற பெயரில் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

## தனியார் வனமாக அறிவிக்கப்பட்ட காலார் முனையம்

- கோயம்புத்தூர் மாவட்டத்தின் காலார் முனையத்தின் 50.79 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதி தனியார் வனப்பகுதியாக மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் தனியார் வனப்பரப்பு என அறிவிப்பு செய்யப்பட்டுள்ள முதல் பகுதி இதுவாகும்.

## தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை நிலை: ஆராய நீதிபதி முருகேசன் தலைமையில் ஆணையம்

- பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை நிலையை ஆராய தில்லி உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு:
- பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். இது கடந்த காலங்களில் உள்ள மாணவர் சேர்க்கை விவரங்களின்படி தெரியவருகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.
- நீதிபதி தலைமையில் ஆணையம்: அரசுப் பள்ளி மாணவர்களும் தொழிற்படிப்புகளில் அதிகம் சேர வேண்டும் என்ற கோரிக்கையை ஆராய்ந்தும், அரசுப் பள்ளி மாணவர்களின் சமூக, பொருளாதார நிலைகள் பற்றியும், அவர்கள் சந்திக்கும் இடர்பாடுகளைக் கண்டறியவும், கடந்த ஆண்டுகளில் மாணவர்களின் சேர்க்கை பல்வேறு தொழிற்கல்வி நிறுவனங்களில் எவ்வாறு உள்ளது என்றும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

## வீடுகளுக்கு நேரடியாக குழாய் மூலம் குடிநீர்: தமிழகத்துக்கு ரூ.3,691 கோடி ஒதுக்கீடு

- ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்படி தமிழகத்தில் வீடுகளுக்கு நேரடியாகக் குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தில் 2021–22 நிதியாண்டிற்கு ரூ.3,691.21 கோடியை மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது. இது வழக்கத்தைவிட 4 மடங்கு அதிகமாகும். இந்த நிதியின் முதல் தவணை ரூ.614.35 கோடி தமிழகத்துக்கு விடுவிக்கப்பட்டதாகவும் மத்திய ஜல் சக்தி துறை தெரிவித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி கடந்த 73–ஆவது சுதந்திர தினத்தின் போது 2024–க்குள் நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீரை நேரடியாக வழங்கும் "ஜல்ஜீவன் மிஷன்" திட்டத்தை அறிவித்திருந்தார்.
- கடந்த 22 மாதங்களில் 18.70 சதவீத வீடுகள் இந்தத் திட்டத்தால் குடிநீர் இணைப்பைப் பெற்று பயனடைந்துள்ளன.
- தமிழகத்தில் தற்போது 86.53 லட்சம் குடியிருப்புகள் நேரடி குழாய் நீர் இணைப்பைப் பெறாமல் உள்ளன. இந்த நிலையில், 2024–ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தை விரைந்து முடிக்கும் வகையில், தமிழக அரசிடம் நடப்பு ஆண்டின் செயல் திட்டத்ததை மத்திய அரசு கோரியுள்ளது.

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி–கல்வி உதவித் திட்டம் முதல்வர் தொடக்கி வைக்கிறார்

- நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி மற்றும் கல்வி உதவி அளிக்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார்.
- கரோனா நோய்த் தொற்றால் பெற்றோர், தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளுக்கு நிதியை வைப்பீடு செய்து பட்டப்படிப்பு வரை கல்விச் செலவும் ஏற்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்தத் திட்டத்துக்கான அரசின் வழிகாட்டு நெறிமுறைகளும் அண்மையில் வெளியிடப்பட்டு இருந்தன.
- இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார். தமிழகத்தில் கரோனா நோய்த் தொற்றால் பெற்றோர், தாய் அல்லது தந்தையை இழந்தவர்களுக்கு நிதிகளையும், கல்வி உதவிக்கான சான்றுகளையும் அவர் வழங்கவுள்ளார். இதற்கான நிகழ்வு தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது.

## சென்னை–குமரி தொழில் வழித் தடத்துக்கு ரூ.3,548 கோடி கடன்

- பின்தங்கியுள்ள தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோர மாவட்டங்களின் போக்குவரத்து இணைப்பு, தொழில் வளர்ச்சிகளை உருவாக்கும் சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தட திட்டத்துக்கு ஆசிய வளர்ச்சி வங்கி அளிக்கும் ரூ.3,548.97 கோடி கடனுக்கான ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திட்டது.
- மேற்கு வங்கத்திலிருந்து தமிழகம் வரையிலான "சாகர் மாலா" என்கிற கிழக்குக் கடற்கரை பொருளாதார வழித்தட திட்டத்ததை மத்திய தொழில் துறையின் தொழில் கொள்கை, மேம்பாட்டுப் பிரிவு உருவாக்கியது. இந்தக் கிழக்குக் கடற்கரை பொருளாதார வழித்தட திட்டத்தின் ஒரு பகுதி சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடமாகும். இதில், தமிழக அரசும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சென்னை–கன்னியாகுமரி வழித்தட திட்டத்தில் தமிழகத்தின் 23 மாவட்டங்கள் பயன்பறுகின்றன. குறிப்பாக மதுரை–தூத்துக்குடி, சென்னை–திருச்சி தொழில் வழித் தடங்களும் இணந்துள்ளன. இந்த மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான கிலோ மீட்டரில் சிறிய சாலைகள், சுமார் 590 கிலோ மீட்டர் வரையிலான மாநில நெடுஞ்சாலைகள், எணணூர், தூத்துக்குடி போன்ற பெரிய துறைமுகங்கள், காட்டுப் பள்ளி, காரைக்கால் போன்ற சிறிய துறைமுகங்களும் இந்தத் திட்டத்தின் மூலம் தரம் உயர்த்தப்பட உள்ளன.
- கடலோரத்தில்உள்ளநிலப்பகுதிகளில்உருவாகும் தொழில் முனையங்கள், துறைமுகங்களுடன் இணைப்பதன் வாியலாக, குறிப்பாக, சர்வதேச உற்பத்தி இணைப்புகள் மற்றும் சர்வதேச மதிப்பு சங்கிலிகளில் இந்திய தயாரிப்புகளின் பங்கு அதிகரிக்கப்படுகிறது. மேலும், இந்த வழித்தடத்தில் வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படுகின்றன. இதன் முதலீட்டுக்கான கடன் வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி தமிழகத்தில் சாலைகள் உள்ளிட்ட பலவற்றில் பல ஆய்வுகளை மேற்கொண்டு வந்தது. இறுதியாக கடந்த ஏப்ரல் மாதம் ரூ.3,548.97 கோடி கடன் அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி முடிவு செய்தது. தற்போது இதற்கான ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையொப்பமானது.

## டெல்டா விவசாயிகளுக்கு ரூ.61 கோடியில் குறுவை தொகுப்புத் திட்டம்

- டெல்டா விவசாயிகளுக்காக ரூ.61 கோடியில் குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- குறுவை நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணை கடந்த 12–ஆம் தேதி திறக்கப்பட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களில் வழக்கமாக 3.2 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். நடப்புக் குறுவை பருவத்தில் 3.5 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## கரோனா காலத்தில் விலங்குகள் நலனை கண்காணிக்க குழு

- கரோனா காலத்தில் வன விலங்குகளின் நலன்களைக் கண்காணிக்க மாநில அளவில் குழு அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கான உத்தரவை சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் சுப்ரியாசாகு வெளியிட்டுள்ளார்.
- தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சிறப்புச் செயலாளர் அல்லது இணைச் செயலாளர் அல்லது துணைச் செயலாளர் ஆகியோரில் ஒருவர், முன்னாள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஆர்.சுந்தரராஜு, வனவிலங்கு பாதுகாவலர் எஸ்.தியோடர் பாஸ்கரன் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

## 4 சதவீத அரசுப் பள்ளி மாணவர்களே தொழிற்படிப்புகளில் சேருகின்றனர்

- அந்த மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது குறித்து ஆய்வு செய்து ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி முருகேசன் தெரிவித்துள்ளார்.
- மருத்துவப் படிப்பைத் தவிர சட்டம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம் உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கையில் உள்ள பாதிப்புகளைக் கண்டறிந்து அறிக்கை அளிக்க தமழ்நாடு அரசு குழு அமைத்துள்ளது. அரசுப்பள்ளி மாணவர்கள் தொழிற்படிப்புகளில் 2 முதல் 4 விழுக்காடு வரை சேருகின்றனர். இதனை மாற்றி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தொழில் படிப்புகளில் தனி இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை ஆளுநர் உரையில் அறிவிப்பு

- வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அறிவித்துள்ளார். மேலும், லோக் ஆயுக்த அமைப்புக்கு புத்துயிர் ஊட்டப்படும் எனவும், பொருளாதார ரீதியாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்க முதல்வருக்கென தனி குழு உருவாக்கப்படும் எனவும் ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார்.
- மாநிலத்தின் உயிர் நாடிகளில் ஒன்றாக விளங்கிடும் சிறு மற்றும் குறுந்தொழில்களை மீட்டெடுக்க சிறப்புக் குழு ஏற்படுத்தப்படும் என ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அறிவிப்பு செய்தார். 16–ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடர், சென்னை கலைவாணர் அரங்கத்தின் மூன்றாவது தளத்தில் தொடங்கியது. ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றி, கூட்டத்தொடரை தொடக்கி வைத்தார்.
- தமிழகத்தில் அரசுத் துறை நிர்வாக கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையிலான பல்வேறு புதிய அறிவிப்புகளை ஆளுநர் தனது உரையின் வாயிலாக வெளியிட்டார்.

**அவரது உரையின் விவரம்:**

- தூய்மையான நிர்வாகத்தை உறுதி செய்வதே அரசின் முன்னுரிமை. மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரது மீதான புகார்களை விசாரிக்க லோக் ஆயுக்த அமைப்புக்கு புத்துயிர் ஊட்டப்படும். விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டிட முயற்சி எடுக்கப்படும். இதற்கு தமிழக அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை அளிக்க முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.
- மாநிலத்தின் நிதிநிலையை மேம்படுத்தவும், உண்மை நிலையை விளக்கும் வகையிலும் ஜுலை மாதத்தில் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகள் நலன்களைப் பாதுகாக்கவும் ஆண்டுதோறும்

வேளாண்மைக்கென தனியான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை சந்தைப்படுத்த ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உழவர் சந்தைகள் தமிழகம் முழுவதும் ஏற்படுத்தப்படும்.

- வேளாண்மைக்கும், குடிநீருக்கும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வரும் நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை முறைப்படுத்த புதிய சட்டம் உருவாக்கப்படும். குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக, இலக்கு சார்ந்த திட்டம் செயல்படுத்தப்படும்.
- நிபுணர்–ஆலோசனைக் குழுக்கள்: தமிழகத்தின் முதுகெலும்பாக விளங்கி வரும் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான நிபுணர் குழு உருவாக்கப்படும். தொழில் பெருவழிகளில் தொழில் வளர்ச்சி குறைவாக உள்ள வட மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.
- சென்னையில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், பேரிடர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளவும் சென்னைப் பெருநகர வெள்ள நீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும். சென்னை மாநகரின் கட்டமைப்பை நவீன சர்வதேசத் தரத்துக்கு உயர்த்த சிங்காரச் சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்படும். அனைத்து முக்கிய இந்துக் கோயில்களிலும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தவும், கோயில்களின் பராமரிப்பை செம்மைப்படுத்தவும் மாநில அளவில் உயர்நிலை ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.
- கரோனா 3–ஆவது அலை: கரோனா நோய்த் தொற்றை எதிர்கொள்ள பல்வேறு தரப்பினரிடமும் இருந்து நிதிகள் கோரப்பட்டன. அந்த வகையில், இதுவரை முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.335.01 கோடி நிதி குவிந்துள்ளது. அதில், 141.10 கோடியானது உயிர் காக்கும் மருந்துகளை கொள்முதல் செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளது.

### உழவர் சந்தைகளுக்கு புத்துயிரூட்டப்படும்

- முன்னாள் முதல்வர் கருணாநிதியால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் அத்தகைய உழவர் சந்தைகள் அமைக்கப்படும்.

### முதல்வருக்கான ஆலோசனைக் குழுவில் 5 பொருளதார நிபுணர்கள்

- தமிழக அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கிட முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவித்தார்.
- ஆளுநர் உரையில் கூறியிருப்பது: கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தின் பொருளாதார வளரச்சி மந்தநிலையில் உள்ளது. இந்தப் போக்கை மாற்றியமைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். மனித வளத்தின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்தி விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முற்படுவோம்.
- இந்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கானப் பாதையை வகுத்து தமிழக அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கிட முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.
- குழுவில் யார் யார்?: அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக்கழகப் பேராசிரியரும், நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன், மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலேசகர் டாக்டர் அரவிந்த் சுப்பிரமணியன், பொருளாதார நிபுணர் பேராசிரியர் ஜீன் ட்ரீஸ், மத்திய அரசின் முன்னாள் நிதிச் செயலாளர் டாக்டர் எஸ்.நாராயண் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

## 'சிங்காரச் சென்னை 2.0" திட்டம் செயல்படுத்தப்படும்

- சென்னையைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்திடும் வகையில் "சிங்காரச் சென்னை 2.0" திட்டம் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் கூறினார்.
- ஆளுநர் உரையில் கூறியிருப்பதாவது: சென்னைக்கு அருகில் இருந்த 42 உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து, மாநகர எல்லைகள் விரிவாக்கப்பட்டன.
- வெள்ளநீர் மேலாண்மைக் குழு: வெள்ளக் கட்டுப்பாடு முறைகளை வகுக்கவும், வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், வெள்ளநீர் வடிகால்களை வடிவமைக்கவும், சுற்றுச்சூழல், நகரத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் வல்லுநர்களை உள்ளடக்கிய சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும்.
- மதுரவாயல் சாலை பணி: கடந்த ஆண்டுகளில் காரணம் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்ட

மதுரவாயல் முதல் சென்னை துறைமுகம் வரையிலான உயர்நிலை சாலைத் திட்டப் பணிகளை விரைவுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## அரசு வேலைவாய்ப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை

- அரசு வேலைவாய்ப்புகளில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஆளுநர் கூறினார்.
- ஆளுநர் உரையில் கூறியிருப்பது: "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப, உயிர்ப்புள்ள தமிழ்ச் சமூகத்தில் இணைந்திட இந்தியாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் மக்களை அரசு வரவேற்கும்.
- அதே நேரம், தமிழக மக்களுக்கு குறிப்பாக தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கும் அரசுப் பதவிகளுக்கான வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்யும்.
- இடஒதுக்கீட்டில் பொருளாதார நிலை: மத்திய அரசின் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில், சமூக பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்தவர்களை நிர்ணயிப்பதற்கான வருமான அளவுகோல்களை நீக்கவும், அவை நீக்கப்படும் வரையில் தற்பேதைய வருமான வரம்பினை ரூ.9 லட்சத்திலிருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தவும் மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.
- வெவ்வேறு சமூகங்களின் பின்தங்கிய நிலையை நிர்ணயிப்பதில் மாநில அரசின் அதிகாரம் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை தமிழக அரசு உறுதி செய்யும்.
- 69 சதவீத இடஒதுக்கீட்டுக்குப் பாதுகாப்பு: 100 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் தமிழகத்தின் இடஒதுக்கீட்டுக் கொள்கை, காலத்தை வென்று சமூகநீதியை உறுதி செய்துள்ளது. அந்த வகையில் தற்போது தமிழகத்தில் வழங்கப்படும் 69 சதவீதம் இடஒதுக்கீடு தொடர்ந்து பாதுகாக்கப்படும்.

## தமிழகத்தின் 9 மாவட்டங்களில் செப்டம்பர் 15க்குள் உள்ளாட்சித் தேர்தல்: உச்சநீதிமன்றம் உத்தரவு

- தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாத 9 மாவட்டங்களில் வரும் செப்டம்பர் மாதம் 15–ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்குமாறு தமிழ்நாடு தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய 9 மாவட்டங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் அறிவிப்பு வெளியிடுவது, தேர்தலை நடத்துவது, முடிவுகளை அறிவிப்பது என அனைத்தும் செப்டம்பர் 15–ஆம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடிக்க 4 மாத அவகாசம் அளித்து உச்சநீதிமன்றம் கடந்த 2019–ஆம் ஆண்டு டிசம்பர் 11–ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது. ஆனால், தமிழக தேர்தல் ஆணையம் 18 மாதங்கள் ஆகியும் தேர்தலை நடத்தாதது ஏன் என்றும் நீதிபதிகள் கெள்வி எழுப்பினார்.
- தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் 2018–19–ஆம் ஆண்டே முடிந்துவிட்டது.

## தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி எண்

- 9498794987 க்கு பதிலாக "1912" மின்னக எண் வெளியிடப்பட்டுள்ளது.

## கலிங்கப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு தரச்சான்று

- கலிங்கப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு தேசிய தரச்சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

## 4 லட்சம் கோடியைக் கடந்த கடன் சுமை

- தமிழ்நாடு அரசின் கடன் சுமை கடந்த 2019–ஆம் ஆண்டு மார்ச்சுடன் முடிந்த காலத்திலேயே 4 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இந்தத் தகவல் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து தணிக்கைத் துறை தலைவர்

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ்நாடு அசைின் மொத்த கடன் சுமை 2018–ஆம் ஆண்டு மார்ச்சுடன் முடிந்த காலத்தில் ரூ.3 லட்சத்து 59 ஆயிரத்து 426.63 கோடியாக இருந்தது. இந்த கடன் அளவு 2019–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூ.4 லட்சத்து 2 ஆயிரத்து 599.33 கோடியாக இருந்தது. அதாவது, ஒரே நிதியாண்டில் ரூ.43 ஆயிரத்து 172.07 கோடி கூடுதலாக கடன் பெறப்பட்டுள்ளது.

- இதில், பல்வேறு அம்சங்கள் மூலமாக உள்நாட்டிலேயே பெறப்பட்ட கடன்கள் 2018–ஆம் ஆண்டில் ரூ.2 லட்சத்து 72 ஆயிரத்து லட்சத்து 350.06 கோடியாகவும் இருந்தது என்று தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும் அதிகரிக்கும் கடந்த 2019–ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ.4 லட்சம் கோடியாக இருந்த கடன் சுமை, கரோனா போன்ற காரணங்களால் நிகழ் நிதியாண்டில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.